# அணியும் மணியும்

பேராசிரியர்
டாக்டர் ரா. சீனிவாசன்
எம்.ஏ., எம்.லிட்., பி.எச்.டி.

அணியகம்
சென்னை - 600 030.

# அணியும் மணியும்

பேராசிரியர்

டாக்டர் ரா. சீனிவாசன்

எம்.ஏ., எம்.லிட்., பி.எச்.டி.

அணியகம்

சென்னை - 600 030.

முதற் பதிப்பு : 1960
இரண்டாம் பதிப்பு : 1961
மூன்றாம் பதிப்பு : 1961
நான்காம் பதிப்பு : 1975
ஐந்தாம் பதிப்பு : 1977
ஆறாம் பதிப்பு : 1995

உரிமை ஆசிரியர்க்கு

**விலை ரூ. 30-00**

வெளியீடு :
**அணியகம்**
5, செல்லம்மாள் தெரு
சென்னை - 600 030.

Laser typesetting at :
Sri Maruthy Laser Printers, 174 Peters Road, Madras - 600 014.

அச்சாக்கம் :
ரோஹிணி ஆப்செட் பிரிண்டர்ஸ்.
சென்னை - 600 014

# ஆசிரியரின் பிற நூல்கள்

## உரைநடை நூல்கள்

கம்பராமாயணம்

மாபாரதம்

சீவக சிந்தாமணி

திருக்குறள் செய்திகள்

நாலடியார் செய்திகள்

திவ்விய பிரபந்த சாரம்

திருவிளையாடற் புராணம்

திருப்பாவை

## நாவல்கள்

குப்பைமேடு

படித்தவள்

# முகவுரை

தமிழ் இலக்கியம் பழமைக்குப் பழமையாய்ப் புதுமைக்குப் புதுமையும் வாய்ந்தது; தொட்டனைத் தூறும் மணற்கேணி போலக் கற்குந்தோறும் புதிய புதிய கருத்தும் அழகும் காட்டிக் கற்போர் உள்ளத்தை அள்ளும் பெருமை சான்றது.

அன்பர் திரு. ரா. சீனிவாசன் அவர்கள் எழுதியுள்ள ''அணியும் மணியும்'' என்னும் இந்நூல் தமிழ் இலக்கியத்தின் பரப்பையும் சிறப்பையும் இனிது எடுத்துக் காட்டுகின்றது.

சங்க காலம் முதல் பாரதியார் காலம் வரையுள்ள பெரும் புலவர்களின் இலக்கியப் படைப்புக்களிற் கண்ட நயங்களைத் தெள்ளத் தெளிய விளக்குகின்றார் இந்நூலாசிரியர். கலைபயில் தெளிவும், கட்டுரை வன்மையும் வாய்ந்த தமிழ்ப் பேராசிரியர் இயற்றிய இந்நூல் தமிழ் பயிலும் மாணவர்க்கு ஓர் இலக்கிய நல் விருந்தாகும் என்று நம்புகின்றேன்.

**ரா.பி. சேதுப்பிள்ளை**

# நூல் முகம்

இந்நூலில் 11 கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. தமிழ் இலக்கியத்தின் நயங்களையும், கருத்துகளையும், செய்திகளையும் சுருக்கித் தருகிறது. இலக்கியம் சிறப்படைவதற்கு அது உணர்த்தும் செய்திகள, அணிநயங்கள், உணர்வுகள், கற்பனைகள் காரணம் ஆகின்றன.

சங்க இலக்கியம் முதல் திரு.வி.க. வரை அவ்வவ் இலக்கியங்களின் தனிச் சிறப்புகளை ஒவ்வொரு கட்டுரையும் காட்டுகின்றன. ஒரு நூலில் பல சிறப்புகள் இருந்தாலும் அதற்கே உரிய அழகு நயம் எது என்று காட்டுவதில் இந்நூல் தனித் தன்மை பெற்றிருக்கிறது. எழிலும் எளிமையும் கூடிய செந்தமிழ் நடையில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

**ரா. சீனிவாசன்**

# உள்ளுறை


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | சில சொற்கள் | 7 |
| 2. | நிறைவும் குறைவும் | 18 |
| 3. | இரண்டு காட்சிகள் | 31 |
| 4. | அணியும் மணியும் | 43 |
| 5. | அன்புடை நெஞ்சம் | 54 |
| 6. | உறவும் துறவும் | 67 |
| 7. | கவியும் கவிஞனும் | 79 |
| 8. | நன்மையும் உண்மையும் | 91 |
| 9. | அவல ஓவியங்கள் | 104 |
| 10. | நாடும் மொழியும் | 118 |
| 11. | திரு.வி.க.வின் நடையும் சொல்லாட்சியும் | 127 |

# 1. சில சொற்கள்

'சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே' என்று பாரதியார் தமிழ்ச் சொல்லின் உயர்வைப் பாராட்டினார். தமிழைச் சொல்லுவதில் இன்பமும், அதைக் கேட்பதில் இனிமையும், அச் சொல்லைச் சொல்லும் திறனில் கலையமைப்பும் உண்டாகின்றன என்றால், தமிழ்ச் சொல்லின் பெருமையைச் சொல்லி முடியாது.

சொல்லத் தெரிந்தவர்கள் எதைச் சொன்னாலும் அதில் இன்பத்தைக் காண முடிகிறது. அச் சொல்லுக்கு ஆற்றலும், ஆற்றலால் செயலும் பிறக்கின்றன. உள்ளத்தில் ஊற்றெடுக்கும் கவிப்பெருக்கும், கற்பனையில் வடித்தெடுக்கும் கதையமைப்பும் சொல்லுவோனின் சொற்றிறனால் சிறப்புப் பெறுகின்றன. கம்பர், இளங்கோ, வள்ளுவர் போன்ற ஆன்ற புலவர்களின் ஆழ்ந்த கவிதைகளும் சொல்லும் திறனால் வெல்லும் வாழ்வைப்பெற்று, அழியாப்பெருஞ் செல்வமாக நிலைபெற்றிருக்கின்றன. 'பொழுது போக்குக்கு' என ஒழிந்த நேரங்களில் படித்து இன்புறும் பல்வகைத் தொடர்கதைகளும், நடித்து இன்புறும் நாடக உரையாடல்களும் சொல்லும் திறனாலேயே உள்ளத்தைக் கவர்கின்றன. தேர்ந்த சொல்லால் ஓர்ந்த பொருள்கள் இழுமென் ஓசையும், விழுமிய கருத்துங் கொண்டு விளங்கும் பொழுது, அவை கற்போரின் உள்ளத்தை ஈர்க்கும் கவின்மிகு இலக்கியங்கள் ஆகின்றன.

வள்ளுவர் வாய்மொழியும், சொல்லும் திறன்படச் சொல்லப்படவில்லை என்றால், அஃது அறத்தை வற்புறுத்தும்

நீதிநெறி நூலாகவோ, பொருளைப் பொருட்படுத்தும் பொருளியல் நூலாகவோ, இன்பத்தை வகைப்படுத்தும் இன்பவியல் நூலாகவோ, தருக்க வாதங்கள் மிக்க தத்துவ நூலாகவோ அமைந்திருக்குமேயன்றி, உலகம் போற்றும் உயர்ந்த இலக்கியங்களுள் ஒன்றாக விளங்கியிருக்காது.

வள்ளுவர் வாய்ச்சொல்லின் திறத்தைத் திறம்பட அறிவதால், அச்சொல்லின் நலமும், அச் சொல்நலத்தால் சிறப்புறும் பாநலமும் அறிய முடிகின்றன. திறன் மிக்க சொற்களுக்கு ஆற்றலும், அவ்வாற்றலால் அறச்செயலும், அறச்செயலால் பொருளும் மிகும் என்பது அவர்தம் கருத்தாகும்.

**திறனறிந்து சொல்லுக சொல்லை; அறனும்**
**பொருளும் அதனினூஉங் கில்** - 644

என்பது அவர் குறளாம். திறனறிந்து எதையுஞ்சொல்ல வேண்டும் என்பதை வற்புறுத்தும் அவர், திறம் தெரிந்து சொல்லைப் பயன்படுத்தித் தம் பாநலத்தை மிகுவித்திருப்பதற்கு, அவர்தம் திருக்குறட்பாக்கள் தக்க சான்றாகும்.

திறனறிந்து சொல்லப்பெறும் சொற்களும், அவற்றால் உணர்த்தப்பெறும் கருத்துக்களும் கேட்டாரைப் பிணித்துக் கேளாரையும் ஈர்க்கும் இயல்பைப் பெற்று விளங்கும் இயல்பினவாம்.

**கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்க் கேளாரும்**
**வேட்ப மொழிவதாஞ் சொல்** - 643

என்பது அவர் தரும் விளக்கமாகும். பிறர் விரும்புமாறு, அவர் உள்ளத்தைக் கவரக்கூடிய சொற்களால், சொல்லுவனவற்றை ஒழுங்குபடுத்திச் சொல்ல வேண்டும் என்பது அவர்தம் அறிவுரையாகும்.

**வேட்பத்தாஞ் சொல்லிப் பிறர்சொற் பயன்கோடல்**
**மாட்சியின் மாசற்றார் கோள்** - 646

எனத் தாம் சொல்லும்போது எவ்வாறு சொல்ல வேண்டும் என்பதையும், பிறர் சொல்வதில் உள்ள பொருளை எவ்வாறு கொள்ளவேண்டும் என்பதையும் கூறுகின்றார்.

மேலும், எடுத்தாளுஞ் சொற்களில் தக்கசொல்லை எடுத்தாளுவதோடு, மிக்க சொல்லையும் அமைப்பது சிறப்புதரும் என்பது அவர் கருத்துரையாகும். வெல்லுஞ் சொல் அதனினும் வேறு இல்லாத வகையில், அச் சொல் அமைய வேண்டும் என்பதை,

**சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொல் அச்சொல்லை**
**வெல்லுஞ்சொல் இன்மை யறிந்து** - 645

என்ற குறட்பாவால் நன்கு விளக்குகின்றார்.

இவ்வாறு நிரந்து இனிமையாகச் சொல்லுதல் வல்லாரைப் பெறின், அவர் சொல்லை உலகம் கேட்டுச் செயலாற்ற முன்வரும் என்பது அவர்தம் நம்பிக்கையாகும். வள்ளுவர் குறள் நிரந்து இனிது அமைந்திருப்பதால்தான் அதில் உள்ள கருத்துக்கள் உள்ளத்தில் நன்கு பதிந்து, உலகினரை நன்னெறிக்கண் செயல்படுத்துகின்றன என்று கூறலாம்.

**விரைந்து தொழில்கேட்கும் ஞாலம் நிரந்தினிது**
**சொல்லுதல் வல்லார்ப் பெறின்** - 648

என்பது அவர்தம் நூலுக்கே தரும் சிறந்த விளக்கவுரை எனக் கூறலாம். இக் குறட்பாக்கள் சொல்லின் திறத்தைப் பொதுப்படையாக விளக்குவன எனினும், அவை அவர்தம் திருக்குறளின் சொல் திறத்தையே விளக்குவன எனக் கூறலாம்.

குறைந்த சொற்களால் நிறைந்த பயன் விளைவிப்பதே சிறந்த மொழிநடையின் சிறப்பாகும். நீண்ட சொற்றொடர் களுக்கு இருக்கும் ஆற்றலைவிடப் பழகிப் பண்பட்ட சிறிய சொற்றொடர்களுக்கே ஆற்றல் மிகுதியாகும் என்பதை எழுத்து மொழிக்கும் பேச்சு மொழிக்கும் உள்ள வேறுபாடு உணர்த்தும். பேசும் பொழுது சுருங்கிய தொடர்களால் சிறிய சொற்களைக் கொண்டு கருத்தை எளிதில் வெளிப்படுத்த இயல்கிறது. அவை உடனே செயலைத் தூண்டி ஆற்றல் மிக்கனவாக விளங்கு கின்றன. எழுத்து மொழியாகிய இலக்கியநடை நீண்ட சொற்றொடர்களைக் கொண்டு உடனே செயலலைத் தூண்டாமல் மனிதனைச் சிந்தனையில் ஆழ்த்துகிறது. நீண்ட சொற்றொடர் களுக்கு இருக்கும் ஆற்றலைவிடச் சுருங்கிய சொற்களுக்கும். அவை அமையும் தொடர்களுக்குமே ஆற்றல் மிகுதியாக உள்ளது.

வள்ளுவர் வாய்மொழியும் பேச்சு மொழியின் மரபைப் பெற்றுக் குறைந்த சீர்களைக் கொண்ட குறட்பாவால் விளங்கி, ஆற்றல் மிக்கவையாக விளங்குகின்றது; ஏழு சீர்களைக் கொண்டு, இரண்டினும் குறைந்த அடிகளால் இயங்கிச் சுருங்கிய சொற்றொடர்களால் நிறைந்த கருத்தை உணர்த்திச் சிறந்த நடையாக அமைந்துள்ளது.

குறைந்த அடிகளால் விளங்கும் காரணத்தாலேயே இந்த நூலுக்குக் 'குறள்' எனப் பெயர் அமைந்து, சிறப்பு அடையாகிய 'திரு' என்பது சேர்ந்து 'திருக்குறள்' என்ற பெயர் நிலவியது என்பர். சிறு சொற்களால் ஆகிய சீர்களால் இயங்குவதும் இதன் சிறப்பியல்பு எனக் கூறத்தகும்.

**மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்**
**ஆகுல நீர பிற** - 34

என்ற குறளில், மனம், மாசு, நீர, அறன், பிற போன்ற சிறு சொற்களே மிகுதியாக அமைந்திருக்கக் காண்கிறோம். சிறு

சொற்களை அமைத்து அரிய பெரிய கருத்துக்களை உணர்த்தும் பெற்றி இந்நூலில் யாண்டும் காணலாம்.

பாவின் அடியும், சீரும், சொல்லும், சுருங்கி அமைந்திருப்பதோடு, அவர் எடுத்தாண்டுள்ள சொற்களின் எண்ணிக்கையிலும் சுருக்கம் அமைந்திருக்கக் காண்கின்றோம். ஏழு சீர் கொண்ட திருக்குறளில், மிகச் சுருங்கிய எண்ணிக்கை கொண்ட சொற்களை மீண்டும் மீண்டும் வருமாறு அமைத்து, அவர் சொற்றிறனின் பெருமையை நிலைநாட்டிவிட்டார் என்று கூறலாம். ஒரு குறளில் மூன்றே சொற்களை எடுத்தாண்டுள்ள இடங்கள் பல உள்ளன. 'துப்பு', 'மழை', 'ஆதல்' என்ற மூன்று சொற்களைக் கொண்டே எழுசீர்களைக் கொண்ட பாவினை அமைத்து, விண்ணையும் மண்ணையும் தொடர்புபடுத்தி, மண்ணில் வாழும் உயிரையும் உயிர்க்கு உணவாகிய மழையையும் பற்றி அரிய செய்தியைத் தெரிவித்திருக்கின்றார்; அக் குறட்பாவின் பெருமைக்கு நிகர் அவர் பாக்களே எனலாம்.

**துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்**
**துப்பாய தூஉ மழை** - 12

இக் குறட்பாவில் அவர் எடுத்தாண்டுள்ள சொற்கள் 'துப்பு', 'மழை', 'ஆதல்' என்பவையேயாகும். இதைப் போலவே,

**குன்றின் அனையாரும் குன்றுவர் குன்றுவ**
**குன்றி யனைய செயின்** - 965

என்ற பாவும்,

**செல்வத்துட் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்**
**செல்வத்துள் எல்லாம் தலை** - 411

என்ற பாவும், எண்ணிக்கையில் குறைந்த சொற்களைக் கொண்டு அவை மீண்டும் வருமாறு அமைந்திருக்கின்றன. இவ்வாறு வருதல், சொற் சுருக்கம் என்ற சிறப்போடு ஒரு தனி அழகையும்,

ஓசை நயத்தையும் தருகிறது என்பதுபற்றி, அணி நூலாரும் சொற்பின்வருநிலையணி என்று பாராட்டுவர். வந்த சொல்லே மீண்டும் வருவதால், அந்த ஒலிகள் காதில் ஒலித்துக் கொண்டேயிருக்கின்றன. அதனால் அவை உணர்த்தும் கருத்துக்களும் நம் மனத்தைவிட்டு அகலாமல் நிலைபெறு கின்றன,

**யாகாவா ராயினும் நாகாக்க; காவாக்காற்**
**சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு** - 127

என்ற குறளில், 'கா', 'கா' என்ற ஒரே ஒலி மீண்டும் மீண்டும் வந்து செவியில் பட்டு, நாவைக் காத்தல் வேண்டும் என்ற நீதியை வற்புறுத்துகிறது.

பா, அடி, சீர், சொல் என்ற வகையில் சுருக்கத்தை ஆண்ட அப் பாவலர், எழுத்தினும், எழுத்தானாய அசைகளிலும் சுருக்கத்தை ஆண்டுள்ளமை அவர் குறளின் சொல் மாட்சியைக் காட்டுகிறது.

**கற்கக் கசடறக் கற்பவை கற்றபி**
**னிற்க அதற்குத் தக** - 391

என்ற குறட்பாவில் இரண்டாவது அடியில் முதற்சீரில் 'னி' என்ற ஒலியைத் தவிர வேறு மெல்லொலியே அமையவில்லை; முதலடியிலும் இரண்டாமடியிலும் வகர ஒலியைத் தவிர வேறு இடையொலியே அமையவில்லை. வல்லொலிகளையே முற்றிலும் அமைத்து, அவற்றிலும் ககரமும் றகரமும் மீண்டும் மீண்டும் ஒலிக்குமாறு செய்து, அவற்றை இயக்க அகர உயிரையே பலமுறையும் பயன்படுத்தி இகரத்தை இரண்டிடத்தில் மட்டும் துணைப்படுத்தி, ஒலியில் செறிவையும் ஒழுங்கையும் அமைத்து, ஒலியமைப்பில் சுருக்கத்தைக் கண்டது அவர் ஒலிகளிலும் சுருக்கத்தைக் கையாளும் இயல்பைப் புலப்படுத்துகிறது. ஒரே வகையான ஒலிகள் காதில் படுவதால்

சொல்லின்பம் உண்டாதலோடு கருத்தும் ஆழமாகப் பதியும் என்ற கருத்தால், அவர் இவ்வாறு ஒலியமைப்பிலும் சுருக்கத்தை எடுத்தாண்டுள்ளார் எனலாம்.

இதைப் போலவே, 'குழலினிது யாழினிது என்ப தம் மக்கள் மழலைச்சொல் கேளா தவர்' என்ற குறளில் ழகர எழுத்தையும், குழல் யாழ் மழலை போன்ற சொற்களையும் அமைத்துக் குழந்தையின் மழலைச் சொல்லை நம் காதில் ஒலிக்கச் செய்கின்றார். மழலைச் சொல்லின் இன்பத்தை அக்குறள் செவிக்கு ஊட்டிவிடுகின்றது என்று கூறலாம்.

இவ்வாறு பிறர் வேட்கும்படி தேர்ந்த சொல்லால் நிரந்து இனிது சொல்லும் திறம் அவர் சொற்களுக்கு இருப்பதற்கு அடிப்படைக் காரணம் சுருங்கச் சொல்லலாகும். சில சொற்களால் எதையுஞ் சொல்ல முற்படுவார்கள் என்றும், அவ்வாறு பல சொற்களை எடுத்தாள்வது சொற்றிறனாகாது என்றும் வள்ளுவரே,

**பலசொல்லக் காமுறுவர் மன்றமா சற்ற**
**சிலசொல்லல் தேற்றா தவர்** - 649

என்ற குறளில் விளக்குகின்றார். அந்தச் சில சொற்களும் மாசற்ற சொற்களாக அமையவேண்டும் என்று வற்புறுத்துகின்றார். மாசற்ற சில சொற்களால் சொல்லுவதுதான் சொற்றிறன் என்பதை வற்புறுத்தப் ''பல சொல்லக் காமுறுவர் மன்ற'' என்று, பிறர் குறையை எடுத்துக் காட்டுகின்றார்.

எழுத்தானும், சொல்லானும், சீரானும், அடியானும் சுருக்கத்தைப் போற்றி, அதனால் பொருள் நுட்பத்தைத் திட்பமாக உணர்த்தும் திறனால்தான் இந்நூலுக்குக் குறள் எனப் பெயர் வழங்கலுற்றது எனக் கூறலாம். பொருள் கருதி வைக்கப்பட்ட முப்பால் என்ற பெயர் வழக்கிழந்து, சொல்திறன்

கருதிச் சிறப்பிக்கப்பட்ட திருக்குறள் என்ற பெயரே நிலைத்து விட்டது.

சொற்களைச் சொல்லும் பொழுது மக்கள் பேச்சு மொழியின் போக்கை ஒட்டிச் சுருங்கக்கூறி விளங்க வைப்பது போலவே, மக்கள் பேசும் மரபை ஒட்டியே உவமைகளும் பிற அணிகளும் அமைந்துள்ளன. 'அளவுக்கு மீறினால் அமுதமும் நஞ்சு' என்ற பேச்சு மரபை ஒட்டியே,

**பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்**
**சால மிகுத்துப் பெயின** - 475

என்ற குறள் அமைந்திருக்கிறது.

**பரியது கூர்ங்கோட்ட தாயினும் யானை**
**வெரூஉம் புலிதாக் குறின்** - 599

என்பதும் இதைப் போன்ற அமைப்பை உடையதாகும். பொருளை விடுத்து உவமையை மட்டும் அமைப்பது இவற்றில் காணும் சிறப்பியல்பாகும். பொருளைக் கூறாது விடுவதால் சொற் சுருங்கியிருத்தல் இவ்வமைப்பின் தனியழகாகும். இவ்வாறு, உவமையை மட்டும் சொல்லிப் பொருளோடு தொடர்பு படுத்தாமல் விடுவதால் மற்றொரு சிறந்த நன்மையும் உண்டாகிறது. ஒரு குறிப்பிட்ட பொருளோடு மட்டும் உவமை தொடர்புபெறாமல் யாண்டும் பொருந்தத் தக்க வகையில் அமைகிறது. மேலே குறிப்பிட்ட குறள்களுள் முறையே எடுத்துக்கொண்ட பொருளாகிய வலியறிதல், ஊக்கமுடைமை என்பவை அரசியற்கன்றி ஏனைய சூழ்நிலைக்கும் பொருந்துவனவாக அமைகின்றன. இதனைப் பிறிதுமொழிதல் அணி என்று அணி நூலார் பாராட்டுவர்.

இவர் சொற்றிறனின் மற்றொரு சிறப்பியல்பு, உவமையும் பொருளும் கூறி இடையே உவம உருபு கொடாதிருத்தலாகும்.

**தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்**
**கற்றனைத் தூறும் அறிவு** - 396

**வெள்ளத் தனையது மலர்நீட்டம் மாந்தர்தம்**
**உள்ளத் தனைய துயர்வு** - 595

என்ற குறட்பாக்களில், அதுபோல் என்ற உவம உருபு கொடாமல் கூறியிருப்பது அவர் சொற்சுருக்கத் திறனையே காட்டுகிறது. இதனை அணி நூலார் எடுத்துக்காட்டு உவமை அணி என்று சிறப்பிப்பர்.

மற்றொரு வகையாகவும் சுருங்கச் சொல்லும் திறன் இவர்பால் காணப்படுகிறது. உவமையைவிட உருவகங்களாகக் கூறுவதில் சுருங்கச் சொல்லல் என்ற அழகு அமைகிறது. அவ்வாறு உருவகித்துக் கூறுங்காலும் முழுமையும் உருவகமாகக் கூறாமல் ஓரளவு உருவகமாகக் கூறிவிட்டு எஞ்சியவற்றை விடுவதில் சொற்சுருக்கம் காண்கின்றார்.

**உழுவார் உலகத்தார்க் காணியஃ தாற்றா**
**தெழுவாரை யெல்லாம் பொறுத்து** - 1032

என்ற குறளில், உழுவார் தேரின் அச்சாணி போன்றவர்கள் என்று உருவகித்தாரேயன்றி ஏனையவற்றையெல்லாம் உருவகிக்கவில்லை. இஃது அவர் சொற்றிறனின் சிறப்பாகும். இதனை அவயவ உருவகம் என்று அணி நூலார் கூறுவர்.

**இரவென்னும் ஏமாப்பில் தோணி கரவென்னும்**
**பார்தாக்கப் பக்கு விடும்** - 1068

என்ற குறளும், இவ்வாறு அமைந்ததேயாகும். 'வறுமையாகிய கடலைக் கடக்க இரவு என்னும் பாதுகாப்பற்ற தோணி கரத்தல் என்னும் வன்னிலத்தின் தாக்குமாயிற் பிளந்துபோம்' என்பது இக்குறளின் கருத்தாகும். வறுமையைக் கடலுக்கு உருவகிக்

காமல் ஏனையவற்றைத் தக்க உருவங்கள் கொண்டு விளக்கியிருப்பது அவர் சொற்றிறனின் சிறப்பியல்பாகும்.

சுருங்கச் சொல்லுதல் என்ற அணிமட்டுமன்றி, விளங்க வைத்தல் என்ற சிறப்பும் இவர் குறளுக்குள்ள தனிச் சிறப்பாகும். சொல்லைப் பயனபடுத்தும் பொழுது அக்கருத்தை விளக்க அதன் இனமான சொல்லை உடன் பயன்படுத்தும் சிறப்பு அவர் பாக்களில் மிளிர்கின்றது. கல்வி என்றால் அதனோடு இனமான கல்லாமை என்பதையும் உடன் வைப்பது அவர்தம் மரபாக விளங்குகிறது. நட்பு என்றால் உடனே அதற்கு இனமாகத் தீநட்பையும் விளக்கிக் காட்டுதல் அவர் சிறப்பாகும். பெரியாரைத் துணைக் கோடல் என்றால் அதனோடு இணையாகச் சிற்றினஞ் சேராமை என்பதையும் உடன் கூறி விளக்குகிறார்.

அதைப் போலவே தனிக் குறளிலும், ஒரு கருத்தைக் கூறினால் அதற்கு இனமான கருத்தையும் சொல்லையும் உடன் வைத்துச் சுருங்கக் கூறி விளங்க வைக்கும் இயல்பைக் காண்கிறோம்.

**இனிய வுளவாக வின்னாத கூறல்**
**கனியிருப்பக் காய்கவர்ந் தற்று** - 100

என்ற குறளில் இனிய என்பதற்கேற்ப இன்னாத என்ற சொல்லையும், கனி என்பதற்கு இனமாகக் காய் என்ற சொல்லையும் அமைத்துத் தொடர்புடன் முரணும்படக் கூறிக் கருத்தை விளங்கவைக்கக் காண்கிறோம்.

**அறத்திற்கே யன்புசார்பு என்ப அறியார்**
**மறத்திற்கும் அஃதே துணை** - 76

என்ற குறளிலும், அறமும் மறமும் ஒருங்கு அமைக்கக் காண்கிறோம்.

**தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்**
**கொள்வர் பயன்தெரி வார்** - 104

என்பதில், தினையையும் பனையையும் ஒரே இடத்தில் காட்டி அமைக்கின்றார்.

இவ்வாறு சுருங்கச்சொல்லி விளங்கவைத்தல் என்ற பண்பு அடிப்படையாக அமைந்திருப்பதால்தான் திருக்குறள் சொற்றிறனில் மிக்கது என்று கூறலாம். ஒலியிலும், எடுத்தாளும் சொல்லிலும், இசைந்து அசைத்துச் சீராக அமைக்கும் சீரிலும், சீர்பெற்று நடக்கும் அடிகளிலும், அழகுபட அமைக்கும் அணியிலும் சுருக்கத்தை ஆண்டு, பொருள் நிறைவை உணர்த்தும் பெருமை திருக்குறள் ஒன்றிற்கே உண்டு என்று கூறலாம். 'சில சொல்லல்' என்ற அழகு அவர் சொற்றிறன் என்பதும், அதுவே அவர் கூறும் பொருட்டிறனை இலக்கிய வளமுடையதாகச் செய்கிறது என்பதும் தெளிவாகின்றன.

# 2. நிறைவும் குறைவும்

**உள்ள நிறைவிலோர் கள்ளம் புகுந்திடில்**
**உள்ள நிறைவாமோ?**

என்று, கவிபாரதி தம் கவிதையில் ஒரு கேள்வியை எழுப்பி விடுகின்றார். உள்ளத் தூய்மை என்பதும், உயர்ந்த கொள்கைகளில் உறுதிப்பாடு என்பதும் தக்க சூழ்நிலை வரும் பொழுதுதான் வெளிப்படும். அதுவரையிலும் மனத்தின் நிறைவாகக் கருதப்படும் உயர்ந்த பண்புகளெல்லாம் நிலையானவை என்று கூறிவிட முடியாது. இந்த மனிதவியல்பை எடுத்துக் காட்டுவதற்கென்றே கம்பனின் படைப்பில் கையேயி தோன்றினாள் என்று கூறலாம்.

சிறந்த புலவன், தான் இயற்றும் காவியத்தில், மக்களின் பல்வேறு பண்பியல்புகளையும், மனமாறுபாடுகளையும் காட்டுவதற்கென்றே மாந்தர்களைப் படைத்துக் காட்டுகிறான். அவன் படைக்கும் மாந்தர்களின் இயல்பு உலகத்து மக்களின் மனவியல்போடு ஒத்து விளங்குவதால்தான் அவை என்றும் நின்று நிலைபெறுகின்றன. அதனால், புலவன் படைக்கும் மாந்தர்கள் எல்லாம் வெறுங்கற்பனை என்று கூறிவிட முடியாது. வாழ்க்கையோடு தொடர்புடைய கற்பனைதான் நிலைத்த வாழ்வைப் பெறும். அத்தகைய வாழ்வோடு தொடர்புடைய மனவியல்பைக் காட்டும் கற்பனைப் படைப்பே கைகேயி என்று கூறலாம்.

அழகின் உருவமாகவும், பண்பின் புகலிடமாகவும் அன்பின் இருப்பிடமாகவும் விளங்கிய கைகேயி, குறைவற்ற உள்ளத்தோடுதான் வாழ்ந்து வந்தாள் என்பதை முதலில் கம்பர் காட்டுகின்றார். இராமனின் நல்வாழ்வு மந்தரையின் உள்ளத்தில் கனலை எழுப்பிவிடுகிறது. அவள் நெஞ்சு துடித்து வெகுளி கொண்டு கண்கள் சிவக்கிறாள். அவள் உள்ளத்தில் எழுந்த அனலை வெளியேயும் மூட்டி விடுவது போலக் கைகேயியின் செவியில் நஞ்சனைய சூழ்ச்சியை மெல்லப் புகுத்துகிறாள். அவள் கைகேயியின் மனத்தை மாற்றுவதற்கு முன்னால் அவள் உள்ளம் எவ்வளவு நிறைவோடு இருந்தது என்பதை அவளை முதன் முதலில் அறிமுகப்படுத்தும் சித்திரத்தில் தீட்டிக் காட்டுகின்றார். 'கடைக்கண் அளிபொழியப் பொங்கு அணைமேற் கிடந்தாள்' என்று அறிமுகப் படுத்துகிறார். தூங்கும் போதும் அவள் துயின்ற கண்களில் அளி பொழிகிறது என்று எடுத்துக் காட்டுகிறார். கொண்ட கொழுநன் மீதும், வளர்த்த மக்கள் மீதும் அளவு கடந்த அன்போடு விளங்கினாள் என்பதைக் 'கடைக்கண் அளிபொழிய உறங்கினாள் என்று கூறி வெளிப்படுத்துகின்றார்.

கணவனிடத்தில் மிக்க மதிப்பும், கற்பும் கொண்ட பொற்பினாள் என்பதை, அவர், 'தெய்வக் கற்பினாள்' என்ற தொடரால் குறிப்பிடுகின்றார். அதனால், அவள் இயல்பாக மக்களிடத்தில் அன்புக்குறைவோ கணவனிடத்தில் மதிப்புக் குறைவோ கொண்டவள் அல்லள் என்பதைக் காட்டவே, அவள் அளியும், கற்பின் பொற்பும் சிறப்பித்துக் கூறப்படுகின்றன. இராமன் மீது கொண்ட அன்பின் அளவினை, அவள் 'புவிக்கெலாம் வேதமே யன விராமனைப் பயந்தவெற்கு இடருண்டோ' என்று கேட்பதிலிருந்து காட்டுகிறார். அந்த நிலையில் கம்பர் அவளைப்பற்றிக் குறிப்பிடும் பொழுது 'ஆழ்ந்த பேரன்பினாள்' என்று சுட்டிக் காட்டுகின்றார்.

அவள் நிறைந்த பண்பும், அன்பின் உயர்வும், கற்பின் சிறப்பும் பெற்றவளாக இருந்தபோதும், அவளுடைய நலத்திற்கு இடையூறு உண்டானபோது, ஆழ்ந்த பேரன்பும், கணவன்பாற் கொண்ட பெருமதிப்பும் மிகவிரைவில் மாறிவிடும் இயல்பை அழகாகப் படிப்படியே காட்டிச் செல்கிறார்.

அவள் உள்ளத்தில் மெல்லக் களங்கத்தைப் புகுத்துகிறாள் கூனி.

**ஆழ்ந்தபேர் அன்பினாள் அனைய கூறலும்**
**சூழ்ந்ததீ வினைநிகர் கூனி சொல்லுவாள்**
**வீழ்ந்தது நின்னலந் திருவும் வீழ்ந்தது**
**வாழ்ந்தனள் கோசலை மதியி னாலென்றாள்**
**- அயோத்தியா கண்டம், 47**

என்று கூனி கூறுமாற்றைக் கம்பர் காட்டுகிறார். எதைச் சொன்னால் மனிதமனம் மிகவிரைவில் மாறிவிடும் என்பதை உணர்ந்த மந்தரை, 'வீழ்ந்தது நின்னலம் திருவும் வீழ்ந்தது' என்று முதலில் மனத்தில் அதிர்ச்சியை உண்டாக்குகிறாள். உலகியல்பையும், மாந்தரின் உள்ளத்தையும் நன்றாக அறிந்த மந்தரை மிக எளிய கருவியைக் கொண்டு அவள் நிறை மனத்தை மிகவிரைவில் குறையுளதாக ஆக்கிவிடுகிறாள்.

'இராமன் கோமுடி சூடுவன் நாளை வாழ்வித்து' என்று சுட்டிக்காட்டுகின்றாள். அப்பொழுதும் கைகேயியின் மனம் மாறுபடவில்லை. இராமன் வாழ்வு பெறுவதற்கு அவள் அழுக்காறோ அவலமோ கொள்ளவில்லை. அதற்கு மாறாக மனத்தில் மிக்க மகிழ்ச்சி கொள்கிறாள். 'நாயக மனையதோர் மாலையை' அவளுக்கு, அச் செய்தியைச் சொன்னதற்காகப் பரிசாக நல்குகிறாள்.

பிறர் நல்வாழ்வு கொள்வதால் அழுக்காறு கொள்பவரும் உலகில் உள்ளனர். அத்தகைய பண்பு கைகேயியினிடத்தில்

காணப்படவில்லை என்பதை நன்கு உணருகிறாள் மந்தரை. பிறர்மேல் காட்டும் அன்பு, உலகத்துக்கு நன்மை செய்யவேண்டும் என அவாவும் நல்லுள்ளம், இவையெல்லாம் தன்னலம் என்பவற்றின் முன் நில்லா என்பதை நன்குணர்ந்தவள் மந்தரை. தனக்குக்கேடு வராது என்ற நம்பிக்கையால்தான், பலர் பிறரிடம் அன்பு காட்டுவதும் பிறர்க்கு நன்மை செய்வதுமாக விளங்குகிறார்கள். தம் நலத்திற்குக் கேடு உண்டாகிறதென்றால், அந்நிலையில் அவர்தம் உயர்ந்த பண்புகளெல்லாம் உள்ளத்தை விட்டு நீங்கிவிடும் என்பதை உணர்ந்த மந்தரை, மனித மனத்தின் குறையை அறிந்து அக்குறைபாட்டைத் தூண்டிவிடுகிறாள்.

**வேதனைக் கூனிபின் வெகுண்டு நோக்கியே**
**பேதைநீ பேதின்றிப் பிறந்த சேயோடு**
**மாதுயர் படுகநான் நெடிதுன் மாற்றவள்**
**தாதியர்க் காட்செயத் தரிக்கி லேனென்றாள்**
**- அயோத்தியா காண்டம் ,153**

என்று அவள் கூறுவதாகக் கம்பர் காட்டுகின்றார். அவள் நலத்தோடு அவளை நம்பி வாழும் அவள் மகனின் வாழ்வும், தன் வாழ்வும் சாய்கின்றன என்பதை எடுத்துக் காட்டுகிறாள். எதிர்காலத்தில் கைகேயி அடையப்போகும் தாழ்வை எடுத்துக்காட்டச் சீதை அடையும் வாழ்வைச் சித்திரித்துக் காட்டுகிறாள்.

**சிவந்தவாய்ச் சீதையுங் கரிய செம்மலும்**
**நிவந்தவா சனத்தினி திருப்ப நின்மகன்**
**அவந்தனாய் வெறுநிலத் திருக்க லானபோ**
**துவந்தவா றென்னிதற் குறுதி யாதென்றாள்**
**- அயோத்தியா காண்டம், 154**

''சிவந்த வாய்ச் சீதையும் கரிய செம்மலும் சிம்மாதனத்துச் சீரோடு இருக்க, நிலைகெட்டு நலமிழந்துவெறு நிலத்தில் நின்

மகன் நின்றுகொண்டிருக்கப் போகின்றான். அவர்கள் இடும் ஏவலைத் தலைமேற்றாங்கி அடிபணிந்து கவலைக்குள் ஆழப்போகின்றான்'' என்று கூறி, இருவேறு காட்சிகளை எடுத்துக் காட்டுகின்றாள். ''எதற்காக நீ உவப்பது? வாழ்வில் நீ எதை நம்பி உறுதியோடு வாழ்கிறாய்?'' என்று கூறி, அவள் உள்ள உறுதியையும் கொள்ளை மகிழ்வையும் மெல்லத் தகர்க்கிறாள்.

கைகேயியின் வருங்கால வாழ்வில் சூழ இருக்கும் இருளைச் சூழ்வினைக் கூனி எடுத்துக் காட்டுகிறாள்: ''அரசரில்லிற் பிறந்து, அரசரில்லில் வளர்ந்து, அரசரில்லில் வாழ்க்கைப்பட்டுப் பேரரசியாக விளங்கும் நீ கரையில்லாத் துயரக்கடலில் மூழ்கப் போகின்றாய்; சொன்னாலும் நீ கேட்கவில்லை'' என்று கூறிப் பேரரசாகிய வாழ்வு ஒழியும் நிலையைக் காட்டித் தூய உள்ளத்தில் மெல்லக் களங்கத்தைப் புகுத்த முனைகிறாள்.

**அரசரிற் பிறந்துபின் னரச ரில்வளர்ந்**
**தரசரிற் புகுந்துபே ரரசி யானநீ**
**கரைசெயற் கருந்துயர்க் கடலில் வீழ்கின்றாய்**
**உரைசெயக் கேட்கிலை யுணர்தி யோவென்றாள்**

\- 160

உள்ளத்தில் தன்னலத்தை மூடியிருந்த திரையை விலக்க முற்படுகிறாள். 'உன் தன்னலம்தான் பெரிதுது' என்று சுட்டிக் காட்டுகிறாள். 'நீயும் மற்றவர்களைப் போலத் தன்னலத்துக் காகத்தான் வாழ்பவள். அதற்காக எதையுஞ்செய்யத் துணிபவள்' என்று குறிப்பாக உணர்த்துகிறாள். தன்னலம் என்ற விதைக்கு நீர் ஊற்றி வளர்க்கத் தொடங்குகிறாள். கைகேயியின் மனத்தில் தன்னலத்துக்கும், அறத்தை அடிப்படையாகக் கொண்ட மனச் சான்றுக்கும் சிறிது போராட்டம் நடக்கிறது. தன்னலம், ''ஏன் தான் தலையெடுக்கக் கூடாது?'' என்று கேட்கிறது. மனச்சான்று,

''அறம் உன்னைத் தலையெடுக்க ஒட்டாது'' என்று அறிவுறுத்துகிறது. கூனிக்குச் சொல்லும் மாற்றத்தில் அவள் உள்ளத்தில் ஏற்படும் மாற்றம் மெல்ல வெளிப்படுகிறது. நன்மையில் பழகிப்போன அவள் நெஞ்சு திடீரென்று தீமையில் இறங்க மறுக்கிறது. நன்மையழிந்து தீமை வாழ மனச்சான்று இடங்கொடுக்க மறுக்கிறது.

கூனி சொல்வன கேட்பதற்கு இனிமையாக இருக்கின்றன வேயன்றித் தன்னலத்துக்குப் பயன்பட என்றும், பயன் பட்டாலும் அவற்றைச் செயலில் காணமுடியாது என்றும் தெரிவிக்கின்றாள். மனத்துக்கு நல்லனவெனினும் செயலில் காணமுடியாது என்ற எண்ணத்தை வெளிப்படுத்துகிறாள். அதே சமயத்தில் அறம் நோக்கின் அறத்திற்கும் நல்லவையல்ல என்று கூறும்பொழுது, நன்மையில் பழக்கப்பட்ட அவள் மனச்சான்று தீமையில் செல்லத் தயங்குவதையும் குறிப்பிடுகிறாள்.

> **எனக்கு நல்லையும் அல்லைநீ என்மகன் பரதன்**
> **தனக்கு நல்லையும் அல்லையத் தருமமே நோக்கின்**
> **உனக்கு நல்லையும் அல்லைவந் தூழ்வினை தூண்ட**
> **மனக்கு நல்லன சொல்லினை மதியிலா மனத்தோய்**
>
> \- 164

என்று அவள் கூறியவை மனத்துக்கு இனியனவேயன்றி நலத்துக்கு இனியன அல்ல என்று சுட்டிக் காட்டுகின்றாள். இதை மற்றவர்கள் அறிந்தால் அவர்கள் வாழ்வு என்ன ஆகுமோ என்ற அச்சத்தால் நலன் அல்லன அவள் சொல்லுவதாகக் கருதுகிறாள். இது வரையிலும் அவளைப் பழக்கிப் புகழையும் பண்பையும் ஈந்த அறம் அவளை இவ்வாறு பேசவைக்கிறது. இறுதியில், அறமும், அதனால் வளரும் புகழும், பண்பும் தன்னலத்தின் முன்பு தலைசாய்ந்து விடுகின்றன என்பது, இனி அவள் தொடர்ந்து பேசும் பேச்சால் புலப்படுகிறது.

மனச்சான்று சிறிது மங்கிவிடுகிறது; அவள் வளர்த்து வந்த புகழையும் தன்னலத்துக்கு இழந்துவிடத் துணிகிறாள். பண்பும், நெறியும், தவமும், வீரமும் மாறுபட்டாலும் உலக வழக்கத்தை மாற்றமுடியாதே என்று நினைக்கிறது தன்னலப்பட்ட அவள் நெஞ்சம். பண்பு மாறினாலும், நெறி பிறழ்ந்தாலும், தவமும் வீரமும் நெகிழவிட்டாலும், மூத்தோர் ஆளும் வழக்கமுறையை மாற்றுதல் முடியாதே என்ற எண்ணம் அவள் உள்ளத்தில் மெல்லக் கிளைக்கிறது. மூத்தவனான இராமன் இருக்க இளையவனான பரதனுக்கு ஆட்சி எவ்வாறு கிடைக்கும் என்று அவள் உள்ளம் நினைக்கிறது. அவளைக் கண்டிப்பது போலத் தன் உள்ளத்தில் தன்னலத்தை மூடியிருந்த திரையை நாகரிகமாக விலக்கிக் காட்டுகிறாள். புகழ்மீது உள்ள ஆவலைக் காட்டுவதைப்போல் பரதனுக்கு ஆட்சி கேட்பது வரன் முறையாகுமா என்ற நாட்டுச் சட்டத்தின் அமைப்பின் சிக்கலைத் தெரிந்துகொள்ள முனைகிறாள். பரதன் ஆட்சிக்கு வருவது அரச நெறியாகுமா, அவ்வாறு வருவதற்கு அரச நீதியிடங்கொடுக்குமா என்று தெரிந்துகொள்ள விழையும் உள்ளத்தைக் கைகேயி மந்தரைக்கு நன்கு காட்டிவிடுகிறாள்.

**பிறந்தி றந்துபோய்ப் பெறுவதும் இறப்பதும் புகழேல்**
**நிறந்தி றம்பினும் நியாயமே திறம்பினும் நெறியின்**
**திறந்தி றம்பினும் செய்தவம் திறம்பினும் செயிர்தீர்**
**மறந்தி றம்பினும் வரன்முறை திறம்புதல் வழக்கோ**

**- 165**

வரன்முறை திறம்பினால் புகழுக்கு இழுக்கு நிகழாதோ என்று சுட்டிக் காட்டுபவளைப் போலத் தன்னலம் தலையெடுப்பதற்குத் தடையாக உள்ள வரன்முறை பற்றிய நெறியைச் சுட்டிக் காட்டுகின்றாள்.

நீதிக்கும் நெறிமுறைக்கும் மாறுபட்டுப் பேசுவதால் வரும் ஏதம் அவள் நினைவுக்கு வருகிறது. நாட்டின் சட்டம்

நெறியலலன பேசுவதற்கும் இடம் கொடாதே என்று கருதுகிறாள்.

"நீ அறிவற்றவள்; நீதியல்லவும் நெறிமுறை அல்லவும் நினைக்கின்றாய்; மற்றவர்கள் அறிந்தால் உன் நிலை என்ன ஆகும்" என்று உணர்த்துகிறாள். "நீ போ, உன் அற்ப நாவைத் துண்டிக்காமல் இதைப் பொறுத்துக் கொண்டேன்" என்று கடிந்து கூறுகிறாள்.

"போதி என்னெதிர் நின்று நின் புன்பொறி நாவைச் சேதியாதிது பொறுத்தனன்" என்று கடிந்து கூறுகிறாள். இங்கே, தன்னலம் ஒருபுறமும் வரன் முறை மற்றொரு புறமும் நின்று அவள் மனத்தை அலைக்கழிக்கின்றன. வரன் முறைக்கு மாறியிருந்தால் இவர்கள் பேசுவதும் தீமையை உண்டாக்குமே என்று எண்ணி அஞ்சுகிறாள். அவ்வச்சத்தால்தான் மந்தரையையும்,

....புறஞ்சிலர் அறியின்
நீதி யல்லவும் நெறிமுறை யல்லவும் நினைந்தாய்
ஆதி ஆதலின் அறிவிலி யடங்குதி - 166

என்று கடிகிறாள். நீதியல்லவும், நெறிமுறையல்லவும் நினைத்ததே பெருங்குற்றம். அக் குற்றத்திற்கு ஏற்படும் ஒறுத்தலுக்கு ஆளாகவேண்டும் என்று சொல்லி அவளை அடங்குமாறு உணர்த்துமுகத்தான் தன் ஆவலை அடக்கிவைக்க முற்படுகிறாள்.

மந்தரை அப்பொழுதும் அவளைவிட்டு அகலாமல், மேலும் வரன்முறை உண்டு என்று எடுத்துக்காட்டி, அவள உலகத்துக்கு அஞ்சும் அச்சத்தைப் போக்கி, மனச் சான்றை மங்கவைத்துத் தன்னலத்தைத் தழைக்க வைக்கிறாள். கைகேயியின் மனச்சான்றை மங்கவைக்கத் தக்க காரணம் சொல்லிவிட்டால், அவள் தன்வழிப் படுவாள் என்பதை நன்றாக

உணர்ந்த மந்தரை, அவளுக்குத் தக்க அமைதி எடுத்துரைக்க முற்படுகிறாள். எடுத்துச் சொல்வதில் தக்க நியாயம் இருக்கிறதா என்பதைப் பற்றி அவள் கவலை கொள்வதாகத் தெரியவில்லை. சொல்லுவதைப் பொருந்துமாறு சொல்லி எப்படியாவது நியாயம் உண்டு என்று எடுத்துக் காட்டுவதே அவள் நோக்கமாக அமைகிறது. எவ்வளவு சொன்னால் அவள் மனம் மாறுமோ அவ்வளவும் சொல்லி அவள் மனத்தை அமைதியுறச் செய்வதோடு, அவள் தன்னலத்தைக் கொழுந்துவிட்டு எரியுமாறும் செய்துவிடுகிறாள்.

''மூத்தவனுக்குத்தான் அரசு உரியது என்றால் மன்னன் தசரதன் இருக்கும் பொழுது இளையவனான இராமன் ஆட்சி பெறுவதில் என்ன வரன்முறை இருக்கிறது? என்ன ஒழுங்குமுறை இருக்கிறது?'' என்று கேட்கிறாள். ''தசரதனை நோக்க இராமன் இளையவன் தானே! அப்படியிருக்க, அவன் அரச முடி புனைந்து கொள்வதற்கு இசைந்தனன் என்றால் பரதனை மட்டும் அந்த அரசமுடி எவ்வாறு விலக்கிவிடும்? அவனுக்கு மட்டும் அதை அடைய உரிமையில்லையா? மூத்தவன் இருக்க இளையவன் ஆட்சிக்கு வருவதில் தவறு ஒன்றும் இல்லையே!'' என்று எடுத்துக் காட்டுகிறாள்.

மனச்சான்றை மயக்க ஏதாவது ஒரு காரணம் போதும் என்பதை நன்றாக உணர்ந்த மந்தரை இவ்வாறு கூறி, அவளை அமைதிப் படுத்துகிறாள்.

**மூத்த வற்குரித் தரசெனும் முறைமையின் உலகங்**
**காத்த மன்னனில் இளையனன் றோகடல் வண்ணன்**
**ஏத்து நீண்முடி புனைவதற் கிசைந்தன னென்றால்**
**மீத்தருஞ் செல்வம் பரதனை விலக்குமா றெவனோ?**

- 168

என்று கேட்கிறாள்.

இப்பொழுது வரன்முறைக்கு அஞ்சி அடங்கிவிட்டால் எதிர்காலத்தில் எக்காலத்திலும் ஆட்சி வரும் வழியில்லை என்பதைக் காட்டுகிறாள். இந்த வரன்முறை என்ற நியதிக்கு அடங்கிக் கிடந்துவிட்டால் எந்தக் காலத்திலும் அவள் வழி மரபினர்க்கும் ஆட்சி கிடைக்காது என்றும், இராமனை அடுத்தும் இவன் ஆட்சிக்கு வர இயலாது என்றும் எடுத்துக் கூறுகின்றாள். இப்பொழுது இழக்கும் உரிமையால் இனி அடுத்து இழக்கும் உரிமைகளை அடுக்கிக் கூறுகிறாள்.

இராமன் ஆட்சிக்கு வந்தால் கோசலைக்கு வரும் உயர்வையும், கைகேயி அடையப்போகும் தாழ்வையும் எடுத்துக் கூறுகிறாள். எந்த வரன்முறைக் காரணத்தைக் கூறி அதை மீறினால் புகழ் கெட்டுவிடும் என்று அஞ்சுகிறாளோ, அதே வரன்முறையை மீறாமல் இருப்பதனாலும் புகழுக்கு வரும் கேட்டை உணர்த்துகிறாள். உலகில் நன்மை வாழ்வது மக்களுக்குப் புகழ்மீது உள்ள ஆவலால்தான் என்பதை நன்றாக உணர்ந்தவள்; அதனால் அந்தப் புகழாசையைக் காட்டியே அவள் உள்ளத்தின் நன்மையையும், தூய்மையையும் மாற்ற முனைகிறாள்.

''இன்னலும் வறுமையும் தொடர அதனால் உன்னை அடுத்துவந்து கேட்போர்க்குக் கொடுத்துதவும் ஆற்றலும் உரிமையும் இழந்து, கொடுத்துப் புகழ் பெறும் சூழ்நிலையை இழந்து, அதே வருத்தத்தால் உள்ளம் உடைந்து விம்மிப் பொருமி மாண்டுபோக மனம் விரும்புகிறாயா?'' என்று, அவள் புகழ் விரும்பும் உள்ளத்தையும் தூண்டி விடுகிறாள். அவள் தன்னலத்தின் மற்றொரு வெளிப்பாடு புகழ் வேட்கை என்பதை நன்குணர்ந்த மந்தரை, புறஞ்சுவர்க்கோலஞ் செய்யும் வெளிப்புகழை இழக்கும் நிலையை இழிந்த நிலையாக எடுத்துக் காட்டுகிறாள். தன்னலத்தின் மற்றொரு வெளிப்பாடு பெண்களுக்குப் பிறந்த வீட்டில் கொண்டுள்ள பற்றும்

பெருமையும் என்பதை உணர்ந்த மந்தரை, கைகேயி உரிமை இழப்பதால் அவள் தந்தை வலிமை இழந்து பகைவர்க்கு அடங்கி வாழவேண்டிய சூழ்நிலையை எடுத்துக் காட்டுகிறாள். வரன்முறைக்கு மதிப்புக் கொடுத்து இப்பொழுது கிடைக்கும் வாய்ப்பைத் தவற விட்டால் இராமனுக்குப் பிறகும் அவள் மைந்தன் பரதன் ஆட்சிக்கு வரமுடியாது என்பதையும், அவன் மைந்தர்களும் அடுத்த தம்பியாகிய இலக்குவனுமே ஆட்சிக்கு வர இயலும் என்பதையும் காட்டுகிறாள்.

**பேரரசு அவன்குலக் கோமைந்தர் தமக்கும்**
**அடுத்த தம்பிக்குமாம் பிறர்க் காகுமோ**

என்று அவள் என்றும் உரிமை இழக்கும் சிறுமையைக் காட்டுகிறாள்.

இறுதியில், தன்னலம் மனச்சான்றை மங்கவைத்து வெற்றிகொண்டு தன் கொடிய தொழிலைச் செய்ய முற்படுகிறது. நன்மையும், அன்பும், பேரறமும் அவள் உள்ளத்தை விட்டு அகல்கின்றன. அவள் 'தூய சிந்தையும் திரிந்தது' என்று கம்பர் முடிவாகக் கூறி முடிக்கிறார். நன்மையில் உறுதி கொண்ட அவள் உள்ளம் தீமையில் நிற்கும்பொழுதும் அங்கும் உறுதியோடு விளங்குகின்றது. அவள் உள்ள நிறைவில் ஒரு கள்ளச் சிந்தனை புகுந்துவிடுகிறது. நிறையுள்ளம் குறையுள்ளமாகிறது. அளியும் ஆழ்ந்த அன்பும் நிறைந்த பேருள்ளம் தன்னலமும் கொடுமையும் சூழ இடம் கொடுத்து விடுகிறது. தெய்வக் கற்பினாளும், அருள் உள்ளம் படைத்தவளும், தாயுள்ளம் கொண்டிருந்தவளுமான கைகேயி பேயுள்ளம் பெற்றுவிடுகிறாள்.

மன்னன் தசரதன், ''பரதனுக்கு மண்ணைப் பெற்றுக் கொண்டு இராமனைக் காட்டுக்கு அனுப்பும் மற்றைய வரத்தைக் கேளாது விடு'' என்று மன்றாடுகிறான். எந்த முறையீடும் அவள் செவி ஏற்றுக்கொள்ள மறுத்து விடுகிறது. அவன் பலவாறு கூறி

இரந்து மன்றாடியும் அவள் தன் உறுதியில் சிறிதும் குறையவில்லை. அவள் உள்ளம் தீமையில் நிலைத்துவிட்ட நிலையை, 'தன்னேரில்லாத் தீயவள் உள்ளந் தடுமாறாள்' என்று கூறிக் கம்பர் காட்டுகிறார்.

தசரதன் அவளை இரந்து கேட்கும் இன்னுரைகளை அவள் செவிகள் கேட்கவும், அவற்றை ஏற்கவும் மறுத்து விட்டன என்பதை, 'மரந்தான் என்னும் நெஞ்சினள் நாணாள் வசைபாராள்' என்று கூறி விளக்குகிறார்.

**இன்றோர் காறும் எல்வளை யார்தம் இறையோரைக்**
**கொன்றா ரில்லை கொல்லுதி யோநீ கொடியாளே**

என்று, அவள் கொடுமையைத் தசரதன் காட்டுகிறான். வேறு வழியில்லாமல் 'ஈந்தேன் ஈந்தேன் இவ்வரம்' என்று மன முடைந்து கூறி, அவள் இனிப் பழிவெள்ளத்தில் மூழ்கித் தவிக்கப்போகும் இழிநிலையை எடுத்துரைக்கின்றான். அவள் இனி அடையப்போகும் அவலநிலை எத்தகையது என்று எடுத்துக் கூறுகிறான். அவன் உலகைவிட்டு அகலுவதால் அவள் அடையப் போகும் தனிமை நிலையாகிய விதவைக் கோலத்தையும், அவள் பொலிவிழந்து வாழ்விழந்து வசை பெற்று இசைகெட்டு அழியப்போகும் அவல வாழ்வையும் எடுத்துக் காட்டுகிறான்.

**ஈந்தேன் ஈந்தேன் இவ்வரம் என்சேய் வனமாள**
**மாய்ந்தே நான்போய் வானுல காள்வென் வசைவெள்ளம்**
**நீந்தாய் நீந்தாய் நின் மகனோடும் நெடிது**

என்று கூறுகிறான்.

மகனைக் காட்டுக்கு ஏக ஒப்புதல் தெரிவித்த சொற்கள் அவன் நெஞ்சை ஈர்த்து அவனை வெந்துயரில் மூழ்க வைக்கின்றன. சிந்தை இழந்து, மனம் நொந்து, கீழே

சாய்ந்துவிடுகிறான். இவ்வளவு கொடுமையும் நேர்ந்த பிறகும், அவள் கொடுமையிலிருந்து சிறிதும் சலிப்புக் கொள்ளவில்லை. இரக்கமோ பரிவோ அவள் உள்ளத்தில் புகவில்லை. செய்கை முற்றிய சிந்தனையால் அமைதிகொண்டு அவள் ஆழ்ந்து உறங்கத் தொடங்குகிறாள். 'செயல் முற்றியூறா நின்ற சிந்தனையினாளும் துயில்வுற்றாள்' என்று கூறுகிறார்.

தன்னலம் தலையெடுக்கும் பொழுது ஆழ்ந்த பேரன்பும், அளியும், உள்ளத் தூய்மையும் மெல்ல எப்படி மறைந்து விடுகின்றன என்ற இயல்பைக் கைகேயியின் படைப்பில் மிக அழகாகக் கம்பர் காட்டுகிறார். நல்லவர்கள் என்று உலகம் மதிக்கும் சிலரும், உலகுக்கு அவர் செய்யும் நன்மையும் புகழ்ச் செயலும் அருட்செயலும் தன்னலம் என்ற பேயால் மறைக்கப்பெற்று, ஆசை என்னும் சூறாவளியால் அலைக்கப் பெற்று, எவ்வகைக் கொடுமைக்கும் துணிந்து நிற்பார்கள் என்பதைக் கைகேயின் தூயசிந்தை திரிந்த நிலையில், கம்பர் மெல்லமெல்லக் காட்டி நிலைநாட்டுவதைக் காண்கிறோம்.

# 3. இரண்டு காட்சிகள்

**சி**லம்பைச் சுற்றியெழும் சிலப்பதிகாரக் கதையில் இளங்கோவடிகளின் கதையமைக்கும் ஆற்றலும், நிகழ்ச்சிகளைப் பொருத்தும் திறனும், காட்சிகளை அமைத்துக் காட்டும் கவினும் போற்றத்தக்கனவாய் அமைந்துள்ளன. சிறப்பாக ஒவ்வொரு நிகழ்ச்சியையும் இரண்டு காட்சிகளாக அமைத்துக் காட்டும் அழகு சிலப்பதிகாரத்தில் பலவிடங்களில் அமைந்துள்ளது. உவகையில் அவலத்தையும், கொடுமையில் செம்மையையும், காதலில் கலக்கத்தையும், ஒன்றனோடு ஒன்றைப் பொறுத்திக்காட்டி விளக்கும் திறன் இவர்பால் அமைந்துள்ளது.

கண்ணகி மாதவி இருவரையும் படைத்து, அவர்கள் பண்பை வெளிப்படுத்தும் வகையில் கோவலனின் வாழ்வை அவர்களோடு பிணைத்து,அவ்வப்பொழுது இருவரின் இருவேறு நிலைகளையும் ஒருங்குவைத்துக் காட்டும் அமைப்பைப் பலவிடங்களிற் காண்கிறோம்.

ஆடல், பாடல், அழகு இம்மூன்றும் கூடிய மாதவியின்பால் விருப்புற்றுக் கோவலன் அவளோடு உறைந்து வாழ்கின்றான் என்ற செய்தியைச் சொல்லவந்த விடத்தில் கண்ணகியின் இல்லத்தினை மறந்துவிடுகிற செய்தியையும் உடன் சேர்த்தே கூறுகின்றார்.

**மாமலர் நெடுங்கண் மாதவி மாலை**
**கோவலன் வாங்கிக் கூனி தன்னோடு**
**மணமனை புக்கு மாதவி தன்னோடு**
**அணைவுறு வைகலின் அயர்ந்தனன் மயங்கி**
**விடுத லறியா விருப்பின னாயினன்**
**வடுநீங்கு சிறப்பின்தன் மனையக மறந்து**

**- அரங்கேற்று காதை**

என்று கூறுகின்றார். வடுநீங்கு சிறப்பினையுடைய தன் மனைவியின் இல்லத்தை அறவே மறந்துவிட்டான் என்று கூறுகிறார். அவள் ஒருத்தி இவன் வருகைக்காகக் காத்துக் கிடப்பாளே என்ற நிலையை மறந்து, மாதவியை விடுதல் அறியா விருப்பினன் ஆயினன் என்று கூறுகின்றார். மாதவியின் மணமனை புகுந்தவன் கண்ணகியின் மனையகத்தை மறந்துவிட்டான் என்று இருவேறு காட்சிகளை ஒருங்கு வைத்துக் காட்டுகின்றார்.

இதைப் போலவே அந்திமாலையைச் சிறப்பித்துக் கூறும்பொழுது நிலவுப்பயன் கொள்ளும் நெடுநிலா முற்றத்தில் ஆர்வ நெஞ்சத்தளாய்க் கோவலனோடு உடன் அமர்ந்து கோலங்கொண்ட மாதவியின் மகிழ்ச்சியை விவரிக்கும் பொழுது, கையறு நெஞ்சத்துக் கண்ணகியின் கண்ணீரை அவரால் காட்டாமல் இருக்க இயலவில்லை. கண்ணகி அணியிழந்து கோலமிழந்து தனிமையுற்றாள் என்ற செய்தியையும் உடன் சேர்த்துக் கூறுகின்றார். 'ஆர்வ நெஞ்சமொடு கோவலற் கெதிரிக் கோலங்கொண்ட மாதவி'யின் நிலையைச் சொல்லும் அதே தொடர்ச்சியில்,

**மங்கல வணியிற் பிறிதணி மகிழாள்**
**கொடுங்குழை துறந்து வடிந்துவீழ் காதினள்**

என்றும், ''அஞ்செஞ் சீறடி அணிசிலம் பொழிந்தது'' என்றும், ''செங்கயல் நெடுங்கண் அஞ்சனம் மறந்தது'' என்றும் கூறி,

அவள் அணியிழந்த தோற்றத்தையும் கோலம் கொள்ளாக் கொள்கையையும் உணர்த்துகிறார். மேலும் கண்ணகியின் தனிமையான நிலையைச் சொல்லும் பொழுது அவள் தன் மேனியை அழகு செய்த பல அணிகளை இழந்து நின்றாள் என்று கூறுவதோடு அமையாமல், முகத்தை மலரச்செய்யும் முறுவலையும் மறந்தாள் என்று நகைமுகம் மறைத்த செய்தியையும் உடன் உணர்த்துகிறார். கோவலன் அவளோடு இருந்து அவளுக்கு மகிழ்ச்சியூட்டவில்லை யென்பதை, 'தவளவாள்நகை கோவலனிழப்ப' என்ற தொடரால் குறிப்பிடுகின்றார். கோவலன் எதிரில் மாதவி இருந்தாள் என்று கூறிய அவர், கண்ணகிமுன் கோவலன் இல்லை என்பதையும் உடன் உணர்த்துகிறார்.

**பவள வாணுதல் திலக மிழப்பத்**
**தவள வாணகை கோவலன் இழப்ப**
**மையிருங் கூந்தல் நெய்யணி மறப்பக்**
**கையறு நெஞ்சத்துக் கண்ணகி**

என்று காதலனைப் பிரிந்து அவள் அடைந்த வேதனையைக் காட்டுகின்றார். ஆர்வ நெஞ்சிற் கோலங்கொண்ட மாதவியின் கோலத்தை அவனால் காணமுடிந்ததேயன்றிக் கோலம் இழந்த கண்ணகியின் கையறு நெஞ்சை அவனால் காணமுடியவில்லை என்பார் போலக் "கோலங்கொண்ட மாதவி" என்றும், "கையறு நெஞ்சத்துக் கண்ணகி" என்றும், முறையே மாதவியையும் கண்ணகியையும் சித்திரித்துக் காட்டுகின்றார்.

கண்ணகியைப் பாராட்டும் கோவலன் உரைகளிலும் இருவேறு நிலைகளைக் காட்டுகின்றார். மணவினை முடிந்து இன்பவாழ்வு தொடங்கும்போது காதல் உணர்வில் பாராட்டிய பாராட்டுரைக்கும் வாழ்க்கையின் நெருங்கிய பழக்கத்தால் பண்பு அறிந்து பாராட்டும் பாராட்டுதலுக்கும் வேற்றுமை அமைத்து, முதலில், தொடங்கிய பாராட்டுரையை முடிவில் கூறும்

பாராட்டுரையால் நிறைவு படுத்தி, முழுக்கட்சியாகக் காட்டுகின்றார் எனலாம்.

முதற்கண் கோவலன் கண்ணகியைப் பாராட்டும் புகழுரையில் அவள் அழகையும் மற்றுமுள்ள நலன்களையும் மட்டும் சிறப்பிக்கின்றான். அப்பொழுது அவள் பண்பை அறிவதற்கு வாய்ப்பில்லை. பின்னர் அமைந்த பாராட்டுரையில் அவள் பண்பையே சிறப்பித்துக் கூறுகின்றான். இவ்வாறு முன்னும் பின்னும், வாழ்வின் தொடக்கத்திலும் முடிவிலும், இறுவேறு காட்சிகளில் கண்ணகியின் நலனும் பண்பும் பாராட்டப் படுகின்றன.

கயமலர்க் கண்ணியாகி கண்ணகியும் அவள் காதற் கொழுநனான கோவலனும் நெடுநிலை மாடத்தில் மயன் விதித்தன்ன மணிக்கால் அமளிமிசையிருந்துழித் தீராக்காதலால் அவள் திருமுகம் நோக்கி அவள் அழகையும் நலனையும் வியந்து பாராட்டுகிறான்.

**மாசறு பொன்னே வலம்புரி முத்தே**
**காசறு விரையே கரும்பே தேனே**

என்று, அவள் நலன்களை மட்டும் பாராட்டிக் கூறுகின்றான். பொன்னைப் போன்ற நிறத்தையும், முத்துப் போன்ற மென்மையையும், குற்றமற்ற நறுமணத்தையும், கரும்பு போன்ற இனிமையையும், தேன் போன்றுமிழற்றும் இனிய மொழியையும் அவன் பராட்டுரையில் அமைக்கின்றான். வெறும் புலன்களின் இன்பங்களைச் சுற்றியே அவன் புகழுரை அமைந்துள்ளது. இந்தப் புகழுரையால் கண்ணகியின் கற்பும், பொற்பும் சிறப்பிக்கப் பெறவில்லை. எனவே இந்தப் பாராட்டோடு விட்டுவிட்டால் கண்ணகியின் உயர்ந்த பண்புகளை அறிவதற்கு வாய்ப்பில்லாமல் போய்விடுகிறது. வாழ்விலும் தாழ்விலும் அவளை நன்கு அறிந்த பிறகே கோவலனால் அவள் பண்பைப்

பற்றிப் பேசமுடியும் என்பதை நண்குணர்ந்த அடிகள், தக்க விடத்தில் அவள் பண்பைப் பாராட்டுமாறு செய்து, முழுமையான காட்சியாக அமைத்துக் காட்டி, நலனும் பண்பும் வெளிப்படுமாறு செய்து, கண்ணகியைப் பற்றிய கோவலன் முழுவறிவையும் காட்டுகிறார்.

வாழ்விலும் வழிநடையிலும் அவனுக்குத் துணையாகப் பங்கு கொண்ட பிறகுதான் அவள் பண்பை அவனால் முழுமையும் அறிய முடிகிறது. தொடக்கத்தில் 'பொன்னே' என்று பாராட்டிய அவன், பின்னரும் 'பொன்னே' என விளித்தாலும், முதற்கண் 'பொன்னே' எனக் கூறியதற்கும் முடிவில் 'பொன்னே' எனக் கூறியதற்கும் காரணங்களும் கருத்துகளும் வேறாக உள்ளன. அழகால் பொன்னைப் போன்றவள் என்று கூறிய அவன், சுடச்சுட ஒளிரும் பொன் போலத் துன்பம் படப்பட மிளிரும் பண்புடையாள் என்ற காரணத்தால், 'பொன்னே' என்று மீண்டும் கூறுகிறான்.

**நாணமும் மடனும் நல்லோர் ஏத்தும்**
**பேணிய கற்பும் பெருந்துணை யாக**
**என்னோடு போந்தீங் கென்துயர் களைந்த**
**பொன்னே கொடியே புனைபூங் கோதாய்**
**கற்பின் கொழுந்தே பொற்பின் செல்வி**
**நாணின் பாவாய் நீணில விளக்கே**
**கற்பின் கொழுந்தே பொற்பின் செல்வி**

என்று பாராட்டுகிறான். மாதரி அமைத்துக் கொடுத்த தனிவீட்டில் கண்ணகி அடிசில் ஆக்கி அளிக்க, அதனை உண்டு இனிதின் இருந்த கோவலன் அன்போடு அளவளாவும் போது, இவ்வாறு மகிழ்வுரை கூறுகிறான். அவள் பண்புச் சிறப்பைத் தன் அன்புச் சொற்களால் வெளியிடுகிறான். துன்பத்தை நோற்றாலும் பண்பு குறையாத தன்மையால் அவளைப் 'பொன்னே' என்றும், காற்றுக்கு அசைந்தாலும் தன்னிலை கெடாத கொடியைப்

போலத் துன்பத்தால் துவண்டாலும் மனம் முறிந்து போகாத இயல்பு பற்றியும், கொழுகொம்பு நாடித் தழுவி நிற்கும் கொடியைப்போலக் கொழுநனையே பற்றுக்கோடாகக் கொண்டு வாழும் இயல்பு பற்றியும், 'கொடியே' என்றும், இனி அவள் மலர்ச்சி பெரும் வாழ்வு வாழவேண்டும் என்ற அவன் கொண்ட நல்லெண்ணத்தால் 'புனைபூங்கோதாய்' என்றும், நாணமே துணையாக அவள் துன்பத்தைத் தாங்கிய இயல்பு பற்றி 'நாணின் பாவாய்' என்றும், தன் இருண்ட வாழ்வில் அவள் ஒளிவிளக்காக விளங்கும் இயல்பு பற்றி 'நீணில விளக்கே' என்றும், கற்பின் சிறப்பால் அவள் அடைந்துள்ள பொற்பின் சிறப்பைப் பாராட்டிக் 'கற்பின் கொழுந்தே பொற்பின் செல்வி' என்றும் பாராட்டுகிறான். இப் பாராட்டுரைகளிலெல்லாம் அவள் பண்பின் சிறப்பே இடம் பெற்றிருக்கின்றது. முதலில் அவன் கண்டுணர்ந்த புறத்தோற்றக் காட்சி நலனைமட்டும் நவிலும் அன்புரையாகவும், இறுதியில் பழகியுணர்ந்த பண்பு அவள் பண்பை உணர்ந்து பேசும் பண்புரையாகவும் அமைய, இரு வேறு காட்சிகளில் அவள் மாட்சிகளை உணருகிறான்.

பாண்டியன் ஆட்சியில் ஏற்பட்ட கொடுங்கோன்மையை விளக்கும் பொழுது சோழநாட்டின் செங்கோன்மையைச் சிறப்பிக்கக் காண்கிறோம். புகுந்த இடத்தில் நடந்த கொடுமையை விளக்கத் தான் வாழ்ந்த இடத்தின் செம்மயைக் கண்ணகி உணர்த்துகிறாள். பாண்டியன் அவைக்களத்தில் அவன் இழைத்த கொடுமையை எடுத்துக் காட்டச் சோழநாட்டு மன்னவர்களின் செங்கோன்மை குன்றாமாட்சியை எடுத்துக் கூறுகின்றாள்:

**தேரா மன்னா செப்புவ துடையேன்**
**எள்ளறு சிறப்பின் இமையவர் வியப்பப்**
**புள்ளுறு புன்கண் தீர்த்தோன் அன்றியும்**
**வாயிற் கடைமணி நடுநா நடுங்க**
**ஆவின் கடைமணி யுகுநீர் நெஞ்சுசுடத் தான்தன்**

**அரும்பெறற் புதல்வனை யாழியின் மடித்தோன்**
**பெரும்பெயர்ப் புகாரென் பதியே**

**- வழக்குரை காதை**

எனச் சோழநாட்டின் நீதிவழுவா நெறிமுறையைக் காட்டிப் பாண்டிய நாட்டின் கொடுங்கோன்மையை மிகுதிப்படுத்திக் காட்டுகின்றாள். புள்ளுறு புன்கண் தீர்த்த சிபிச் சோழனின் சிறப்பையும், ஆவின் கண்ணீர் நெஞ்சைச் சுடத்தன் மகனை அதே தேராழியில் மடித்த மனுநீதிச் சோழனின் மாண்பையும் புலப்படுத்துகிறாள்.

பாண்டிய நாட்டின் கொடுங்கோன்மையைச் சுட்டச் சோழநாட்டின் செம்மை வழுவா நீதியைக் காட்டியதைப் போலவே, பாண்டிய நாட்டில் நீதி குன்றிய அப்பொழுதைய நிலையை உணர்த்த நீதிவழுவாப் பண்டைய நெறி முறைமையையும் ஒப்பிட்டு வேறோர் இடத்தில் அமைத்துக் காட்டுகின்றார் ஊழ்வினையே செங்கோல் வளைந்தமைக்குக் காரணம் என உணர்த்துவார். அப்பொழுது ஏற்பட்ட விளைவை விளக்கப் பண்டுதொட்டுப் பாண்டியர் ஆட்சியில் தொடர்ந்து வந்த தூய செந்நெறியை யுணர்த்துகிறார். மதுராபதித் தெய்வம் கண்ணகிக்கு ஊழ்வினை உருத்து வந்தூட்டும் என்பதை உணர்த்தும் பொழுது, குன்றிய ஆட்சியின் நிலையை உணர்ந்த கண்ணகிக்குப் பாண்டியனின் பண்புள்ள பழைய ஆட்சி முறையை விளக்கிக் கூறுவதாக அமைக்கின்றார். அந்த நாட்டில் மறைநாவோசையல்லது குறை தெரிவிக்கும் மணிநாவோசையே எழுந்ததில்லையென்றும், பகைமன்னர் தோல்வி பற்றித் தூற்றுவரேயன்றிப் பழிபற்றிக் குடிமக்கள் அவனைத் தூற்றியதில்லை என்றும் பண்டைய செங்கோன் முறையைச் சிறப்பித்துக் கூறுகின்றார்.

**மறைநா வோசை யல்லது யாவதும்**
**மணிநா வோசை கேட்டது மிலனே**

**அடிதொழ திறைஞ்சா மன்ன ரல்லது**
**குடிபழி தூற்றுங் கோலனு மல்லன்** **(கட்டுரை)**

என்று கூறிக் கண்ணகிக்குப் பாண்டியனின் நெறிமுறையின் இருவேறு நிலைகளைக் கூறி ஊழ்வினையால் வளையாத கோல் வளைந்த காட்சியை உணர்த்துவது போல அமைக்கின்றார்.

வாழ்வில் ஏற்படும் நிகழ்ச்சிகளில் முரணை அமைத்து இன்பத்தையும் அதற்கு எதிரான துன்பத்தையும், கொடுமை யையும் செம்மையையும், அழகையும் அழுக்கையும் அமைத்துக் காட்டும் கவிஞர், வாழ்வின் ஒழுக்கநெறிகளிலும் உள்ள முரண்பட்ட வியல்புகளை மகளிர் இருவர் வாழ்க்கை முறையில் அமைத்துக் காட்டுகிறார். காமவேள் கோட்டம் வழிபட்டுக் கணவனை அடைய முயலும் தேவந்தியின் நெறியையும், கணவனை வழிபடுவோர் தெய்வத்தை வழிபடுதல் சிறப்பன்று என்று கொண்ட கண்ணகியின் நெறியையும் ஒரே இடத்தில் கூறி, இருவேறு நெறிகளில் உள்ள குறைவு நிறைவுகளை எடுத்துக் காட்டுகின்றார்.

வருங்காலத்து வரும் தீய நிகழ்ச்சிகளைத் தீக்கனா ஒன்றில் கண்ட கண்ணகி மருண்டு, தன் தோழியான தேவந்தியிடம் சொல்ல, அவள்,

**சோமகுண்டஞ் சூரிய குண்டந் துறைமூழ்கிக்**
**காமவேள் கோட்டந் தொழுதார் கணவரொடு**
**தாமின் புறுவ ருலகத்துத் தையலார்** **(கனாத்திறம்)**

என்று, பொதுவாக உலகத்தில் ஒருசிலர் மேற்கொள்ளும் நெறியாகக் கூறுகின்றாள். கற்புடைய பெண்டிர்க்கு அந்நெறி ஒவ்வாது என்பதைக் கண்ணகி, 'பீடு அன்று' என்று சுருக்கமாகக் கூறி மறுப்புரை தருகிறாள். கொழுநனை வழிபடுகின்றவர் தெய்வத்தை வழிபடுதல் குறையானதாகும் என்ற பண்பட்ட கருத்தை அப்பாவைக்கு உணர்த்தத் தொடங்குகிறாள். காமவேள் கோட்டம் தொழும் தையலார் செயலையும் அது பீடு அன்று

எனக் கூறி மறுக்கும் கண்ணகியின் செயலையும் அடுத்தடுத்து அமைத்து முரணால் சிறப்புப் பெற வைக்கின்றார்.

அவலத்தின் எல்லையாகக் கோவலனின் கொடிய முடிவைச் சொல்லுமிடத்து, அவள் அவனோடுவாழ்ந்த காலத்துக் கொண்ட உவகைக் காட்சிகளை உடன் வைத்துக் காட்டி அவலத்தின் நிலையை மிகுதிப்படுத்தி இறுவேறு உணர்வுகளை மோதவைத்துச் சுவையை மிகுவிக்கின்றார். அவலத்தோடு உவகையை ஒருங்கு வைத்துக் காட்டுவதோடு வேறு வகையாகவும் இறுவேறு காட்சிகளை அமைத்து அவள் கொண்ட துன்பத்தின் துடிப்பையும் துடைக்க முடியாத் துயரத்தையும் காட்டிச் செல்கிறார். கண்ணகி அலையுண்ட மனத்தோடு கோவலன் கொலையுண்ட இடந்தேடிக் கவலையோடு செல்கிறாள். கம்பலை மாக்கள் கண்ணீர் சிந்தும் அவள்முன் வந்து அவனைக் காட்ட, அவள் மட்டும் அவனைக் காண முடிந்தது; அவன் அவளைக் காணவில்லை என்று இரண்டு வேறுபட்ட நிலைகளைச் சொல்லிச் சோகத்தை மிகுதியாகக் காட்டுகின்றார்.

கண்ணகியின் கண்கள் அவன் மூடிய கண்களைக் காண்கின்றன. காலையிலிருந்து மாலைவரை நடந்த செய்திகளைச் சொல்ல வேண்டிய அவன் கண்கள், திறந்தும் பாராமல் மூடிக்கிடந்தன. காதற்கதை பேசிய அக்கண்கள் துன்பக் கதைகளைக் கண்மூடிய வண்ணம் சொல்லிக் கொண்டிருந்தன. காதலால் ஒருமிக்க சந்திக்கும் அக்கண்கள் சாதலால் சந்திப்பை இழந்துவிட்டன என்ற செய்தியை இளங்கோவடிகள் நன்கு காட்டுகின்றார்.

**கம்பலை மாக்கள் கணவனைத் தாங்காட்டச்**
**செம்பொற் கொடியனையாள் கண்டாளைத்தான் காணான்**

என்று கண்ணகி அவனைக் கண்டதையும், அவன் அவளைக் காணாததையும் ஒருங்கு வைத்துக் கூறுகின்றார்.

அவள் அழுது அரற்றும் துன்பக் குரல் அவன் செவிகளில் விழவில்லை. கண்ணகியைச் சந்தித்து, 'மாசறு பொன்னே!' என்றும், 'பொன்னே! கொடியே!' என்றும் முன்னால் புகன்று பாராட்டிய அந்த வாய், இப்பொழுது மூடிக் கிடக்கிறது என்றும், அவனால் பாராட்டப் பெற்ற அதே செம்பொற்கொடியனையாள் அவன் கண்முன் நின்றும் அச் செம்பொன்கொடியாளின் அழகை அவன் கண்கள் அப்பொழுது காணவில்லையே என்றும் அறிவுறுத்துவார் போன்று, செம்பொன் கொடியனையாள் என்ற தொடரால் கண்ணகியைக் குறிப்பிடுகின்றார். கொடியே என்று முன்னர் அவனால் பாராட்டப் பெற்ற கண்ணகி இப்பொழுது கொழு கொம்பின்றித் துவள்கின்றாள்; இனித் தழைப்பதற்கு வழியில்லை என்பார், 'கொடியனையாள்' என்ற குறிப்பால் உணர்த்துகிறார். கொழு கொம்பு இழந்த கொடிபோன்று கொழுநனை யிழந்து அவள் உள்ளம் அழிகின்ற காட்சியை இத்தொடரால் குறிப்பிடுவதையும் அறிய முடிகிறது.

அன்று காலை நிகழ்ந்த இன்ப நிகழ்ச்சிகளும் மாலையில் நேர்ந்த துன்ப அதிர்ச்சியும் இளங்கோவின் நினைவுக்கு வருகின்றன. அன்றைய காலைப் பொழுதில் மாலை தவழும் மார்பால் அவளை அவன் தழுவிக் கொண்டதும், அவன் தலை மாலையில் இருந்த மலரை வாங்கித் தன் வார்குழல் மேல் அவள் சூட்டிக்கொண்டதும், அதே மாலைப்பொழுதில் மண்ணில் கிடந்த அவன் உடலையும் மாலைபுரண்ட மார்பில் குருதிவடியும் நிலையையும் அவள் காணுவதும் ஆக, இருவேறு நிலைகளை ஒருங்கு வைத்துக் காட்டி இன்பதுன்பத்தை அடுத்தடுத்து வைத்துத் துன்ப நிகழ்ச்சியால் ஏற்பட்ட துயரத்தை மிகுதிப்படுத்திக் காட்டுகின்றார்.

**வண்டார் இருங்குஞ்சி மாலைதன் வார்குழல்மேற்**
**கொண்டாள் தழீஇக் கொழுநன்பாற் காலைவாய்ப்**
**புண்தாழ் குருதி புறஞ்சோர மாலைவாய்க்**

**கண்டாள் அவன்றன்னைக் காணாக் கடுந்துயரம்**
**(ஊர்சூழ்வரி)**

என்று உணர்த்தி, அவள் என்றும் காணாத்துயரத்தை அன்று காணுவதாகக் கூறுகிறார்.

''சுண்ணத் துகள் அவன் பொன்னிற மேனியிற் படிந்து அவன் வண்ணத்தை அழகு செய்தது. அத்தகைய மேனி இப்பொழுது மண்ணிற்கிடந்து புழுதி படிந்து பழுதுறுவது எங்ஙனம் அடுக்கும்?'' என்று அரற்றிக் கூறுகின்றாள்.

**பொன்னுறு நறுமேனி பொடியாடிக் கிடப்பதோ**

என்று, அவன் வெட்டுண்ட உடலைப் பார்த்துக் கட்டவிழ்ந்த மனத்தோடு கதறுகின்றாள். பொன் உறு மேனியில் இப்பொழுது துகள் தவழ்கிறதே என்று கேட்கிறாள். சுண்ணம் பூசிய மேனியில் மண்ணின் புழுதி படிவது அடுக்குமா என்று கேட்பதுபோல் இருக்கிறது.

இறுதியாக, வேறுபட்ட இரண்டு காட்சிகளை ஒருசேர வைத்துக்கூறிக கண்ணகியின் அவலத்து எல்லையை அளவிட்டுக் காண்பதுபோல் ஒப்புமைப்படுத்தி அமைக்கின்றார். மதுரை மாநகருள் புகுந்தபோது கணவன் துணையாக வந்த காட்சியையும், மதுரையை விட்டுத் தனித்து ஏகும்போது அவள் பெற்ற தனிமை உணர்வையும் ஒரே இடத்தில் அமைத்துக் கூறுகின்றார்.

காதற் கணவனோடு மதுரையில் கண்ணகி புகுந்த போது அவள் நிலைவேறு; அதைவிட்டுச் செல்லும் போது அவள் நிலைவேறு; மாதவியோடு கொண்ட தொடர்பால் அறுந்துபோன இல்லற வாழ்வு, மீண்டும் கூடி இணைப்புண்டதால் செம்மையுற்றபடியால் வழிநடைத் துன்பத்திற்கும் வாழ்க்கை நெறிக்கும் அவன் தோள்கள் அவளுக்குத் துணையாக இருந்தன. கணவனையிழந்து, தனியே துன்பம் உழந்து, வறிதே மதுரையை

விட்டு வெளியேறும்பொழுது அவள் உள்ளத்தில் பல எண்ணங்கள் மோதுகின்றன. கணவனோடு வந்து கவின்பெற்ற வாழ்வு கலைந்து விட்டதை உணர்கிறாள்; அவள் கண்ட கனவுகளும், கொண்ட உறுதிகளும் சிதைந்து அவள் உள்ளம் சிலையில்லா வெறுங்கோயிலாகிவிடுகிறது. தான் போற்றிவந்த பெரிய பொருளைத் திடீரென்று எதிர்பாராமல் இழந்துவிட்ட அவலம் அவள் உள்ளத்தைக் கவ்வுகின்றது. சேரநாடு நோக்கிச் செல்லும் அவள் சிந்தை சோழ நாட்டிலிருந்து பாண்டிய நாட்டிற்புகுந்த அந்த நாட்களை எண்ணுகின்றது. அவலத்தின் எல்லையை அடைந்து உள்ளத்தின் சுமையாக இருந்த துன்பம் அனைத்தையும் சில சொற்களால் சொல்லிக் கையறுகின்றாள்:

**கீழ்த்திசை வாயிற் கணவனொடு புகுந்தேன்**
**மேற்றிசை வாயிற் வறியேன் பெயர்கு (கட்டுரை)**

எனச் செயலற்றுப் பேசுகின்றாள். மதுரை மாநகருள் கணவனோடு புகுந்ததும், அதைவிட்டுச் செல்லும் பொழுது கணவனின்றி நீங்குவதுமாகிய இரண்டு காட்சிகளையும் ஒரே இடத்தில் வைத்துக் காட்டியிருப்பது அவலச் சுவையை மிகுதிப்படுத்துகிறது.

இவ்வாறு இளங்கோவடிகள் ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சியை இரண்டு காட்சிகளால் ஆங்காங்குக் காட்டி, அக்காவியத்தின் சுவையையும், அழகையும் உயர்வுபடுத்திக் கற்பார் நெஞ்சத்தை அக் காட்சிகள் கொள்ளும் வண்ணம் செய்து அதனை நெஞ்சை அள்ளும் காவியமாக அமைத்து விட்டார் எனலாம்.

# 4. அணியும் மணியும்

புவியினுக்கு அணியாய் ஆன்ற பொருள் தந்து புலமைமிக்கு விளங்கும் கவிகள் பல இயற்றிய சான்றோர்கள் நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரத்தையும், மணியெனத் திகழும் மணிமேகலையையும், அள்ளக் குறையா அழகுமிகு சிந்தாமணியையும், வான்புகழ் அளிக்கும் வள்ளுவத்தையும், கற்பனைமிகு இராமகாதையையும் பிறவற்றையும் ஈந்து இலக்கியவளத்தை மிகுதிப்படுத்தி அழியாப் புகழ் பெற்றுள்ளனர். அவர்களுள் நளவெண்பா இயற்றி, மங்காப் புகழ் பெற்ற கவிகளுள் புகழேந்தியும் ஒருவர் எனில், அது மிகையாகாது.

புகழேந்தியின் கவிதை நலனையும் பாவினிமையையும் அணியழகையும் கற்பனைத்திறனையும் உணர்வார் அவர் உண்மையில் புகழ் ஏந்தற்குரியர் என ஒருப்பட்டு அந்த இலக்கியத்தின் பெருமையைப் பாராட்டுவர். வடமொழி வான்மீகத்தைத் தென்மொழியில் தெள்ளு தீஞ்சுவைக் கவிகளாக அணிபட இயற்றி அழியாப் புகழ் பெற்ற கம்பரைப் போலவே வடமொழிப் பாரதக் கதையின் கிளைக்கதைகளுள் ஒன்றாகிய நளசரிதத்தைத் தமிழில் நளவெண்பா என்ற பெயரால் ஒரு காவியமாக்கி, அதில் நெஞ்சை உருக்கும் நிகழ்ச்சிகளை, இன்பமும் துன்பமும் மிடைந்துவர, உவகையும் அவலமும் தங்கி அமையச் செப்பலோசை செவிக்கினிமை செய்ய வெண்பா

என்னும் ஒண்பாவால் சிறப்பித்து அமைத்த பெருமை புகழேந்தியைச் சாரும்.

மற்றைய காவியங்களைப் போலவே, இந்நூலும், காண்டங்கள் என்னும் பிரிவுகளைப் பெறுவதோடு, இன்பமும் துன்பமும் மாறிமாறி வர, இன்ப முடிவைக் கொள்ளும் இன்பியல் காவியம்போல, இன்பத்தில் தொடங்கி இடையறாத் துன்பத்தில் தொடர்ந்து இறுதியில் இன்பத்தில் முடியும் கதையமைப்பைப் பெற்று, இன்பியல் காவியமாக அமைந்திருக்கிறது. பாரதக் கதையின் கிளைக்கதையாக இஃது அமைந்திருப்பினும், கதையமைப்பில் அம் முதற்கதையோடு பெரும்பாலும் ஒத்து விளங்குகிறது. சூதாடி நாடும் பொருளும் இழந்து காடு நோக்கிச் சென்ற பாண்டவர்களைப் போலவே, நாடும் பொருளும் சூதில் இழந்து காடு நோக்கிச் செல்லும் காதலனின் வாழ்வைச் சித்திரிக்கிறது. காரிருளில் காதலியைக் கானகத்தே கைவிட்ட காதலினின் துன்பவாழ்வை நம் கண்முன் அப்படியே நிறுத்தும் ஆற்றலுடையது இஃது எனலாம்.

சொல்லும் திறனறிந்து கல்லும் உருகக் கவிசெய்யும் கவிஞர்கள் கற்பனையில் பறந்து ஒப்பனை மிக்க உவமைகளையும் உருவகங்களையும் எடுத்தாளும்போது, அக்கவிகள் பொன்னினும் ஒளிர்ந்து, மலரினும் மணந்து பண்ணினும் இசைந்து, தேனினும் இனித்து, வானினும் உயர்ந்து வண்புகழ் பெறுகின்றன. புகழேந்தி எதைச்சொன்னாலும் அணிநயம் படவும் கற்பனைத்திறன் மிகவும் சொல்லும் திறனை அவர் ஒண்பாவில் காண்கின்றோம். நாட்டின் நலனைச் சொன்னாலும், அன்னத்தின் மென்னடையைக் கிளர்ந்ததாலும், காதலிருவர் சந்திப்பைச் சித்திரித்தாலும், அந்திநேரத்தை அழகுபடக் கூறினாலும், மெல்லியலாளின் ஒல்கிய நடையைச் சொல்லிச் சிறப்பித்தாலும், மங்கையொருத்தியின் செங்கையைச் சுட்டினாலும், பிரிந்த உள்ளத்தை விளங்கக் காட்டினாலும், பிரிந்தவரைச் சந்தித்த மகிழ்ச்சியைத் தெரிவித்தாலும், எங்கும் அணியழகும் கற்பனைத் திறனும்படச் சொல்லுந் திறனை அவர்பால் கண்கின்றோம்.

காவியத்திற்குக் கதை உயிரென்றால், கவிதை அதை இயக்கும் உடல் எனலாம். அவ்வுடலை அழகுபடுத்தும் அணி கவிஞன் எடுத்தாளும் உவமை உருவகம் போன்ற அணிகள் எனக் கூறலாம். அவ்வணியை ஔிரச்செய்யும் மணிகள் புலவனின் கற்பனைத்திறன் எனலாம். மகளிர் அணியும் அணி மணிகளால் சிறப்புறுவதைப் போலக் கவிஞர் ஆளும் அணிகள் அவர்தம் கற்பனைத் திறத்தால் பொலிவு பெறுகின்றன. சொல்லுவதை வெறும் அணியழகுபட மட்டும் சொல்லுவதில் கவிஞனுக்குச் சிறப்பு ஏற்படுவதில்லை. அதனோடு, புலவன் தன் கற்பனையையமைத்துப் புதுமையாகவும் சுவையாகவும் கூறுவதில்தான் பாடல்கள் அழகும் சுவையும் பெறுகின்றன. அத்தகைய பண்பை நளவெண்பாவில் பல இடங்களில் நாம் காணலாம்.

நாட்டின் நலத்தைப் பாட்டில் காட்டும்பொழுது அவர்தம் கற்பனையில் ஒறு புதுமை காணப்படுகிறது. கம்பர் அயோத்தி நகரத்தில் வறுமையின்மையால் வண்மை இல்லை என்றும், செறுநர் இன்மையால் திண்மை இல்லை என்றும் சொல்கிறார். அவ்வாறு சொல்வதில் ஒரு புதுமை காணப்படுகிறது. அதைப் போலவே புகழேந்தியும் நாட்டுச் சிறப்டைக் கூறும் பொழுது ஒரு புதுமையைப் புகுத்தி அழகுபடக் கூறுகின்றார்.

அந்நாட்டில் எந்த வகையான கொடுமையும் ஏற்படுவது இல்லையென்றும், அதனால் மக்கள் எவ்வகையாலும் சோர்வு கொள்வதில்லை என்றும், அவர்கள் வாய்திறந்து அரற்றக் காரணமில்லையென்றும், நீதியில் வளைவு இல்லையென்றும் சொல்ல வந்தவர், அவ்வாறு கூறாமல் வேறு வகையாகக் கூறுவது அவர் கற்பனைத் திறனைக் காட்டுகிறது. ''வளைவு என்பது வில்லிலேதான் உண்டு, சோர்வு என்பது கூந்தலிலேதான் உண்டு; அரற்றுதல் என்பது சிலம்பிலேதான் உண்டு'' என்று கூறி, அவர் கற்பனையாற்றலைக் காட்டி அவற்றை அழகுபடக் கூறுவதைக் காண்கின்றோம்.

**வெஞ்சிலையே கோடுவன மென்குழலே சோருவன**
**அஞ்சிலம்பே வாய்விட்டு அரற்றுவன - 15**

என்று அவர் கூறுகின்றார்.

அன்னத்தின் மென்னடையையும் அதன் வண்ணத்தின் அழகையும் ஓவியமாகத் தீட்டிக் காட்டுகின்றார். அன்னத்தின் வெண்ணிறமும், அதன் தாளின் செந்நிறமும், சோலையின் பசுமை நிறமும் அவர் சொல்வன்மையால் கிழியில் தீட்டிய ஓவியமாக உருப்பெறுகின்றன. அன்னத்தின் வெண்ணிறத்தால் சோலையின் பசுமை நிறம் மாறிவிட்டது என்பதும், அதன் தாளின் செந்நிறத்தால் பொய்கைத்தலம் சிவந்துவிட்டது என்பதும் கற்பனை நயமாக அமைந்துள்ளன.

**நீள்நிறத்தால் சோலை நிறம்பெயர நீடியதன்**
**தாள் நிறத்தால் பொய்கைத் தலம் சிவப்ப - 30**

எனக்காட்டி, அன்னப்புள் அங்குத் தோன்றியதாக அவர் கூறுகின்றார்.

காதலிருவரின் சந்திப்பைக் கவின்படக் கூறிய உயர்வு கம்பரைச் சாரும் என்பது. இராமனும் சீதையும் முதன் முதலில் சந்தித்த சந்திப்பையும் அவர்கள் நோக்கிய நோக்கையும் புலப்படுத்தும் இடத்தில் விளங்குகிறது.

**பருகிய நோக்கெனும் பாசத்தாற் பிணித்து**
**இருவரும் மாறிப்புக்கு இதயம் எய்தினார்**

என்று, இதயம் கவரும் தொடரால் கூறிக் கற்போரின் உள்ளத்தைக் கவர்ந்த கம்பரின் கற்பனை, இராமாயணத்தில் அழியா இடம் பெற்றுவிட்டது. புகழேந்தியின் கற்பனையில் ஒரு புதுமை காணப்படுகிறது. கருங்குவளையில் செந்தாமரையும், செந்தாமரையில் கருங்குவளையும் பூத்த வியத்தகு காட்சி

அவர்கள் காட்சியில் நிகழ்ந்தது எனக் கூறித் தம் கற்பனையின் மாட்சியைப் புலப்படுத்துகின்றார்.

கருங்குவளை போன்ற அவள் கரிய விழிகளைச் செந்தாமரை போன்ற செவ்வரி பரந்த அவன் விழிகள் சந்தித்தன என்று கூறுகின்றார். காதலர்க்கே உரிய பொது நோக்காக அவர்கள் எதிர் எதிராக நோக்கிய அந் நோக்குகளைக் கூறும்போழுது, கண்களுக்கு அமைக்கும் உவமைகளில் அவர் இக் கற்பனையை ஏற்றிக் கூறுகின்றார்.

**தேங்குவளை தன்னிலே செந்தா மரைமலரப்**
**பூங்குவளை தாமரைக்கே பூத்ததே - ஆங்கு**
**மதுநோக்கும் தாரானும் வாள்நுதலும் தம்மில்**
**பொதுநோக் கெதிர்நோக்கும் போது** - 88

என்பது அவர் அமைத்த சொற் சித்திரமாகும்.

அந்திப் பொழுது வந்து சேர்ந்ததை வெற்றி விருதுகளோடு உலவும் அரசர்க்குரிய செய்திகளாகக் கூறுவதில் அவர் கற்பனை சிறந்து விளங்குகிறது 'மல்லிகையாகிய வெண்சங்கை வண்டு வாய்வைத்து ஊதிமுழக்கஞ் செய்ய, மன்மதன் மலரம்புகளைத் தன் கரும்பு வில்லிலே தொடுத்து எங்கும் பரப்பி மெய்க்காவலாளனாக அமைய, முல்லையாகிய மென்மாலையை அணிந்துகொண்டு, மாலையாகிய அந்திப் பொழுது மெல்ல நடந்தது' என்று அந்திநேரம் வந்து சேரும் நிலையை அழகுபடக் கூறுகின்றார். மல்லிகையில் வண்டு மொய்ப்பதும், முகைகள் அவிழ்ந்து மலர்களாக ஆவதும், முல்லை மலர்வதும் ஆகிய காட்சிகளைக் கொண்டு மாலைப்பொழுது மறையும் அந்திப் பொழுதின் அழகைத் திறம்படத் தீட்டுவதில் அவர் கற்பனை சிறந்துள்ளது.

**மல்லிகையே வெண்சங்கா வண்டூத வான்கரும்பு**
**வில்லி கணைதெரிந்து மெய்காப்ப - முல்லையெனும்**

**மென்மாலை தோளசைய மெல்ல நடந்ததே**
**புன்மாலை அந்திப் பொழுது** - 156

என்று அந்திப் பொழுதுக்கு அரசரின் வெற்றிச் செயல் கூறப்பட்டு, இக் காட்சி கற்பனையழகோடு விளங்குகிறது.

வீமன் மடந்தையாகிய தமயந்தி, கையில் மாலை ஏந்தி மன்னர் வீற்றிருந்த மணி மண்டபத்தில் அன்னமென மென்னடை நடந்து சென்றாள். மண்டபத்தில் வீற்றிருந்த மாபெரு மன்னர்கள், விழித்த கண் மூடாமல் வேல் விழியாளை நோக்கி இருந்தனர். இதுவே அங்கு நடந்த நிகழ்ச்சியாகும். இச் செய்தியினைச் சொல்வதில் புலவரின் கற்பனைச் சிறப்பு அமைந்திருக்கும் அழகு அச் செய்தியில் சுவையை ஊட்டிக் கவிதையைக் கவினுறச் செய்கிறது.

அன்னத்தைப் போல அணிநடை நடந்து அரசர் வீற்றிருக்கும் அவையில் தமயந்தி அமைதியாகச் செல்கிறாள். அப்பொழுது அவள் அழகில் தம் அறிவு மயங்கி அவள் பொன்னிற மேனியின் பொலிவில் தம் மனத்தைப் பறிகொடுத்த அவர்கள், விழித்த கண்களை மூடவே இல்லை என்கிறார். அதனால் அந்த மண்டபம் தாமரையே பூத்துக் கிடந்தது போலக் காட்சி அளித்தது என்கிறார். அத் தாமரை பூத்த தனி மண்டபத்தில் வெள்ளைநிறச் சிறையன்னம் செய்யதாளால் அசைந்து நடந்து செங்கமலப் பொய்கை நோக்கிச் செல்வதைப் போல வெள்ளிய ஆடையும், ஒள்ளிய மேனியும், சிவந்த வல்லி தீட்டிய தாளும் உடைய தமயந்தி சென்றாள் என்று கூறுகிறார்.

விழித்த கண்களைத் தாமரைக்கு உவமைப்படுத்துவதால், அம் மண்டபம் தாமரைப் பொய்கை போல இருந்தது என்றும், அங்கு அவள் நடந்து சென்றது அன்னம் செல்வதுபோல இருந்தது என்றும் உணர்த்தி அவர் தம் கற்பனையாற்றலை வெளிப்படுத்துவதைக் காண்கிறோம்.

**மன்னர் விழித்தா மரைபூத்த மண்டபத்தே**
**பொன்னின் மடப்பாவை போய்ப்புக்கள் - மின்னிறத்துச்**
**செய்யதாள் வெள்ளைச் சிறையன்னம் செங்கமலப்**
**பொய்கைவாய்ப் போவதே போன்று** - 138

அன்னப் பறவை தனக்கேயுரிய தாமரைப் பொய்கையில் அஞ்சாமல் மென்னடை நடந்து செல்வது போல நடந்து சென்ற அவள் நடையழகு அரசர்கள் கண்ணையும் கருத்தையும் கவர்ந்தது என்பதை 'மன்னர் விழித்தாமரை பூத்த மண்டபம்' என்ற தொடரில் அமைத்துக் காட்டியிருப்பது போற்றற்குரியது.

மங்கையொருத்தியின் செங்கையை மலர் ஒன்றுக்கு உவமைப்படுத்துவதோடு அமையாமல், மலரென மருளும் வண்டு அவளைச் சுற்றுவதாக அமைக்கும் காட்சியில் கற்பனைச் சிறப்பும் நகைச்சுவையும் அமைந்திருக்கின்றன. நளன் திருமணமான பிறகு தமயந்தியோடு நகரில் உள்ள சோலைவளம் காண மாலைவேளை செல்கிறான். அங்கே அவன் பல அழகிய காட்சிகளை அவளுக்குக் காட்டிச் செல்கிறான். அக் காட்சிகளில் ஒன்றாக இஃது அமைகிறது. மங்கையொருத்தி அங்கு மலர் கொய்து கொண்டிருக்கிறாள். அவள் ஒளிபெற்ற முகத்தை வண்டு ஒன்று கணடு, அவ்வழகு பொலியும் முகத்தை வண்ணமிகு தாமரையெனக் கருதி முகத்தில் மொய்க்கத் தொடங்குகிறது. அவள் அவ்வண்டைத் தன் முகத்தில் அணுகாவண்ணம் தன் கை விரலால் விலக்குகிறாள். அக் கைவிரல்களைக் காந்தள் மலரெனக் கருதி அவளை விடாமல் மீண்டும் அவள் கரங்களைச் சுற்றி வட்டமிடுகின்றது. அவள் அஞ்சி நடுங்கி வியர்க்கிறாள். இஃது அவர் அமைக்கும் கற்பனைச் சித்திரம்.

காந்தள் போன்றது கைவிரல் என்றும், தாமரை போன்றது முகம் என்றும் கூறுவதோடமையாமல், அவற்றை மலர்கள் என

வண்டுகள் மருள்வதாகக் கூறுவதில் அவர் கற்பனைச் சிறப்பு அமைந்திருக்கிறது.

**மங்கை யொருத்தி மலர்கொய்வாள் வாள்முகத்தைப்**
**பங்கய மென்றெண்ணிப் படிவண்டைச் - செங்கையால்**
**காத்தாளக் கைம்மலரைக் காந்தளெனப் பாய்தலுமே**
**வேர்த்தாளைக் காணென்றான் வேந்து - 198**

வண்டு தொடர்ந்து தரும் தொல்லையைக் கண்டு அவள் அஞ்சி வியர்த்துவிட்டாள் என்று கூறுவது நகைச்சுவையைத் தருகிறது.

தமயந்தியைப் பிரிந்து தனி வழி செல்லும் நளன் வழியில் தீயினியிடத்து அகப்பட்ட கார்க்கோடன் என்ற பாம்பை அதனினின்று காப்பாற்றிவிடுகிறான். அக் கார்க்கோடன் கொடுத்த சாபத்தால் நீலநிறம் பெற்று உருத்திரிந்து அவளைப் பிரிந்துவிட்ட பிரிவால் மனம் திரிந்து குழம்பிச் செல்கிறான், அவளைப் பிரிந்த ஆற்றாமையால் மனங்கலங்கி இன்னது செய்வது என்று தெரியாமல் திகைக்கிறான். வழியில் அவளைத் தனியே விட்ட தவற்றிற்காக மனம் வருந்துகிறான்.

மரக்கிளையொன்றில் நாரையொன்று உட்கார்ந்து கொண்டிருக்கிறது. பேசத்தெரியாத அதனிடம் பேசித் தன் துன்பத்தைக் குறைக்க முயல்கிறான். ''திருநாடன் பொன்னை உறக்கத்தே நீத்து வந்துவிட்ட எனக்கு ஒன்றும் கூறாதிருக்கின்றாயே'' என்று மனம் நொந்து பதில் சொல்லத் தெரியாத அப்பறவையிடம் பேசிக் கலங்குகிறான். ஆண் வண்டு ஒன்று புன்னைமரத்தில் அமர்ந்து அதன் பூவைக் கோதிக் கன்னிப்பெடை வண்டு உண்ணும்வரை காத்திருக்கும் அன்புச் செயலைக் கண்டு உள்ளம் அழிகிறான். காதலியைக் காரிருளில் கானகத்தே கைவிட்டுவந்த செயல் கொடுமை மிக்கது என உணர்கிறான். இவ்வாறு அவன் உள்ளத்தில் தோன்றும்

குழப்பத்தையும் நெஞ்சில் வெடிக்கும் எரிமலை போன்ற பிரிவுத் துன்பத்தையும் சொல்லும் பொழுது, புலவரின் கற்பனை மிகவும் உயர்ந்துவிடுகிறது என்று கூறலாம். பேசாத நண்டோடும் கேளாத கடலோடும் அவனைப் பேச வைக்கின்றார்.

கடற்கரையோரமாக நளன் சென்று கொண்டிருக்கிறான். கரையோரத்தில் நண்டுகள் அவன் வருவதைக் கண்டு அஞ்சி ஓடித் தம் வளையில் ஒளிந்துகொள்கின்றன. அவற்றைப் பார்த்து, 'நண்டே நீ ஏன் ஒளிகின்றாய்? காதலியைக் காரிருளில் கானகத்தே கைவிட்ட பாதகனைப் பார்க்கக் கூடாது என்பதற்காகவா ஓடி ஒளிகிறாய்? பசையற்ற நெஞ்சோடு பரிதவிக்க விட்டுச் சென்ற மாபாதகன் என்றெண்ணி என்னைப் பார்க்க வெறுக்கிறாயோ?'' என்று கூறும் கற்பனை, இலக்கியத்தில் அழியா இடம் பெறுகிறது.

**காதலியைக் காரிருளில் கானகத்தே கைவிட்ட**
**பாதகனைப் பார்க்கப் படாதென்றோ - நாதம்**
**அளிக்கின்ற ஆழிவாய் ஆங்கலவ-ஓடி**
**ஒளிக்கின்ற தென்னோ உரை?** — 354

''நண்டே! என்னைக் கண்டு ஓடி ஒளிப்பது ஏன்?'' என்று மிக உருக்கமாகக் கேட்கிறான். தன் செயலின் கொடுமையைக் 'காதலியைக் காரிருளில் கானகத்தே கைவிட்ட' என்ற தொடரில் மெல்ல மெல்ல மிகுவித்துச் சொல்வதைக் காண்கிறோம்.

கரையில் நண்டோடு பேசுவதாகக் கூறும் கற்பனை அதனோடு அமையவில்லை. கடலை நோக்கித் திரும்பிப் பார்க்கிறான். கடலின் அலைகள் எழுந்து விழுந்து புரண்டு உருண்டு ஓவென ஒலித்து அலைத்துச் செல்லும் காட்சியைக் காண்கிறான். தன் உடல் நீலநிறம் பெற்று இருப்பதைப் போலக் கடல் நீரிலும் நீலநிறம் இருப்பதைக் காண்கிறான். ''நீயும் என்னைப் போலத் தீயவர்க்கு உதவிசெய்து நிறம்

கெட்டாயோ?'' என்று கேட்கிறான். நீயும் என்னைப்போல உன் காதலியை இரவில் தவிக்கவிட்டு வந்தாயோ? அதனால்தான் இன்னது செய்வது என்று தெரியாமல் போகிறாய்; வருகிறாய்; புரண்டு விழுந்து இரங்கி வருந்துகிறாய். நாவும் வாயும் குழற நடுங்குகிறாயோ'' என்று கேட்கிறான்.

**போவாய் வருவாய் புரண்டு விழுந்திரங்கி**
**நாவாய் குழற நடுங்குறுவாய் - தீவாய்**
**அரவகற்றும் என்போல ஆர்கலியே! மாதை**
**இரவகற்றி வந்தாய்கொல் இன்று** — 356

என்று, தனக்கு ஏற்பட்ட நிகழ்ச்சிகளையெல்லாம் கடலின் அலைகளில் காணும் அழகு, புலவரின் கற்பனைச் சிறப்பைக் காட்டுகிறது. நாவாய் என்பதற்கு மரக்கலம் என்று மற்றொரு பொருளும் அமையச் சிலேடையணி சிறக்க அமைந்திருப்பது சொல் நயத்தை உண்டாக்குகிறது.

நளன் தமயந்தியோடு தன் நாடு திரும்பிச் சூதால் இழந்த உரிமையை மறு சூதாடி வென்று நாட்டாட்சியைப் பெற்ற நிலைமையில் மக்கள் அடைந்த மகிழ்ச்சியைச் சொல்லும் பொழுது, தக்க உவமைகளை எடுத்தாள்வதும் அவற்றைக் கூறும் முறையும் சிறப்பாக அமைந்துள்ளன. 'பார் பெற்று மாதோடு திரும்பிய நளனைக் கண்ட மக்களின் மகிழ்ச்சியைத் தக்க உவமையால் எப்படிக் கூறுவேன்?'' என்று சொல்லும் சிறப்பு அழகாக அமைந்திருக்கிறது.

**கார்பெற்ற தோகையோ கண்பெற்ற வாள்முகமோ**
**நீர்பெற் றுயர்ந்த நிறைபுலமோ — பார்பெற்று**
**மாதோடு மன்னன் வரக்கண்ட மாநகருக்கு**
**ஏதோ உரைப்பன் எதிர்?** — 425

என்று கூறுகின்றார்.

புகழேந்தியின் புகழுக்கு அவர் எடுத்துக்கொண்ட கதை மட்டும் காரணமன்று. கம்பர் தம் கற்பனைத்திறத்தால் இராம கதையைச் சிறப்பித்ததைப் போலப் புகழேந்தியும் வடமொழிக் கதையைத் தமிழில் இனிய வெண்பாவால் இன்னோசைபட இயற்றி அணியும் கற்பனையும் சிறக்கக் காவியத்தை அமைத்துள்ளார் என்பது அறியக் கிடக்கிறது.

# 5. அன்புடை நெஞ்சம்

வெறும் வெளித்தோற்றங்களை வருணிக்கும் கவிஞனைவிட மனவியல்பை விவரிக்கும் கவிஞனே சிறந்தவனாகப் போற்றப்படுவான். நெஞ்சின் இயல்பையும், அதில் தோன்றும் பலவித உணர்வுகளையும், அதனால் வெளிப்படும் எண்ணங்களையும் பாங்காகக் காட்டுவதே சங்க விலக்கியப் பாடல்களின் அடிப்படையெனலாம். ஒருவன் ஒருத்தியரிடைத் தோன்றும் காதலையும், அக்காதல் வளரும் அன்புடை நெஞ்சங்களையும், அக்காதலால் மகிழும் மகிழ்ச்சியையும், பிரிவால் நேரும் துன்பத்தையும் காட்டுவதில், இப்பாடல்கள் தலைசிறந்து விளங்குகின்றன. உள்ளத்தெழும் அகவுணர்வுகளைப் பாடுவதால், இப் பாடல்களுக்கு அகப்பாடல்கள் எனப் பெயர் வழங்குவர். அகநானூறு, நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை முதலியன இவ்வகையைச்சாரும். அன்புடை நெஞ்சத்தை விளக்கும் காட்சிகள் பலவற்றை இப்பாடல்களால் நாம் அறிகிறோம்.

தலைவன் ஒருவனும் தலைவியொருத்தியும் சந்தித்து உள்ளம் ஒன்றுபட்டு உவகை கொள்ளுகின்றனர். அவ்வவ்வகையில் அவர்கள் பாடி மகிழ்வது அந்த உள்ளம் ஒன்றுபட்ட நிலையைத்தான் என்பதைக் குறுந்தொகைப் பாட்டு ஒன்று விளக்குகிறது. ''உன்னுடைய தாயார் எவரோ, என்னுடைய தாயார் எவரோ, அவர்களுக்குள் இதற்குமுன் எந்த உறவும் ஏற்பட்டதில்லை; அதைப்போலவே உன்னுடைய

தந்தைக்கும் என்னுடைய தந்தைக்கும் இதற்குமுன் எந்த உறவும் இருந்ததில்லை. நீயும் நானும் முன் உறவு கொண்டவர்கள் அல்லர். எனினும் நம்முடைய உள்ளம் அன்பால் ஒன்றுபட்டுப் பிணைக்கப்பட்டுள்ளன. வானத்திலிருந்து வையகத்தில் விழும் மழைத்துளிகள் செம்மண்ணில் கலந்து செங்குழம்பாகிவிட்டால், அவற்றைத் தனித்துப் பிரித்துக் காண முடியாதவாறு போல இனி ஒன்றுபட்ட நம் உள்ளத்தைப் பிரிக்கமுடியாது; அன்புடை நெஞ்சம் தாமாகக் கலந்துவிட்டன'' என்று கூறுகிறான்.

**யாயும் ஞாயும் யாரா கியரோ**
**எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்**
**யானும் நீயும் எவ்வழி யறிதும்**
**செம்புலப் பெயல்நீர் போல**
**அன்புடை நெஞ்சந் தாங் கலந்தனவே**

**- குறுந்தொகை - 40**

என்று தம் அன்புடை நெஞ்சம் ஒன்றுபட்ட செய்தியைப் பண்பு குன்றாமல் பாடுகிறான்.

மற்றொரு குறுந்தொகைப் பாடல், தலைவன் தலைவியர் வாழ்வில் காணும் அன்புடை நெஞ்சத்தைக் காட்டுவதோடு அதனை விளக்க விலங்குகளின் வாழ்வில் காணும் அன்புடை நெஞ்சத்தையும் உடன் சுட்டுகிறது. ஒரு தோழி தலைவன் வரும் வழியருமையை அவனுக்குக் கூறி அக்கொடிய வழியில் அவன் வருவதால் தலைவி நெஞ்சம் துடிப்பாள் என்ற செய்தியை அவனுக்குத் தெரிவிக்கிறாள். அதை விளக்க, அவன் நாட்டில் உள்ள பெண் குரங்கின் அன்பு உள்ளத்தையும் அதன் செயலையும் சேர்த்துக் கூறுகிறாள்.

ஆண் குரங்கு இறந்துவிட்டது என்ற செய்தியைப் பெண்குரங்கு அறிகிறது. இனித் தனித்து வாழ்ந்து கைம்மை நோன்பு நோற்க விரும்பாத மந்தி தன் குட்டிகளைத் தன்

சுற்றத்திடம் ஒப்படைத்துவிட்டுப் பெரிய மலையின் உச்சியில் ஏறிக் கீழே விழுந்து உயிர்விடுகிறது. இச்செய்தியைக் கூறி அத்தகைய பண்புமிகு அன்புடை நெஞ்சத்தையுடைய மந்தி வாழும் நாடனே! என்று அவனை விளித்துக் கூறுகிறாள்; அதனால் தலைவியும் அவன் நடு இரவில் வருவதை அஞ்சுகிறாள் என்று அவள் நடுங்கும் நெஞ்சத்தைக் காட்டுகிறாள். மக்களின் அன்புடை நெஞ்சத்தைக் காட்ட விலங்குகளின் அன்பான வாழ்வைப் புலவர்கள் காட்டுவதற்கு இப்பாடல் ஓர் எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

**கருங்கண் தாக்கலை பெரும்பிறி துற்றெனக்**
**கைம்மை யுய்யாக் காமர் மந்தி**
**கல்லா வன்பறழ் கிளைமுதற் சேர்த்தி**
**ஓங்குவரை யடுக்கத்துப் பாய்ந்துயிர் செகுக்கும்**
**சாரல் நாட நடுநாள்**
**வாரல் வாழியோ வருந்துதும் யாமே**

**- குறுந்தொகை, 69**

மந்தியின் அன்புடை நெஞ்சின் இயல்பைக் காட்டித் தலைவியின் நெஞ்சு அதைவிட நெகிழ்வும் பிரிவாற்றாமையும் உடையது என்று உணர்த்துகிறாள்.

அன்பால் பிணைக்கப்பட்ட நெஞ்சங்கள் நடத்தும் இல்லற வாழ்க்கை இன்பமும் நிறைவும் கொண்ட வாழ்வாகும் என்பதை இவ்வகப்பாடல்கள் உணர்த்துகின்றன.

திருமணமான பிறகு ஒரு தலைவனும் தலைவியும் வாழ்க்கை தொடங்குகின்றனர். அவள் உணவு இட அதனை உண்டு மகிழ அவன் விழைகிறான். அவளுக்கும் அவனுக்குத் தன் கையால் முதன்முதலில் உணவு பரிமாற வேண்டும் என்ற ஆவல் எழுகிறது. விரைவில் உணவு அட்டு அவனுக்கு இடவேண்டும் என்ற ஆர்வம் அவளை உந்துகிறது. புளிக்குழம்பு செய்யும் பொருட்டு அக் குழம்பினைக் கூட்டி வைக்கத் தன்

கையால் துழாவி அதனை அமைக்கும் ஆர்வத்தால், அப்படியே தான் அணிந்துகொண்டிருந்த புடவையில் கையைக் கழுவாமல் துடைத்துக்கொண்டு, அந்தக் குழம்பைத் தாளிதம் செய்து, அக் குய்ப்புகை அவள் கண்களில் படியத் தானே துழாவி அட்ட புளிக் குழம்புச் சோற்றினை அவனுக்கு இட்டு, ஆர்வமும் அன்பும் பெருக அவன் முன்னால் நின்று அவன் பாராட்டுதலை எதிர்பார்க்கிறாள். அவள் குறிக்கோளெல்லாம் அவ்வுணவை உண்ணும் அவன் வாயிலிருந்து 'இனிது' என்ற சொல்லைக் கேட்பதாக இருக்கிறது. அவள் துழந்து அட்ட உணவு இனிதாக இருக்கிறது என்று அவன் கூறும் சொற்கள் அவள் உள்ளத்து மகிழ்ச்சியை மிகுதிப்படுத்துகின்றன. புதுமண வாழ்வால் பொலிவு பெற்ற அவள் அழகிய முகம் நுட்பமாக அச் சிறு மகிழ்ச்சியை மிகுதிப்படுத்துகின்றது. அவ்வன்புடை நெஞ்சங்கள் நடத்தும் அகவாழ்வு இச் சிறுநிகழ்ச்சிகளால் பொலிவு பெறுகின்றது.

**முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்**
**கழுவுறு கலிங்கங் கழாஅ துடீஇக்**
**குவளை உண்கண் குய்ப்புகை கமழத்**
**தான்துழந் தட்ட தீம்புளிப் பாகர்**
**இனிதெனக் கணவன் உண்டலின்**
**நுண்ணிதின் மகிழ்ந்தன்று ஒள்நுதல் முகனே**

**- குறுந்தொகை, 167**

மற்றொரு தலைவன் தனக்கும் அவளுக்கும் நேர்ந்த ஊடல் தீர்வதற்கு விருந்தினர் வருகையை எதிர்பார்க்கிறான். விருந்தால் அவள் உவந்து முறுவல் கொள்ளும் முகத்தைக் காணும் காட்சியை எதிர்நோக்கும் ஆவலில் அவர்கள் அன்புடை நெஞ்சம் சித்திரிக்கப்படுகின்றன. விருந்து வந்தால், அவள் அவனோடு அவர்களை வரவேற்க முறுவல் கொள்வாள், அதனால் அவள் மகிழும் முகத்தைப் பார்க்கமுடியுமே என்று அவாவுகிறது அவன் நெஞ்சு.

கணவனோடு பிணக்குக் கொண்ட காரணத்தால், கதவைத் தாளிட்டுக்கொண்டு தனியே சமையலறையில் தன் கடமையில் கண்ணுங் கருத்தும் செலுத்தியவளாய், அவனிடம் பேச மனமில்லாதவளாய் விருவிருப்பாகத் தன் கடமைகளைச் செய்துகொண்டிருக்கிறாள் ஒரு தலைவி. அவள் வாளைமீனைக் கழுவி அறுத்து வகைப்படுத்திச் சமையல் செய்யத் தொடங்குகிறாள். கண்களில் புகைபடிய, நெற்றியில் வியர்வை துளிர்க்க, அவற்றைத் தன் புடைவையில் துடைத்துக் கொண்டு, அவனிடம் பேசாமல் சமையலறையில் தன் கடமைகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறாள். அவள் முகத்தில் புன்னகை தவழுமா என்று எதிர்பார்த்து நிற்கிறான். புன்னகை தவழவில்லையென்றாலும், புன்முறுவலாவது அவள் முகத்தில் மெல்லத் தோன்றக்கூடாதா என்று ஏங்குகிறது அவன் நெஞ்சம். ''முன்பெல்லாம் வரும் விருந்தினர் இப்பொழுது வரக்கூடாதா? அவர்கள் பொருட்டாவது அவள் முகம் மலருமே! அம் மலர்ந்த முகத்தை அப்பொழுதாவது பார்க்க முடியுமே! எங்கள் ஊடலும் மெல்லத் தணியுமே!''என்று அவன் அன்புடை நெஞ்சம் எதிர்பார்க்கும் காட்சியை நற்றிணைப் பாடல் ஒன்று காட்டுகிறது.

**தடமருப்பு எருமை மடநடைக் குழவி**
**தூண் தொறும் யாத்த காண்தகு நல்லில்**
**கொடுங்குழை பெய்த செழுஞ்செய் பேதை**
**சிறுதாழ் செறித்த மெல்விரல் சேப்ப**
**வாளை ஈர்ந்தடி வல்லிதின் வகைஇப்**
**புகையுண்டு அமர்த்த கண்ணள் தகைபெறப்**
**பிறைநுதல் பொறித்த சிறுநுண் பல்வியர்**
**அந்துகில் தலையின் துடையினள் நப்புலந்து**
**அட்டி லோளே அம்மா அரிவை**
**எமக்கே வருகதில் விருந்தே சிவப்பான்று**
**சிறியமுள் எயிறு தோன்ற**
**முறுவல் கொண்ட முகம் காண் கம்மே** - நற்.120

முள் போன்ற சிறு எயிறு தோன்ற அவள் முகத்தில் புன்முறுவல் தோன்ற வேண்டும் என்று அத்தலைவன் எதிர்பார்க்கின்றான். துகில்தலைப்பால் நெற்றியில் தோன்றும் சிறு வியர்வைகளைத் துடைத்துக் கொண்டு, அந்த அட்டில் இடத்தைவிட்டு அகலாமல் அவனோடு புலந்து வெறுத்து இருக்கிறாள், அத்தகைய நிலையில் அவள் மனம் சிறிது வேறு வகையாகத் திரும்பினால் நலமாக இருக்குமேயென்று கருதுகிறான். அந்த வீடு எருமையும் அதன் கன்றும் தூண்தோறும் கட்டப்பட்டு அழகாக விளங்குகிறது. அந்த இல்லில் வாளை மீனை வகைப்படுத்தி அட்டில் தொழிலில் ஈடுபடும் தலைவியின் நிலை இவ்வாறு வருணிக்கப் பட்டிருக்கிறது. அவள் அன்புடை நெஞ்சத்தில் ஏற்பட்டிருக்கும் சிறு வெறுப்பை அவன் உள்ளம் மாற்ற அவாவும் நிலைமையை இப்பாடல் காட்டுகிறது.

ஒருவரை ஒருவர் பிரிவதால் ஏற்படும் ஆற்றாமையால் அல்லலுறும் நெஞ்சின் துயரைச் சங்கத்துச் சான்றோர் காட்டுவதில் வல்லவராக விளங்கினர் என்பதைப் பாலைத் திணையில் வரும் பாடல்கள் அறிவுறுத்தும். தலைவன் பொருள் காரணமாகவோ போர்வினை காரணமாகவோ பிரியும் பிரிவுக்குப் பாலை என்றும், அவ் வொழுகலாற்றைப் பாலைத் திணை என்றும் கூறுவர். இப் பாலைத்திணைப் பாடல்கள் அன்புடை நெஞ்சங்கள் பிரிவால் உறும் அல்லலை அழகுபடக் கூறுகின்றன.

செய்வினை முடிக்கச் சேண் தூரஞ் சென்றுவிட்ட தலைவன் காதல்நெஞ்சு ஒருபுறம், கடமை உணர்வு ஒருபுறம் என இவ்விரு நிலைகளால் அலைக்கப்பட்டுக் கரைகாண முடியாமல் திகைக்கின்றான். நெஞ்சு அவளிடத்தில் கொண்ட விழைவால், விரைவில் வீடுதிரும்ப வேண்டும் என்ற வேட்கையை மிகுதிப்படுத்துகின்றது. அவனுடைய அறிவு கடமை பெரிது என்றும், அதனால் செய்வினை முடித்துவிட்டு

வீடு திரும்புதலே சிறப்பு என்றும் அறிவுறுத்துகிறது. அறிவுக்கும் உணர்வுக்கும் இடையே நடக்கும் மனப்போராட்டத்தின் நடுவில் உடம்பு அகப்பட்டு மெலிந்துவிடுகின்றது. இந்நிலை வலிய மருப்புடைக்களிறு இரண்டு இருபுறம் தனித் தனியே நின்று தேய்ந்த பழங்கயிறு ஒன்றன் இருபுறத்தையும் பற்றி இழுக்க, அது மெலிந்து அறுந்துபோகும் நிலைக்கு உவமிக்கப்பட்டுள்ளது. களிறுகளால் ஈர்க்கப்படும் தேய்புரிப் பழங்கயிற்றின் நிலையைப் போல் இருவேறு உணர்வுகளால் அலைக்கப் பெற்று மெலிந்த தலைவன் உடல் நலிந்து விடுகிறதென்று கூறப்படுகிறது. தலைவன் நெஞ்சில் எழும் அலைகளின் அலைப்பால் மெலியும் அவன் உடல், அறுந்து விழும் தேய்ந்த பழங்கயிற்றுக்கு உவமைப் படுத்துகின்றார்:

**புழந்தாழ்பு இருண்ட கூந்தற் போதின்**
**நிறம்பெறும் ஈரிதழ் பொலிந்த உண்கண்**
**உள்ளம் பிணிக்கொண் டோள்வயின் நெஞ்சம்**
**செல்லல் தீர்க்கம் செல்வாம் என்னும்**
**செய்வினை முடியாதுஎவ்வம் செய்தல்**
**எய்யா மையோடு இளிவுதலைத் தருமென**
**உறுதி தூக்கத் தூங்கி அறிவே**
**சிறிதுநனி விரையல் என்னும் ஆயிடை**
**ஒளிறேந்து மறுப்பிற் களிறுமாறு பற்றிய**
**தேய்புரிப் பழங்கயிறு போல**
**வீவது கொல்என் வருந்திய உடம்பே**

**-நற்றிணை, 284**

என்று மனப் போராட்டங்களைத் தக்க உவமை கொண்டு விளக்கும் நிலையைப் பார்க்கிறோம். அன்புடை நெஞ்சம் தாங்கும் அல்லலை அவ்வுவமை அழகு பட உணர்த்துகிறது.

தலைவியைப் பிரிந்த தலைவனின் தனிமை நெஞ்சம் மேலே விவரிக்கப்பட்டவாறு போலவே மற்றொரு புலவர் தலைவனைப்பிரிந்து தனிமையால் வாடும் தலைவியின்

நெஞ்சத்தின் தன்மையைப் புலப்படுத்துகின்றார், தலைவன் உடனிருந்தபோது உவகை கொண்டு வளமான வாழ்வைப் பெற்ற தலைவி, அவன் அவளைப் பிரிந்துவிட்ட காரணத்தால் தனிமையுறுகிறாள். அவள் நெஞ்சு அவன்மாட்டுச் சென்றுவிட்ட காரணத்தால் உணர்வு குன்றி உடம்பை மட்டும் வீணுக்காகப் பேணுவது போன்ற உணர்வால், வாழ்வில் வெறுப்பும் சலிப்பும் கொள்கிறாள். அவள் அடைந்த தனிமை நிலைமைக்கு வேறோர் தனிமை நிலைமை உவமையாகக் கூறப்படுகின்றது. வெஞ்சின வேந்தனின் வெம்பகையால் அலைப்புண்ணல் அஞ்சி, மக்கள் தாம் வாழும் பேரூரை விட்டு அகன்றுவிட, அதனைக் காக்கும் தனி மகன் ஒருவன் தனிமைத் துயராலும் விருப்பற்ற உணர்வாலும் வாழ்க்கையை வெறுத்து, வாழ்வைச் சுமையாகக் கருதி நாட்களைக் கடத்தும் நிலையைப் போன்று இவள் வாழ்வு அமைந்திருப்பதாகக் கூறுகிறாள் பாழ் காத்திருக்கும் தனிமகன் உடலை விருப்பின்றிப் பேணுமாறு போல் இவ்வுடம்பைக் காக்க வேண்டிருப்பதாகத் தலைவி கருதுகிறாள்:

**நெஞ்சம் அவர்வயின் சென்றென ஈண்டொழிந்து**
**உண்டல் அளித்துஎன் உடம்பே விறற்போர்**
**வெஞ்சின வேந்தன் பகையலைக் கலங்கி**
**வாழ்வோர் போகிய பேரூர்ப்**
**பாழ்காத் திருந்த தனிமகன் போன்றே**

**- நற்றிணை, 153**

வாழ்வோர் போய்விட்ட காரணத்தால் வெறுமையுற்ற பேரூராகிய பாழிடத்தைக் காக்கும் தனிமகனைப் போன்று, நெஞ்சு நீங்கிவிட்ட காரணத்தால் தனிமையும் உடம்பு உணர்வற்றுக் கிடக்கிறது என்று உணர்த்துகிறாள். இவ்வாறு பிரிவால் அன்புடை நெஞ்சங்கள் படும் அல்லலைப் பாலைத்திணைப் பாடல்கள் உணர்த்தக் காண்கின்றோம்.

முல்லைத் திணைப் பாடல் ஒன்று, இல்லிருந்து ஆற்றித் தலைவன் வருகையை எதிர்பார்க்கும் தலைவியின்

ஆவலுள்ளத்தை அணிபட எடுத்துக் காட்டுகின்றது. கார்காலம் வருவதற்குள் செய்வினை முடித்து வீடுதிரும்பி வருவதாகச் சொன்ன தலைவன் குறித்த காலத்தில் வீடு திரும்பவில்லை. காரோ வந்தது; அவன் தேர்மட்டும் வரவில்லை. அந்த நிலையில் கார்காலத்து முல்லை மலர்கள் பூக்கத் தொடங்கிவிட்டன. முல்லை முகைகளைப் பற்களாகக் கொண்டு கார்காலம் அவள் தனிமையைப் பார்த்துச் சிரிப்பது போல் இருக்கிறது என்று தலைவி கூறுவதாக ஆசிரியர் அமைக்கிறார். வினைமுடித்து வரவேண்டிய தலைவன் வராததால் உலகமே அவளைப் பார்த்துச் சிரிப்பதுபோல இருக்கிறது. இளமை பாராமல் வளம் விரும்பிப் பிரிந்து சென்ற தலைவர் எவணரோ என ஏங்கும் தலைவியின் நெஞ்சு, முல்லை மலரைப் பார்த்து மகிழாமல், அவை கார்காலம் வந்துவிட்ட செய்தியை அறிவிப்பனவாக உணர்கிறது. முல்லை மலர்ந்தும் அவன் ஒல்லையில் வரவில்லையே என்று அவள் ஏங்குகிறாள்.

**இளமை பாரார் வளநசைஇச் சென்றோர்**
**இவணும் வாரார் எவணரோ வெனப்**
**பெயல்புறந் தந்த பூங்கொடி முல்லைத்**
**தொகுமுகை யிலங்கெயி றாக**
**நகுமே தோழி நறுந்தண் காரே — குறுந்தொகை 126**

என்று அவள் அன்புடை நெஞ்சம் அவன் வாராமையால் அடைந்த கவலையைக் காட்டுகிறது. அந்தக் கவலையை இயற்கை நிகழ்ச்சியான மலரின் மலர்ச்சியோடு தொடர்பு படுத்திச் சொல்வது அணிநயம்பட அமைந்துள்ளது. ''முல்லையின் முகை என்னைப் பார்த்து நகைக்கின்றதே'' என்று தலைவி சொல்லும் இக் கூற்றில் அவனுக்காக ஏங்கும் அவளுடைய அன்புடை நெஞ்சம் வெளிப்படுகின்றது.

இல்லிருந்து நல்லறம் ஓம்பும் இல்லாளின் இனிய முகத்தைக் காண ஆவலுறும் தலைவனின் அன்புடைய நெஞ்சை

நற்றிணைப் பாடல் ஒன்று காட்டுகிறது. அவர்கள் அன்பு அவர்கள்பால் மட்டும் பரவாமல் பெற்ற மகனிடத்தும் உற்ற உறவினரிடத்தும் பரவுகிறது. இச் செய்தியை இப்பாடல் நன்கு காட்டுகிறது. கார்காலம் வந்துவிட்டதை உணர்ந்து தலைவன் குறித்த காலத்தில் வீடுதிரும்ப விழைகிறான். அதனால் தேரினை விரைவில் செலுத்துமாறு பாகனை ஏவுகிறான். வீட்டில் விடியற்காலையில் தன் மனைவி குழந்தையை எழுப்பி இன்னுரையாடும் இனிய சொற்களைக் கேட்க அவன் அவாவுகிறான். தலைவி விருந்து விரும்புவள் ஆதலின், அவன் விரைவிற் சென்று, விருந்தினரை ஏற்ற இல்லறம் சிறப்புற நடைபெறச் செய்ய வேண்டும் என்று விரும்புகிறான். அதனால் அவன் மனம் தலைவியை மட்டும் நாடாமல் மகனிடத்தும் இருவரும் இருந்து வரவேற்கும் விருந்தினரிடத்தும் பரவுகிறது என்று அறிய முடிகிறது.

**செல்க பாக! நின் செய்வினை நெடுந்தேர்;**
**விருந்து விருப்புறூஉம் பெருந் தோள் குறுமகள்**

**....................................................**

**பூங்கண் புதல்வன் தூங்குவயின் ஒல்கி**
**வந்தீக எந்தை என்னும்**
**அந்தீம் கிளவி கேட்க நாமே** - **நற்றிணை, 221**

குழந்தையையும் தாயையும் ஒருசேரக் காண வேண்டும் என்ற அவன் அன்பு நெஞ்சம் அவாவுகின்றது. இல்லறத்தின் மாட்சியை நன்குணர்ந்த தலைவன் விருந்தினரை வரவேற்பதில் தலைவி கொண்டுள்ள விருப்பைக் குறிப்பிடுகின்றான். தான் இல்லாமல் அவள் தனியாக விருந்தினரைப் போற்ற முடியாதே என்பதால், விரைவில் செல்லவேண்டும் என்று அவன் விரும்புகிறான். பண்பட்ட அவன் உள்ளம் தன் அன்பை எதிர்பார்க்கும் மனைவியிடத்தும், இருவரும் வளர்க்கும் அன்புச் செல்வமாகிய குழந்தையிடத்தும், அவர்கள் இருந்து போற்றும் விருந்தினரிடத்தும் சுற்றி வளர்ந்துள்ளமையை இப்பாட்டுக் காட்டுகின்றது.

பலநாள் பிரிந்து இருந்த தலைவிக்குத் தலைவனின் வருகையில் ஒரு புதுமை காண்பது இயல்பு. அதனால் விருந்து விருப்புறும் தலைவி என்பதற்குத் தலைவனின் புதிய வருகையை எதிர்பார்க்கும் தலைவி என்று கொள்ளினும் அமையும் 'தலைவியின் ஆவல் நிறைந்த நெஞ்சு மகிழ, நீ விரைவில் தேரைச் செலுத்து' என்று தலைவன் கூறுவதாகவும் கொள்ளலாம். தலைவியின் ஆவல் நெஞ்சையும் மகனோடு மகிழ்ந்து பேசும் அன்புக் காட்சியைக் காண அவாவும் தலைவனின் நெஞ்சையும் இப் பாடல் வெளிப்படுத்துகிறது என்றும் கூறலாம்.

அன்புடைய நெஞ்சம் என்பது தலைவன் தலைவியரிடை மட்டும் நிலவுவதொன்றன்று என்பதையும், ஏனையவரிடத்தும் அவ்வன்பு நெஞ்சம், உடனிருப்பதால் மகிழ்ச்சியையும் பிரிவ தால் துயரத்தையும் தரவல்லது என்பதையும் சங்கப் பாடல்களே அறிவுறுத்தும். மகளைப் பெற்று வளர்த்த தாய், தன் மகள் தன் ஆருயிர்த் தலைவனோடு அருஞ்சுர வழியில் உடன்போக, அதனால் அவளை நாடித் தேடி அலமந்து மனஞ்சோர்ந்து கூறும் கூற்றில், பெற்ற மனத்தின் அன்புள்ளம் வெளிப்படுகிறது.

தலைவி ஒருத்தி தான் விரும்பும் தலைவனோடு வேற்றூர் சென்றுவிடுகிறாள். வீட்டில் அவளை வளர்த்த தாய் அவள் சென்ற இடமெல்லாம் தேடி, வருவாரையெல்லாம் அவர்கள் சென்றவிடம் தெரியுமா என்று வினவுகின்றாள். அவர்கள், பெண்கள் தம் தலைவரோடு உடன்போவது இல்லறத்தின் நல்லறம்தான் என்றும், யாழிலே பிறக்கும் இசை யாழுக்குரிய தாகாமல் கேட்பவர்க்கே உரியது போலவும், கடலிலே பிறக்கும் முத்து அணிபவர்க்கே உரியது போலவும், மலையிலே பிறக்கும் சந்தனம் துய்ப்பவர்க்குப் பயன்படுவது போலவும் பிறந்த அகத்தைவிட்டுத் தலைவன் அகம் செல்வதுதான் பெண்களின் இயல்பு என்றும், இன்ன பிறகூறி அவலத்தை ஆற்றியிருக்குமாறு

வற்புறுத்துகின்றனர். அந்த அவலத்தை ஆற்றுதல் ஒல்லாது என்று அவள் வெளிப்படுத்தும் கருத்தில் அன்பு நெஞ்சத்தின் ஆழத்தைக் காணமுடிகிறது.

''எனக்கு இருப்பது ஒரே மகள். அவளும் நேற்று வீரமிக்க தலைவனோடும் பெருமலையில் அரிய வழி கடந்துசென்று விட்டாள். இனி நீங்கள், 'அவலத்தைத் தாங்கு' என எளிதில் கூறிவிடுகின்றீர்கள். அஃது எவ்வாறு ஒல்லும்? அறிவால் ஆராய்ந்து எளிது என்று கூறுவதை யெல்லாம் உணர்வால் எளிதில் ஏற்றுக் கொள்ள இயல்வதில்லை. என் குறுமகள் விளையாடிக் கொண்டிருந்த நொச்சி மரத்தையும் அதனருகில் உள்ள வீட்டுத் திண்ணையையும் கண்டால், அவள் இல்லாத காரணத்தால் வெறுமையான காட்சி ஈந்து அவலத்தைத் தருகிறது; என் உள்ளம் வேகிறது. அவளின்றித் தனித்திருக்கும் அந்த இடங்களைக் கண்டு அத் தனிமைக் காட்சியைத் தாங்க என் உள்ளத்திற்கு ஆற்றலில்லை. அவள் பயின்ற இடமெல்லாம் இப்பொழுது வெறுமையுற் றிருக்கின்றது'' என்று கூறுகிறாள்.

**ஒருமகள் உடையேன் மன்னே அவளும்**
**செருமிகு மொய்ம்பிற் கூர்வேற் காளையொடு**
**பெருமலை அருஞ்சுரம் நெருநற் சென்றனள்**
**இனியே, தாங்குநின் அவலம் என்றிர் அதுமற்று**
**யாங்ஙனம் ஒல்லுமோ அறிவுடை யீரே**
**உள்ளின் உள்ளம் வேமே உண்கண்**
**மணிவாழ் பாவை நடைகற் றன்னஎன்**
**அணியியல் குறுமகள் ஆடிய**
**மணியேர் நொச்சியுந் தெற்றியும் கண்டே**

**– நற்றிணை, 184**

''கண்ணிலுள்ள மணிப்பாவை வெளியே வந்து நடைகற்பது போல அழகாக நடந்து விளையாடிய அச் சிறுமகள் இப்பொழுது அகன்றுவிட்டதால் கண்களில் ஒளியிழந்து

நிற்கிறேன்'' என்ற கருத்தை, 'மணிவாழ் பாவை நடை கற்றன்ன என் அணியியல் குறுமகள் ஆடிய' என்ற தொடரில் அமைத்துள்ளமையை அறிகின்றோம். ''அக் குறுமகள் இப்பொழுது பெருமகளாகிவிட்டது தான் என்னால் தெரிந்து கொள்ள முடியவில்லை. அத்தகைய அறிவு எங்ஙனம் வந்ததோ'' என்றெல்லாம் எண்ணி அலைந்து வருந்தும் அன்னையின் அன்புடைய நெஞ்சம் அவளைக் 'குறுமகள்' என்ற தொடரால் குறிக்கின்றது.

இவ்வாறு அன்புடை நெஞ்சத்தின் பண்புமிக்க எண்ணங்களையும் அவற்றால் தோன்றும் செயல்களையும் சங்கப் பாடல்கள் அறிவுறுத்தும் அழகை நாம் அப்பாடல்கள் கொண்டு அறியமுடிகிறது. அவை உணர்வின் ஓவியங்களாக அமைந்து, நெஞ்சில் எழும் அலையோசைகளாக நம் செவியில் படுகின்றன.

# 6. உறவும் துறவும்

தமிழ் நூல்கள் பல, சமயத்தின் அடிப்படையில் எழுந்துள்ளன. பல புலவர்கள் சமயம் வளரவும் பரவவும் இலக்கியத்தைத் தக்க கருவியாகப் பயன்படுத்தினர். அவ்வாறு சமயத்தின் அடிப்படையில் எழுந்தனவே மணிமேகலை, சீவகசிந்தாமணி, பெரியபுராணம முதலிய நூல்கள் எனலாம். இலக்கியத்தின் நோக்கம் சிறந்த கொள்கைகளையும் கருத்துக்களையும் உணர்த்தி அவற்றைப் பரப்புவதே என்பர். பொதுவாக உலக இலக்கியங்கள் பலவும் கொள்கைகளைப் பரப்பவே எழுந்தன எனலாம். சமய இலக்கியங்கள் எழுங்காலத்தில், அவை சமயத்தின் அடிப்படையில் எழுந்தாலும், மனித மனத்தின் அடிப்படை இயல்பையும் ஆவல்களையும் உணர்த்திச் சிறந்த கொள்கைகளை நிலைநிறுத்துவதாலேயே அவை என்றும் நின்று நிலவுகின்றன.

சாத்தனார் இயற்றிய மணிமேகலை புத்தசமயக் கோட்பாடுகளை உணர்த்த எழுந்ததாயினும் அது மனித இயல்புகளையும், மாந்தர் போற்றத்தக்க சிறந்த பண்புகளையும் உணர்த்துவதால்தான் அது நின்று நிலைத்து விளங்கும் இலக்கியமாக அமைந்தள்ளது. நாட்டிலும் தான் பிறந்த வீட்டிலும் குழப்பமும் அமைதியின்மையும் சூழுங்கால் துறவு உள்ளம் வளர்தல் இயல்பு என்பதையும், உறவு அறுத்துத் துறவுவளர்ப்பது எளியது அன்று என்பதையும்; அவ்வாறு துறவுள்ளம் பெற்ற பிறகு அம்மனம் 'யாதும் ஊரே யாவரும்

கேளிர்' என்ற கோட்பாட்டை அடையும் என்பதையும் மெல்ல மெல்ல விளக்குகிறது.

எல்லோரும் திருமணம் செய்துகொண்டு இன்ப அன்பு வாழ்வைக் காண முடியும் என்று உறுதியாகக் கூறவியலாது. இன்பத்தைத் தேட, அவ்வின்பம் கானல்நீர் போல் அமைந்து எட்டாத கனியாக விளங்கி வாழ்க்கை ஒருசிலருக்குக் கசந்து விடுகிறது. பொருந்தாத மனங்கள் திருமணம் செய்துகொண்டு இல்லறத்தில் ஈடுபடும்பொழுது, மனக்கசப்பும் வாழ்க்கையில் வெறுப்பும் பெறாமல் இல்லை. பலருடைய திருமண ஒப்பந்தம் முறிந்து, இன்பம் அன்பு இல்லறம் என்பவை எல்லாம் பாழாகிவிடுகின்றன. அதனால் திருமண வாழ்வுதான் இன்பத்தையும் அன்பையும் பெற முடிந்த வழி என்றும் முடிவாகக் கூற ஒல்லாது. வாழ்க்கையில் நேரும் இன்னல்களைப் போக்க மெல்ல மெல்லப் பற்றுகளை நீக்கினால்தான் விடுதலையையும் மன அமைதியையும் கொள்ள முடியும் என்பது நம் நாட்டுப் பெரியோர்கள் கொள்ளும் கருத்தாகும். தனிப்பட்ட துன்பம் சமுதாயத் துன்பத்தோடு கலந்து ஒன்றிவிடுகின்றது. சமுதாய வாழ்வின் பொதுநன்மை தனிப்பட்டவரின் நன்மையாக முடிகிறது.

மணிமேகலை துறவுள்ளம் வளர்வதற்கு அவள் வீட்டின் சூழ்நிலையும், அவளைச் சுற்றியிருந்த நாட்டின் சூழ்நிலையும் காரணம் என்பதை ஆசிரியர் சாத்தனார் தெளிவாகக் காட்டுகின்றார். நான் எனது என்ற பற்றின் காரணமாகவும், சாதி குலம் உறவு என்ற கட்டுப்பாட்டாலும் சமுதாயம் பொது நன்மை செய்வதில் பின்தங்கிவிடுகிறது. சமுதாயம் திருந்த வேண்டுமென்றால் தனிப்பட்ட வாழ்விலும் பொது வாழ்விலும் பற்றற்ற உள்ளம் வேண்டும் என்பதையே மணிமேகலையின் துறவு உணர்த்துகிறது.

பற்றற்று வாழ்வது என்பது ஆண்களுக்கு மட்டும் உணர்த்தும் நீதியன்று என்பதை உணர்த்தத் தான் பெண்ணொருத்தியின் வாழ்வில் துறவுள்ளம் வளருமாற்றைக் காட்டி, அச் செய்தியையே ஒரு பெருங்காப்பியமாக அமைத்திருக்கக் காண்கிறோம்.

வாழ்க்கையில் மிகவும் நொந்துவிட்டாலும், தான் வாழும் சூழ்நிலை கெட்டுவிட்டாலும், பற்றற்ற உள்ளம் தான் அவற்றைச் சீர்திருத்த முடியும்; பற்றற்ற உள்ளத்தில் வாழ்வின் உண்மைகள் தெளிவாக விளங்கும் எனக் கூறலாம். மனித சமுதாயமே திருந்தவேண்டுமென்றால் ஆளுக்கு ஒரு நீதி, சமயத்துக்கு ஏற்ற செயல், இனத்துக்கு எனத் தனி நன்மை, இவை நீங்க வேண்டும்; அவ்வாறு நீங்கத் துறவுள்ளம் தவிரத் தூயமருந்து இல்லை என்று கூறிவிடலாம். துறவு என்றால் வாழ்க்கையை வெறுப்பது அன்று என்பதையும், அருளுணர்வோடு உலகத்து வாழ்வை நடத்துவது என்பதையும் காட்டவே இந்நூல் எழுந்தது எனக் கூறலாம்.

மணிமேகலை பிறந்த குலம் மிக இழிந்த ஒன்றாகக் கருதப்பட்டது. உயிரின் சிறந்த பண்பாகிய அன்பு செய்தல் என்ற தன்மையை இழப்பதுவே அவர்கள் வாழ்வின் நெறியாக அமைந்திருந்தது என்று தெரிகிறது. உலகத்து உயிர்களின் செயலெல்லாம் அன்பு செய்தல் என்றிருக்க, இவர்கள் ஒழுக்கம் மட்டும் அன்பு இன்றி வாழ்வது என்ற அளவுக்கு அவர்கள் உள்ளம் மிகவும் தாழ்ந்து விட்டது என்று கூறலாம். மணிமேகலையின் பாட்டியாகிய சித்திராபதி அக்காலத்துப் பரத்தையரின் பொதுநெறியையும் மனவியல்பையும் வெளிப்படுத்துவதிலிருந்து அவர்கள் பசையற்ற நெஞ்சை அறிய முடிகிறது. மலரில் உள்ள மணத்தை நுகர்ந்து மணம் இழந்த மலரை விட்டு நீங்கும் வண்டைப் போலப் பொருளுள்வழிப் பிறரோடு பொருந்திப் பொருளற்றால் தொடர்பும் அற்று வேறொருவரை நோக்கி வாழ்வது அவர்கள் வாழ்வியில் என்பதாக உணர்த்துகிறாள்.

**நறுந்தா துண்டு நயனில் காலை**
**வறும்பூத் துறக்கும் வண்டு போல்குவம்**

என்று அவர்கள் வாழ்க்கை நெறியை உணர்த்துகிறாள்.

அன்பை அறியாத இனத்தில் அன்பைக் காண முயன்ற மாதவியும் பெருந்தோல்வியையே அடைந்தாள் என்று கூறமுடியும். கற்பிற்சிறந்து, கோவலனின் அன்பைப் பெற்ற அவளும், இறுதியில் அவன் மதிப்பைப் பெற முடியாத நிலையையே அடைந்தாள். 'மாயப் பொய் பல கூட்டும் மாயத்தாள்' என்று அவனால் இழித்துரைக்கப்பட்ட நிலையையே அடைந்தாள்; அதனால் மாதவி அத் தொழில் முறையையும் வாழ்வு நெறியையும் வெறுத்தாள். 'திருந்தாச் செய்கை' என்று உணர்ந்து தன் மகளைத் திருந்திய செயலில் ஈடுபடுத்த முனைந்தாள்.

**மாபெரும் பத்தினி மகள்மணி மேகலை**
**அருந்தவப் படுத்த லல்ல தியாவதும்**
**திருந்தாச் செய்கைத் தீத்தொழிற் படாஅள்**
**- ஊரலர். 55-58**

என்று உறுதி கொண்டாள்.

அவள் கொண்ட உறுதியோடு மணிமேகலையின் மனமும் துன்பச்சூழலில் சுழன்று இத்துன்பங்கட்குக் கரை காண முடியாமல் தவிக்கிறது; தன் தந்தையும் தாயுமான கோவலனும் கண்ணகியும் உழந்த வெந்துயர் இடும்பை அவள் நெஞ்சைக் கலக்கிவிடுகிறது.

**தந்தையும் தாயும் தாம்நனி உழந்த**
**வெந்துயர் இடும்பை செவியகம் வெதுப்பக்**
**காதல் நெஞ்சம் கலங்கிக் காரிகை - மலர்வனம். 5-7**

இருந்த செய்தி கூறப்படுகிறது. இவை எல்லாம் துறவு கொள்வதற்குத் தக்க சூழ்நிலையாக அமைந்துவிடுகின்றன.

மணிமேகலை துறவுள்ளம் கொள்வதற்குக் காரணமான சூழ்நிலைகளை விளக்கிய சாத்தனார், உறவை அறுத்துத் துறவில் கால்கொள்ளும் அரியசெயலையும் உடன்விளக்கிச் செல்கிறார். அவள் அழகிலோ பிறரைக் கவரும் கவர்ச்சியிலோ உள்ளத்தைக் கவரும் வனப்பிலோ எந்த வகையிலும் குறைந்தவள் அல்லள் என்பதையும், அவள் அழகில் நாட்டுக் காவலன் மகன் மயங்கி, அவளை வாழ்க்கையில் திருப்ப முயலும் முயற்சியையும், அவற்றை எதிர்த்து அவள் வெற்றிபெறும் சீரிய திறத்தையும் சிறப்பாகக் காட்டிச் செல்கின்றார். மணிமேகலை, தந்தையும் தாயும் தாம் நனி உழந்த வெந்துயர் இடும்பையைக் கேட்டு, உள்ளம் நொந்து உகுத்த கண்ணீர்த் துளிகள் தன் கன்னங்களை நனைத்த நிலையில், அவள் அழகோடு திகழ்ந்தாள் என்பதை அவள் தோழி சுதமதி வாயில் வைத்துக் கூறுகிறார்:

**மணிமே கலைதன் மதிமுகந் தன்னுள்**
**அணிதிகழ் நீலத்து ஆய்மலர் ஒட்டிய**
**கடைமணி யுகுநீர் கண்டனன் ஆயின்**
**படையிட்டு நடுங்கும் காமன் பாவையை**
**ஆடவர் கண்டால் அகறலும் உண்டோ**

**- மலர்வனம் 20-24**

என்று, அவள் அழகினையும் அதனால் பிறர் கவரப்படும் நிலையினையும் எடுத்துக் காட்டுகின்றார்.

அழகும் இளமையும் பெற்ற அவள், வாழ்வில் விழைவும் விருப்பும் நீங்கி, அருளறத்தை வளர்க்க உறவை நெகிழ்த்துத் துறவை வளர்க்கும் உள்ள நிகழ்ச்சியும், சூழ்நிலையைத் திருத்தும் நோக்கில் அவள் ஈடுபடும் அறச் செயலும் ஆங்காங்கே கூறப்படுகின்றன. தனிப்பட்டவரிடத்துச் செலுத்தும்

அன்பைக் குறைத்துத் துறவைப் பெருக்கி அருளறத்தை வளர்க்கும் நிலைமையைப் படிப்படியே காட்டிச் செல்கின்றார்.

கண்கள் சிந்திய நீர் அவள் தொடுத்துக்கொண்டிருந்த மாலையைத் தூயதற்றதாக ஆக்குகிறது. மது மலர்க் குழலினாளைப் புதுமலர் கொய்துவருமாறு மாதவி சுதமதியோடு அனுப்ப, அவளும் பூமலர்ச் சோலை நோக்கிப் போகிறாள். நாட்டு மன்னனின் மகனான அரசிளங்குமரன் அவளை அடையும் ஆவலால் உந்தப்பட்டுச் சோலைநோக்கி அதேவேளை செல்கிறான். அவன் தேரேறி வந்ததால் எழுந்த தேரொலி மணி மேகலையின் செவியில் கேட்கிறது. அப்பொழுதே, வந்தவன் யாவன் என்பதை மணிமேகலை உணர்ந்து, உதயகுமாரன் தன் மேல் கொண்டுள்ள உள்ளத்தை மாதவிக்கு அவள் தோழியாகிய வயந்தமாலை முன்னரே கிளந்துள்ள் ஆதலின், உதயகுமரனின் தேரொலி அஃது என்பதைச் சுதமதிக்கு உணர்த்துகிறாள்.

**ஆங்கவன் தேரொலி போலும் ஆயிழை**
**ஈங்கென் செவிமுதல் இசைத்ததுஎன் செய்கேன்**
**- பளிக். 83-84**

என அமுதுறு தீஞ்சொல்லால் அவள் உணர்த்துகிறாள். உடனே, சுதமதி பளிக்கறை மண்டபத்துள் அப்பாவையைப் புகும்படி அறிவுறுத்தி அவளை அங்கே இருக்குமாறு செய்கிறாள். அரசிளங்குமரன் அவள் இளமையையும் அழகையும் பாராட்டி,

**விளையா மழலை விளைந்து மெல்லியல்**
**முளையெயிறு அரும்பி முத்துநிரைத் தனகொல்**
**செங்கயல் நெடுங்கண் செவிமருங் கோடி**
**வெங்கணை நெடுவேள் வியப்புரைக் குங்கொல்**
**- பளிக். 99-102**

என்று மணிமேகலையின் நலத்தைப் பாராட்டிய வண்ணம் மணிமேகலை மாதவர் உறைவிடம் நீங்கித் தானே தனியளாக இங்கு வந்தது எதற்கு என்று, இளமையின் காரணமாக வளமான சொற்களால் அவள் அழகை அளக்கத் தொடங்குகிறான்.

மணிமேகலை ஊழ்தரு தவத்தள் எனவும், காமனை வெல்லும் வாய்மையள் எனவும் சுதமதி எடுத்துக் கூறிய போதினும், அவன் அவளிடம் கொண்ட காதலை விடாதவனாகி, 'வஞ்சி நுண்ணிடை மணிமேகலைதனைச் சித்திரா பதியாற் சேர்தலும் கூடும்' என்று, ஆங்கு அப் பொழிலைத் தவிர்ந்து நீங்குகிறான்.

அதுவரையிலும் அவன் கூறிய சொற்களைக் கேட்டுக் கொண்டிருந்த மணிமேகலையின் மனநிலையை அப்படியே படம்பிடித்துக் காட்டுகின்றார் ஆசிரியர். துறவை நாடும் அவள் உள்ளத்திற்கும் உறவை அறுப்பது எவ்வளவு அரிது என்பதை அவள் வாய்ச் சொற்கள் உணர்த்துகின்றன.

**கற்புத் தானிலள் நற்றவ உணர்விலள்**
**வருணக் காப்பிலள் பொருள்விலை யாட்டியென்று**
**இகழ்ந்தனன் ஆகி நயந்தோன் என்னாது**
**புதுவோன் பின்றைப் போனதென் நெஞ்சம்**

**- காதை 5, 86-89**

என்று கூறுகிறாள். அவ்வுள்ளத்துணர்வு அவளுக்கே புதுமையாக இருக்கிறது:

**இதுவோ அன்னாய் காமத் தியற்கை**

என்று மேலும் தொடர்ந்து கேட்கிறாள்.

அரசிளங்குமரன்பால் அவள் நெஞ்சம் நெகிழ்கிறது; அதனால்தான் அவள்:

**புதுவோன் பின்றைப் போனதென் நெஞ்சம்**
**இதுவோ அன்னாய் காமத் தியற்கை** - காதை. 5, 89-90

என்று உள்ள நெகிழ்ச்சியால் தோன்றிய உணர்வை எடுத்து இயம்புகின்றாள்:

மறுபடியும் அவள் உள்ளம் திண்மை பெறுகிறது. அதனால்,

**இதுவே யாயின் கெடுக அதன்திறம்** .— காதை 5, 19

என்று கூறுகின்றாள். அவள் துறவு வாழ்க்கை புத்த சமயக் கோட்பாடுகளால் வலிமை பெறுகிறது. உதயகுமரனின் நெஞ்சு மட்டும் அவளைச் சுற்றியே வட்டமிடுகின்றது. அவளை எப்படியும் அடைய வேண்டும் என்ற ஆவல் அவள் இருக்கும் உலகவறவியாகிய அம்பலத்துள் கொண்டு செலுத்துகிறது. மதியோர் எள்ளினும் மன்னவன் காயினும் அவளைப் பற்றிக் கொணர்ந்து, தன் தேரில் ஏற்றிக் கொணரும் எண்ணத்தோடு எழுந்து, உலகவறவியின் ஊடு, சென்று அம்பலத்தை அடைகிறான். அவளும் அவன் அறியாவண்ணம் மறைந்து வதியும் நோக்கோடு காயசண்டிகை என்னும் வித்தியாதர மங்கையின் வடிவில் திகழ்கிறாள். உதயகுமரனுக்கு இளமையின் நிலையாமையைத் தக்க சான்றுகள் காட்டி உணர்த்துகிறாள். நரை மூதாட்டி ஒருத்தியைக் காட்டி,

**தண்ணறல் வண்ணம் திரிந்துவே றாகி**
**வெண்மணல் ஆகிய கூந்தல் காணாய்**
— காதை 20, 41-42

என்று பலபடக் கூறி, இளமை நிலையாது என்று எடுத்துக் காட்டுகிறாள், அதே சமயத்தில், அவளைக் காயசண்டிகையே எனத் தவறாக உணர்ந்த அவள் காதலனான வித்தியாதரன் பழமைக் கட்டுரை பலகூறிப் பாராட்டவும், அவனோடு

விழையா உள்ளமோடு உதயகுமரன்பால் திரும்பித் தொடர்ந்து அறிவுரைகள் சொல்லத் தொடங்குகிறாள்.

உதயகுமரனோடு பேசிய மணிமேகலையைக் காயசண்டிகை எனத் தவறாக உணர்ந்த வித்தியாதரன், அவள் உதயகுமரனைக் காதலித்துவிட்டாள் எனவும், அதனால்தான் வித்தியாதர நகருக்குத் திரும்பாமல் அங்கேயே தங்கி விட்டாள் எனவும் நினைத்துப் புற்றில் அடங்கும் அரவைப்போல அவ்வம்பலத்துள் புகுந்து அவளின் நடத்தையை உற்று அறிய ஒளித்திருக்கிறான். உதயகுமரனோ அன்று இரவு மணிமேகலையை எப்படியும் சந்தித்துத் தன் விருப்பைத் தெரிவிக்க எண்ணங் கொண்டவனாய், 'வேழம் வேட்டெழும் வெம்புலி போல, ஆயிழை இருந்த அம்பலம் அணைந்து, நாகம் கிடந்த புற்றில் நுழைவதைப் போல அவ்வம்பலத்துள் புக, ஆங்கு முன்னிருந்த விஞ்சையன், "ஈங்கு இவன் வந்தனன் இவள்பால்" என்று கருதியவனாய், வெஞ்சினத்தோடு அவன் பின் சென்று அவன் மணித்தோள் துணிய வாள் கொண்டு வீசி வீழ்த்துகிறான்.

குடவயின் அமைந்த நெடுநிலை வாயிலின்கண் சம்பாபதிக் கோட்டத்தில் கிடந்த மதுமலர்க்குழலி மணிமேகலை மயங்கி எழுந்து, விஞ்சையன் செய்தியையும் உதயகுமரனுக்குற்ற அழிவையும் உணர்ந்தவளாகித் தன் சொந்த உருவில் அவன் முன்வந்து தோன்றி, அவனுடைய கேளாத செவிகளில் துன்ப வேதனையால் எழுந்த வேதனைக் குரலைக் காட்டுகிறாள்.

**அறந்தரு சால்பும் மறந்தரு துன்பமும்**
**யானினக் குரைத்துநின் னிடர்வினை யொழிக்கக்**
**காயசண் டிகைவடி வானேன் காதல**

**— காதை 21, 20-23**

என்று மிக உருக்கமாகச் சொல்லி,

**வைவாள் விஞ்சையன் மயக்குறு வெகுளியின்**
**வெவ்வினை யுருப்ப விளிந்தனையோ**

**— காதை 21, 24-25**

எனப் பலபடச் சொல்லி வெய்துயிர்த்துப் புலம்புகிறாள்.

வாழ்க்கையில் இறுதியாகச் சிறிது ஒட்டிக்கொண்டிருந்த உறவும் அறுந்துவிடுகிறது; வாழ்க்கையைப் பற்றற்ற உள்ளத்தோடு நோக்கும் அவளது தூய உள்ளத்தில் துன்பத்தின் பெற்றியை அளந்து பார்க்கும் இயல்பு தானே அமைந்து விடுகிறது. உற்றார் உறவினர் என்ற நிலையெல்லாம் கடந்து, உலகத்து உயிர்கள் எல்லாம் ஒன்று என்ற பரந்த உள்ளம் அவளை அடைகிறது.

உதயகுமரனை இழந்த துன்பத்தால், மனமழிந்து மயங்கிப் புலம்பிய அவன் தாயாகிய இராசமாதேவிக்கு ஆறுதல் கூறும் அறிவுரையில், உலகத்து உயிர்களோடு ஒன்றிய அவள் தூய உள்ளமும், உயிருக்கும் உடலுக்கும் உள்ள உறவை ஆராயும் மனவியல்பும் விளங்குகின்றன. ''உதயகுமரன் உயிர் துறந்துவிட்டானே என்றா அழுகின்றாய்? அவன் உடலுக்காக அழுகின்றாயா? உயிருக்காக அழுகின்றாயா? உடற்கழுதனை யேல் உன் மகனை எடுத்துப் புறங்காட்டில் இட்டது யார்? நீங்கள்தாமே அவனை இடுகாட்டில் இட்டீர்கள்; உயிருக்கு அழுதால், உயிர் தம் வினையின் இயல்பால் எங்கே போகிறது என்று நம்மால் கூறமுடியாது. அவ்வுயிரிடம் அன்புசெலுத்தும் உள்ளம் இருந்தால் உலகத்து உயிர்கள் எல்லாம் ஒன்றாகலின், அவ்வுயிர்களிடம் அன்பு செலுத்தலாமே'' என்று ஆறுதல் கூறுகிறாள்.

**யாங்கிருந் தழுதனை இளங்கோன் தனக்குப்**
**பூங்கொடி நல்லாய் பொருந்தாது செய்தனை**
**உடற்கழு தனையோ உயிர்க்கழு தனையோ**
**உடற்கழு தனையேல் உன்மகன் தன்னை**
**எடுத்துப் புறங்காட் டிட்டனார் யாரே**

**உயிர்க்கழு தனையேல் உயிர்புகும் புக்கில்**
**செயப்பாட்டு வினையால் தெரிந்துணர் வரியது**
**அவ்வுயிர்க் கன்பினை யாயின் ஆய்தொடி**
**எவ்வுயிர்க் காயினும் இரங்கல் வேண்டும்**

**— காதை 21, 71-79**

என்று கூறும் உரையில், தன் காதலன் இறந்தும், தன் அறிவை இழக்காமல் அருளுள்ளம் படைத்து, உலகத்து உயிர்களுள் ஒன்றாக அவன் வாழ்வையும் மதிக்கும் சிறப்புள்ளம் பெற்றுத் துறவில் மேம்படுதலைக் காண்கிறோம்.

துறவே வாழ்வின் அறம் என்று சாத்தனார் வற்புறுத்துவதாகக் கூறவியலாது. நாட்டின் சூழ்நிலை கெட்டுவிட்டால் அவற்றைத் திருத்த வாயுரைகள் மட்டும் போதா என்பதும், துறவுள்ளம் கொள்வது சூழ்நிலையில் உள்ள தாழ்வைப் போக்கவே என்பதும் அவர் உணர்த்துகின்றார் என்று கூறலாம். 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற உயர்ந்த நோக்கம் விளங்க வேண்டுமெனில், யாவரும் பசியற்று வாழ வேண்டுவது அடிப்படை என்பதை விளக்குகின்றார். நீரில் விளையும் உணவு நாட்டில் உள்ளார் அனைவர்க்கும் வேறுபாடில்லாமல் கிடைக்கவேண்டும் என்ற கருத்தை உணர்த்தவே அமுத சுரபி என்னும் பாத்திரத்தைத் தம் கற்பனைத் திறத்தால் படைத்து அவள் கையில் சேருமாறு அமைக்கிறார். உலகத்தில் ஏதாவது ஒரு நன்னெறி தோன்றி, அதனால் எல்லார்க்கும் உணவு கிடைத்து வாழ்வு செழிக்க வேண்டும் என்ற கருத்தையும் அத்தகைய நன்னெறியைச் செயற்படுத்தத் தக்கவர் பற்றற்ற துறவுள்ளம் கொண்டவரே என்பதையும் உணர்த்த அமுதசுரபியைப் படைத்து அது மணிமேகலையின் கையில் வருவதாக நிகழ்ச்சியை அமைத்திருக்கிறார் என்று கூறலாம்.

துறவின் பயன் நாட்டுக்குச் செய்யும் நல்ல தொண்டாகும் என்பதைக் காடடவே மணிமேகலையின் வாழ்வில் 'காணார்

கேளார் கான்முடப்பட்டோர் பேணுநரில்லோர் பிணி நடுக்குற்றோர்' முதலியவர்கட்கு உணவு கொடுக்கும் தொண்டினையும், சிறைச்சாலையை ஒழித்து அறச்சாலையை நிறுவும் தொண்டினையும் செய்வதாகக் கூறுகிறார். நாட்டில் அறம் நிறைந்தால் சிறைச்சாலைகட்கு இடம் இல்லை என்ற கருத்தையும் நுட்பமாகப் புகுத்துகின்றார். மணிமேகலையின் தொண்டினைச் சிறப்பிப்பதன் வாயிலாகத் துறவில் நிலைபெறுவதற்குத் தொண்டுதான் சிறந்த வழியென்பதையும், துறவின் பயனும் தொண்டு செய்தலே என்பதையும் உணர்த்துகிறார்.

உதயகுமரன்பால் இருந்த உறவு அறுவதற்கு நாட்டுக்குச் செய்யும் பொதுத்தொண்டும் நல்லோர் அறிவுரைகளும் காரணமாக விளங்குகின்றன. கணிகையர் குலத்தில் பிறந்து, தீத்தொழிலில் ஈடுபட்டு வாழ்வைப் பொதுமையாக்காமல் உலகத்தின் உயர் அறவியாகி நல்லோர் பலரும் நானிலமும் போற்றத்தக்க வகையில் அறிவுசால் தவத்தளாகி, ஆன்ற கேள்வியும் சான்றோர் தொடர்பும் பெற்று, உலகம் மதிக்கத்தக்க பேருள்ளம் படைத்தவளாகித் தனிப்பட்டவரிடம் கொண்ட உறவைக் களைந்து, உலகத்து உயிர்களோடு ஒன்றும் துறவுள்ளம் பெற்றுக் காவியத்தின் தலைவியாகவும், சமயத்தின் தலைவியாகவும் விளங்க, ஆசிரியர் அவளைப் படைத்துப் பெண்டிருள் பெருவிளக்காகக் காட்டியுள்ளார்.

அமைதியற்ற சூழலில் துறவு உள்ளம் பெற்றுத் தொண்டாலும் தூய சிந்தையாலும் உறவு பற்று இவற்றை அறுத்து உலகத்துக்குத் தொண்டு செய்யத் துறவு உள்ளம் தேவை என்பது இக் காவியப் பண்பாக விளங்குவதால்தான், மணிமேகலை என்னும் நூல் வெறுஞ் சமய நூலாக விளங்காமல் மக்கள் மதிக்கும் மாண்புகளைப் புகட்டும் அறிவுரை பொருந்திய இலக்கியமாக வாழ்கிறது. சமயச் சார்பு மறைந்தாலும், மாந்தரின் மனவியல்பை உணர்த்துவதில் என்றும் நிலைத்து நிற்கும் என்பது உறுதியாகும்.

# 7. கவியும் கவிஞனும்

தமிழுக்கு அணிசெய்யும் காவியங்கள் ஐந்தனை மட்டும் ஐம்பெருங் காவியங்கள் எனச் சிறப்பித்துக் கூறுவர். அவற்றுள் சிந்தாமணியும் ஒன்றாகும். இது காவிய நலன்கள் கவின் செய்யக் காதலும் வீரமும் மிடைந்து வர ஒன்பான் சுவையும் ஒன்றி நிலைக்கக் கற்போரின் கருத்தையும் உள்ளத்தையும் கவரும் கற்பனைன கலந்த இலக்கியமெனினும், மக்கட்கு அறிவு புகட்டும் திறம் இந்நூலுள் ஆங்காங்கு அழகுபட அமைந்துள்ளது.

கவியை இயற்றும் கவிஞன் சுவையும் அணியும் அமையக் காவியம் இயற்றினாலும், உலகுக்கு அறிவு புகட்டவேண்டும் என்ற உயர்ந்த நோக்கமும் அவன் பால் அமைந்து கிடக்கிறது. அவன் வெறுஞ் செய்யுள் மட்டும் இயற்றும் புலவனாக இல்லாமல் அறிவுகொளுத்தும் ஆசானாகவும் அமைகிறான். அவன் அறிவுரை சொல்லும்பொழுது அவன் சொந்த இயல்பு வெளிப்பட்டு அவனுடைய ஆழ்ந்த நம்பிக்கைகளும் கொள்கைகளும் வெளிப்படுகின்றன.

கவிஞன் தன், கொள்கைகளையும், உணர்த்த விரும்பும் நீதியையும் நேரே எடுத்துச் சொன்னால் அவற்றை அடுத்துக் கேட்பார் யாரும் இரார். அதனால் அருந்தக் கொடுக்கும் மருந்தை இனிப்பில் கலந்து இன்சுவை ஊட்டிக் கொடுக்கும் மருத்துவனைப் போலக் கசக்கும் உண்மைகளை இனிக்கும் காவியச் சுவையில் இசைத்து, மனத்தில் நிலைபெறுமாறு செய்து,

மக்கள் வாழ்க்கையை அவன்போக்கில் திருப்ப முயல்கிறான் என்று கூறலாம். இதை நோக்க ஆசிரியன் தன்னை ஆசானாக மட்டும் கருதிக் கொள்ளாமல் உலகத்தின் துன்பத்தையும் மனிதரின் ஒழுக்கக் கேட்டையும் திருத்தி அமைக்கும் சீர்திருத்த வாதியாகவும் மதித்துக் கொள்கிறான். வாழ்வில் ஏற்படும் துன்பத்தையும் இன்பத்தையும் நன்மையையும் தீமையையும் அறத்தையும் மறத்தையும் ஆராய்ந்து எண்ணிப் பார்த்து, அவற்றைப் போக்கத் திண்ணிய கருத்துகளைச் சொல்வதை அவன் கடமையாகவும் கொள்கிறான். உலகமும், வாழ்க்கையைப் பற்றி அக் கவிஞன் கருதும் கருத்து யாது என எதிர்நோக்கிக் கவியின் வாயில் வரும் உண்மைகளை மருத்துவனின் வாயில் வரும் வாக்கைப் போலக் கொள்கின்றது. ஒரு சிலர் அவன் கொள்கைகளையும் கருத்துகளையும் மறுத்து அவற்றில் குறையும் காண்கின்றனர்.

இந்த வகையில், சிந்தாமணியின் ஆசிரியராகிய திருத்தக்க தேவரும் தாம் எடுத்துக்கொண்ட நூலாகிய சிந்தாமணியின் கதையையும் அதன் நிகழ்ச்சிகளையும் பயன்படுத்தித் தம் வாழ்வில் கொண்டுள்ள கொள்களைகளைத் தக்க சூழ்நிலைகளில் புகுத்திப் பிறர் அவற்றைச் செவிமடுத்து ஏற்றுக்கொள்ளுமாறு செய்துவிடுகிறார். மற்றைய கவிஞர்களைவிட அவரிடம் இப் பண்பு மிகுதியாகக் காணப்படுகிறது.

அவர் எடுத்துக்கொண்ட கதையின் உட்கோளை ஆராய்ந்தால், வஞ்சனை செய்பவர் இறுதியில் வாழ்வு இழப்பர் என்பதாக அமைகிறது. நட்புக்குக் கேடு சூழ்பவர் நன்றி கொன்ற கொடுஞ் செயலுக்கு ஆளாகி அழிவையே பெறுவர் என்பது இக் கதையின் உட்கோளாகக் கிடக்கிறது.

மன்னனாகிய சச்சந்தனைக் கொன்று ஆட்சியைக் கைப்பற்றிச் சூழ்ச்சியால் சிறப்புற்ற அவனுடைய அமைச்ச

னாகிய கட்டியங்காரனின் வீழ்ச்சியைக் காட்டும் பொருட்டே சீவகனின் பிறப்பு வரலாறு எழுகிறது. சீவகன் வளர்ந்து தன் தந்தையைக் கொன்ற கயவனைப் பழிதீர்க்கும் செய்தி இறுதியில் கூறப்படுகிறது. கதையின் நீதியும் வஞ்சனை செய்வார் வாழ்விழப்பர் என்பது ஆகும். இக்கொள்கையில் இவருக்கு அசையாத நம்பிக்கை இருக்கிறது என்பது இவர் எடுத்துக் கொண்ட கதையால் நன்கு விளங்குகிறது. 'நட்பிடைக் குய்யம் வைத்தான் நரகம் நண்ணுவான்' என்ற செய்தியை ஓர் அமைச்சன் நல்லுரையில் வைத்தும் கூறுகின்றார்.

காவியத் தலைவனாக எடுத்துக்கொண்ட சீவகனின் வாழ்க்கையில் ஒரு புதுமை காணப்படுகிறது. எண் மரைத் திருமணம் செய்துகொண்டு இன்பவாழ்வு வாழும் தலைவனாக அவன் காட்டப்படுகிறான். தமிழ்க் காவியங்களுள் எந்தத் தலைவனுக்கும் இத்தகைய இன்பவாழ்வு கூறப்படவில்லை. மேலும் இந்தக் கதையமைத்த ஆசிரியரோ வாழ்க்கையில் துறவியாக விளங்கியவர்; கூறும் செய்தியோ திருமணத்தைப் பற்றியதாக இருக்கிறது; அதிலும், எண்மரைத் திருமணஞ் செய்துகொண்ட வரலாற்றை எடுத்துச் சொல்லும் எழில்மிகு காவியமாக்கிக் காதற்சுவையும் கற்பனைத் திறனும் கலந்து அமைத்து இன்பச் சுவைக்கு எடுத்துக்காட்டாக இந்நூலை அமைத்துள்ளார். இவற்றோடு இக் கதையமைப்பை முடித்து விட்டு இருப்பாரானால் அங்கே அவர் கவிதைத் திறனை மட்டும் கண்டிருக்க முடியுமேயன்றிக் கவிஞனைக் கண்டிருக்க வியலாது.

சீவகன் எட்டுமணம் செய்துகொண்ட போதும் அவன் வாழ்வில் கொண்ட குறிக்கோள் துறவுநெறி என்று அமைக்கும் பொழுதுதான் கவிஞனின் கொள்கை வெளிப்படுகிறது. எட்டு மணஞ் செய்தும் அவ்வாழ்வை விட்டதில்தான் அவனுக்கு வீடுபேறு கிடைத்தது என்று காட்டியதில்தான் அவர் கொள்கை சிறக்கிறது.

இவ்வாறு கதையமைப்பில் தன் கொள்கையை நிலைநாட்டுவதோடன்றி, இடையிடையே வாய்க்கும் இடந்தோறும் தம் கொள்கைகளைப் புகுத்தி அவற்றிற்கு விளக்கந். தருவதைக் காண்கின்றோம். அங்கே கவிஞனின் கொள்கைகள் தலைசிறந்து வெளிப்பட்டு அவன் உள்ளப் பண்பையும் கொள்கைகளில் கொண்ட அசையாத நம்பிக்கையையும் காட்டுகின்றன. இதுவரையிலும் . கதைச் சுவையில் திளைக்க வைக்கும் கவிஞன், தான் யார் என்று தன்னை அறிமுகப்படுத்திக் கொள்ளும் பகுதி இங்கேதான் அமைகிறது.

ஆசிரியர் தாம் எடுத்துக்கொண்ட கதையினை முடிக்கும்பொழுது வீட்டு நெறியின் சிறப்பைக் கூற 'முத்தியலம்பகம்' என்ற தனிப் பகுதியை அமைத்துத் தம் கொள்கைக்கு விளக்கம் தருகின்றார். இதனோடு மட்டும் நில்லாமல், இடையிடையே தக்க சூழ்நிலையில் சிறந்த கொள்கைகளை எடுத்துக்கூறும் பண்பினை ஆங்காங்குக் காண்கிறோம். கதை நிகழ்ச்சிகளில் ஏற்ற இடத்துச் சிறந்த நீதிகளையும் சமணசமயத்துக் கருத்துகளையும் நிலைநாட்டு வதைக் காணலாம்.

வள்ளுவர், அன்பு அறம் அருள் முதலிய அறன்களை வற்புறுத்தும் அதே வாயால், உலகின் இயல்பை அறிந்து அன்பு அருள் பண்பு முதலியனவும் சிறக்க வேண்டுமானால் பொருள் வேண்டும் என்று வற்புறுத்தக் காண்கிறோம். பொருளல்ல வரையும் பொருளாகச் செய்யும் பொருள் இல்லையென்றால் அவரை யாரும் பொருட்படுத்தமாட்டார்கள் என்பது அவர் துணிபு ஆகும். பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை என்பது அவர் அறிவுறுத்தும் உண்மையாகும். மறுமையைப் பற்றியும் இம்மை அறங்களைப் பற்றியும் வற்புறுத்தும் திருத்தக்கத் தேவரும் வள்ளுவரைப் போலவே பொருளின் பெருமையை வற்புறுத்தி அதனை ஈட்டவேண்டிய இன்றியமையாமையைக் காட்டக் காண்கிறோம்.

பொருளால்தான் இந்த உலக நெறியும் செயலும் நன்மையும் சிறந்து விளங்குகின்றன என்று எடுத்துக் காட்டுகின்றார். பொன்னிருந்தால்தான் பொருபடை திரட்ட முடியும் என்றும், அப்படை இருந்தால்தான் நாடுகளைக் கைப்பற்ற இயலும் என்றும், நாட்டாட்சி கிடைத்தால்தான் நற்பொருள் அனைத்தும் பெறலாம் என்றும் அந் நற்பொருளால் பெறக்கூடா இன்பமே இவ்வுலகில் இல்லை என்றும் கூறக் காண்கின்றோம்.

**பொன்னின் ஆகும் பொருபடை; அப்படை**
**தன்னின் ஆகும் தரணி; தரணியிற்**
**பின்னை ஆகும் பெரும்பொருள்; அப்பொருள்**
**துன்னுங் காலைத்துன் னாதன வில்லையே - விமலை 34**

என்று உணர்த்துகிறார்.

திருத்தக்கதேவர் சமண சமயத்தைச் சார்ந்தவராகவும் துறவியாகவும் இருந்தமையால், சமண சமயக் கொள்கைகளே அவருடைய அறக்கொள்கைகளாக விளங்குகின்றன. அவற்றை வாய்க்கும் இடமெல்லாம் புகுத்தித் தம் கொள்கைகளை நிலைநாட்டும் நிலையைக் காண்கின்றோம்.

சீவகன் சில துறவிகளைச் சந்திப்பதாகக் கதை நிகழ்ச்சியை அமைக்கின்றார். இக் கதை நிகழ்ச்சிக்கும் சீவகன் கதைக்கும் யாதொரு தொடர்பும் இல்லையெனினும், சில அறங்களை வற்புறுத்தவே இதுபோன்ற பகுதிகளை அமைப்பது ஆசிரியரின் இயல்பாக அமைகிறது.

சமண சமயத் துறவிகள் என்று சொல்லப்படுகின்ற அவர்கட்கே சீவகன் வாயிலாகச் சிறந்த கொள்கைகளையும் நெறிகளையும் உணர்த்தக் காண்கின்றோம். வள்ளுவர்,

**மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்**
**பழித்தது ஒழித்து விடின்.**

என்று துறவிகளுக்குச் சிறந்த நீதியை உணர்த்துகின்றார். வெளித் தோற்றத்தாலும் பிறர் மெச்சும்படி நடந்து கொள்வதாலும் எந்த அறமும் சிறவாது என்பது அவர் காட்டும் நெறியாகும். வள்ளுவரைப் போலவே திருத்தக்க தேவரும் சடங்குகளால் சாதிப்பது இயலாதென்பதையும், உள்ளத் தூய்மையே உறுதியளிக்கும் என்பதையும் தெள்ளத் தெளியக் காட்டிச் செல்கின்றார்.

நீண்ட சடையும் காவி உடையும் அணிந்தும், வேள்வி செய்தும், வேதம் விளம்பியும், கடிய விரதங்களை மேற்கொண்டும் கடுமையான நெறியோடு வாழ்ந்துவந்தாலும், உள்ளத்தினின்று வேட்கையை ஒழிக்காமல் இருந்தால் வாழ்க்கையில் வீடுபேறு கிடைக்காது என்பதை அழகாகக் காட்டி, உயர்ந்த கருத்தை நிலைநாட்டுவதைக் காண்கிறோம். ''ஓங்கிய மரத்தில் தங்கும் வாவற்பறவை தலைகீழாகத் தொங்கிக் கிடந்து, அயலிலே கிடக்கும் பழங்களைத் தின்பதால் அதற்கு வீடுபேறு கிடைக்குமா? அதுபோல நீங்களும் உறிகளில் தலைகீழாகத் தொங்கிக்கொண்டு உணவு உண்டு வாழ்ந்தால் மட்டும் உங்கள் தீவினைகள் அகலுமா?'' என்று கேட்டு, அவ்வாறு உணவு உண்ணும் வகையாலேயே உயர்வு அடைய முடியும் என்று கூற முடியாது என்றும், திண்ணிய எண்ணமும் தூய உள்ளமுமே வீடுபேறு அளிக்கும் என்றும் வற்புறுத்துகிறார்.

**தூங்குறிக் கிடந்து காயும் பழங்களும் துய்ப்ப நில்லா**
**பாங்கல வினைகளென்றார் பகவனார் எங்கட்கு என்னின்**
**ஓங்குநீண் மரத்தில் தூங்கும் ஒண்சிறை ஒடுங்கல்வாவல்**
**பாங்கரிற் பழங்கள் துய்ப்பப் பழவினை பரியும் அன்றே**

**- கேமசரி. 18**

என்று, தக்க உவமை கொண்டு போலித் துறவால் ஞாலத்தில் வீடுபேற்றை அடைய முடியாது என்பதைத் துறவிகட்கு உணர்த்தும் அறிவுரைகளால் அமைத்துத் தம் உயர்

கொள்கையைச் சீவகன் வாயிலாக ஆசிரியர் உணர்த்தக் காண்கிறோம்.

சமணத் துறவிகட்கு அறிவு உணர்த்த ஒரு சூழ்நிலையைக் கதையில் ஏற்படுத்திக் கொண்டதைப் போலவே உலகினருக்கு அறிவுறுத்தவும் ஒரு தக்க சூழ்நிலையை அமைத்துக்கொள்ளக் காண்கிறோம். கதையில் இத்தகைய தொடர்பு வேண்டப்படுவது இல்லை யெனினும், வேண்டுமென்றே சீவகன் ஒரு வழிப்போக்கனைச் சந்திக்குமாறு செய்து, அவனுக்கு வாழ்க்கையைப்பற்றி விளக்கம் தருவதுபோலத் தம் கொள்கைகளைப் புகுத்தக் காண்கிறோம். வழிப்போக்கனைத் தம் கருத்துகளைக் கேட்கத் தகுந்தவனாக அமைத்ததன் நோக்கம், வாழ்க்கையாகிய வழியிலே செல்வார்க்கு இக் கருத்துகள் ஏற்கும் என்ற கருத்தாலேயே என்று கொள்ளலாம். சீவகன் வழிப்போக்கனுடன் பேசும்பொழுது உள்ளம் ஏற்றுக்கொள்ளத் தக்க வகையில் சுவைமிக்க பேச்சுரைகளை அமைக்கக் காண்கிறோம்.

வழிப்போக்கன் ஒருவன், சீவகனைப் பார்த்து, ''நீர் எவ்வூரீர்? எவ்வூருக்கு வந்தீர்? நும் மனைவியர் எத்துணையர்? அவர்களுள் மக்கள் எத்துணையர்? அவர்களுள் ஒழுக்கமிக்கார் எனைவர்?'' என்று கேட்கிறான். அதற்கு விடையளிக்கும் சீவகன், ''யான் இவ்வூரேன்; இப்பதிக்கே வந்தேன்; என் மனைவியர் நால்வருக்கும் சேர்ந்து நற்கதி யளிக்கும் ஒரே மகன் உளன்'' என்று விடையளிக்கிறான்.

''நால்வருக்கும் ஒரு மகன் எவ்வாறு பிறக்கக் கூடும்?'' என்று வழிப்போக்கன் கேட்கிறான். அதற்குச் சீவகன் அளிக்கும் விடை எதிர்பாராதவாறு வேறு விதமாக அமைகிறது. அதில் சமய விளக்கத்தைப் புகுத்திக் கவிஞர் பெரிய ஆசிரியராக மாறுதைக் காண்கிறோம். தானம், சீலம், தவம், இறைவழிபாடு ஆகிய நான்கும் முன் சொன்ன மனைவியர் எனவும், இவற்றின்

சிறப்பால் நல்வினை என்னும் மகன் பிறப்பான் எனவும், அவனே நற்கதிக்குக் கொண்டு போகும் உரவோன் எனவும் விளக்கம் தருகிறார்.

**நற்றானம் சீலம நடுங்காத் தவம் அறிவர் சிறப்புஇந்**
**நான்கும், "**
**மற்றாங்குச் சொன்ன மனைவியர்; இந் நால்வரவர்**
**வயிற்றுள் தோன்றி**
**உற்றான் ஒருமகனே மேற்கதிக்குக்கொண்டு போம்**
**உரவோன் தன்னைப்**
**பெற்றார் மகப்பெற்றார் அல்லாதார் பிறர்மக்கள் பிறரே**
**கண்டீர்**
**- கேமசரி. 134**

என்று கேட்பார் உள்ளம் ஈர்க்கும் வண்ணம் நால்வருக்கும் சேர்ந்து ஒரு நன்மகன் பிறப்பதாக நகை விளைவிக்கும் செய்திபோலக் கூறி நல்லறிவு கொளுத்தக் காண்கிறோம்.

வளமையுள்ள இளமையிலேயே நல்லறம் செய்ய வேண்டும் என்பதும், முதுமையில் அறஞ்செய்ய ஒல்லாது என்பதும், அவர்தம் கொள்கையாகும். அதனால் அவ்வழிப் போக்கனுக்குச் சீவகன் இக் கருத்தை உணர்த்துவதுபோலத் தம் கொள்கையை நிலைநிறுத்துகின்றார். அதை விளக்க அவர் கூறுவது சுவை பயப்பதாக உள்ளது.

முதுமை மிக்கான் ஒருவன் இளமை மிக்க கன்னி ஒருத்தியை மணந்து இல்லறம் நடத்துகிறான். வளமை இருந்த இளமை வயதில் வண்மை செய்யாது அறஞ்சாரா முதுமை பெற்று, வாழ்வின் இறுதியில் வண்மை செய்து நல்வாழ்வைப் பெறலாம் என்று ஆவல் கொள்கிறான். வயது முதிர்ந்து நோயும் கனிந்து வாழ்வு மறையும் அந்திக் காலம் வந்து சேர்கிறது. அறஞ்செய்ய எண்ணங்கொண்டு அவன் பொதிந்து வைத்த

பொருட்கிழி ஒன்றை எடுத்துக் கொடுக்குமாறு தன் அயலில் இருந்த கயல்விழியாளிடம் அப்பொருள் திரளின் அளவைக் கையால் குறிப்புச் செய்து காட்டி, அதனைக் கொண்டுவருமாறு ஏவுகிறான். வாய் திறந்து பேசும் ஆற்றலை இழந்துவிட்டதால் கைகாட்டிக் கருத்தை உணர்த்த முற்படுகிறான். அவன் கருத்தை உணர்ந்த அக் காரிகையாளும் அதன் குறிப்பை அறியாதவள் போல் நடித்து மறைத்துவிடுகிறாள். ஏழையின் சொற்கள் அம்பலம் ஏறாவாறுபோலக் கிழவனின் சொற்கள் செயலில் இடம்பெறவில்லை. சுற்றியிருக்கும் சுற்றத்தாரும் அவன் கூறுவதை உணர முடியவில்லை.

''ஐயா! விளாம்பழமா கேட்கின்றீர்? அஃது உடம்புக்கு ஆகாதே. தொண்டை அடைக்கும் இந்நிலையிலா விளாம்பழம் உண்பது'' என்று மிகவும் அன்புடையாளைப் போலப் பேசி அவன் குறிப்பை மறைத்து விடுகிறாள். அவன் எவ்வளவு முயன்றும் தன் கருத்தைத் தெரிவிக்க இயலவில்லை. அவள் தன் திறமையால் அவன் கருத்தைப் பிறர் அறியாதவாறு மறைத்துச் சூழ்ந்திருக்கும் சுற்றத்தவர்க்கும் சாய்ந்து கிடக்கும் கணவனுக்கும் நல்லவளைப் போல நடித்து அவன் செயல் எடுபடாதவாறு செய்து விடுகிறாள். அவன் பொதித் துணையின் அளவைக் கையாற் குறிப்புச் செய்து காட்ட, ''ஐயோ!உடம்புக்கு ஆகாதே'' என்று கூறி மெய்யானவள் போல நடித்து அறத்தைச் செய்யாதவாறு தடுத்துவிடுகிறாள். இளமையிலேயே அறம் செய்யவேண்டும் என்ற செய்தியைச் சுவைமிக்க சூழ்நிலையில் வைத்து உணர்த்தக் காண்கிறோம்.

**கையாற் பொதித்துணையே காட்டக்**
**கயற்கண்ணாள் அதனைக் காட்டாள்;**
**ஐயா விளாம்பழமே என்கின்றீர்;**
**ஆங்கதற்குப் பருவம் அன்றுஎன்**
**செய்கோ எனச்சிறந்தாள் போற்சிறவாக்**
**கட்டுதரையாற் குறித்த எல்லாம்**

**பொய்யே பொருளுரையாம்; முன்னே**
**கொடுத்துண்டல் புரிமின் கண்டீர்**
**- கேமசரி. 142**

என வழிப்போக்கனுக்கு உணர்த்துமாறு போல இச்செய்தியை உணர்த்துகின்றார். அவள் இளமை மிக்கவள் என்பதைக் காட்டக் 'கயற் கண்ணாள்'என்ற தொடரால் அவளைக் குறிப்பிடுகின்றார்.

இன்னும் இதைப்போன்ற பல அறங்களையும் கருத்துகளையும் ஆங்காங்குத் தக்க சூழ்நிலையில் அமைத்துக் கவிதையில் தம் கொள்கைகளைப் புகுத்தி விடுகின்றார். இளமையும், செல்வமும், யாக்கையும் நில்லா என்ற நிலையாமையை உணர்த்தும் கருத்துகளைப் பல இடங்களில் உணர்த்திச் செல்கிறார்.

அமைச்சனான கட்டியங்காரன் அரசனான சச்சந்தன் மீது போர் தொடுத்துவிட்டான் என்ற செய்தியை உணர்ந்த சச்சந்தன், போர்க்குச் செல்வதற்கு முன்னால் மயிலனைய தன் மனைவியை மயிலூர்தியில் ஏறிச்செல்லுமாறு பணிக்கின்றான். அதைக் கேட்டு அவள் அல்லலுற்று அழுங்கும் நிலையில், வாழ்வின் நிலையாமையை உணர்த்திச் சாதலும் பிறத்தலும் வினையின் பயனாகும் என்று அறிவிக்கிறான். ஈண்டு ஆசிரியர். வாழ்வைப் பற்றி அவர் கொண்டுள்ள நிலையாமைக் கருத்துகளைப் புகுத்துவதைக் காண்கின்றோம்.

**சாதலும் பிறத்தல்தானும் தம்வினைப் பயத்தின் ஆகும்;**
**ஆதலும் அழிவும் எல்லாம் அவைபொருட்கு இயல்பு**
**கண்டாய்;**
**நோதலும் பரிவும் எல்லாம் நுண்ணுணர்வு இன்மையன்றே**
**- 269**

என்று வினையின் இயல்பையும், ஆதலும் அழிதலும் ஆகிய பொருளின் இயல்பையும் உணர்த்தி நிலையாமைக் கருத்தை மெல்லப் புகுத்துகின்றார்.

தொல்லை நம் பிறவியின் எண்ணிக்கைகளை எண்ணிப் பார்த்தால் அவற்றிற்கு எல்லையே இல்லை என்றும், அதைப் போல நம் வாழ்வும் 'இல்லினுள் இரண்டு நாளைச் சுற்றம்' போன்றது என்றும் சச்சந்தன் கூறுகின்றான். இவ்வாறு கூறி விசயமாதேவியாகிய அவன் மனைவிக்கு ஆறுதல் கூறுகிறான்.

இதே போலச் சீவகனைப் பிரிந்த கேமசரியின் ஆற்றாமையைக் கண்டு ஆற்றப் புகுந்த அவள்தாய் விளக்குகிறாள். இளமை நீர்க்குமிழி போல நிலையற்றது என்றும், இன்பம் மின்னலைப் போலத் தோன்றி மறையக் கூடியது என்றும், செல்வம் வெயிலுறு பனியைப் போல நீங்கும் இயல்பினது என்றும் அவள் தாயின் கூற்றிலே விளக்குகின்றார்.

**மன்னுநீர் மொக்குள் ஒக்கும் மானிடர்இளமை; இன்பம்**
**மிண்ணின் ஒத்து இறக்கும்; செல்வம் வெயிலுறு பனியின்**
**நீங்கும்;**
**இன்னிசை இரங்கும் நல்யாழ் இளியினும் இனிய**
**சொல்லாய்!**
**அன்னதால் வினையின் ஆக்கம் அழுங்குவது என்னை**
**- கேமசரி. 126**

என்று கூறுகிறார்.

இவ்வாறு உலகத்தின் பொதுவான நிலையாமையை அறிவதால் தனிப்பட்டவர் தாம் அடையும் துன்பத்தை அவற்றோடு ஒப்பிட்டு ஆற்றிக்கொள்ள முடிகிறது. இன்பம் துய்க்கும் பொழுது தம் இன்பத்தின் அளவைப் பெரிது என உவந்தால் இன்பம் பெரிதாகக் காணப்பட்டு மகிழ்ச்சியை ஊட்டுகிறது. தனக்கு வரும் துன்பத்தைப் பெரிதாகக் கருதி அதனாலேயே சோர்ந்து விட்டால் மனம் சோர்ந்து செயலிழந்து வாழ்வு நசிந்துவிடும். அதனால்தான் புலவர்களும் பெரியோர் களும் உலகத்தின் நிலையாமையைச் சொல்லித் தனிப்பட்ட

வரின் துன்பத்தைக் குறைத்துக் கொள்ள வழிசெய்கின்றனர் என்று கூறலாம். கேமசரியின் துன்பத்தையும் விசயமாதேவியின் துயரத்தையும் குறைக்க வாழ்வின் நிலையாமைத் தன்மை கூறப்படுகிறது.

இவ்வாறு நூலில், ஆங்காங்குத் தக்க சூழ்நிலைகளில் வாழ்க்கையில் ஈடுபடும் பலநெறிகளில் உள்ளார்க்கும் பயன்படும் வகையில் அறங்களையும் சமயக் கருத்துகளையும் வாழ்வில் மேற்கொள்ள வேண்டிய உயர்ந்த நீதிகளையும் ஆசிரியர் உணர்த்தக் காண்கிறோம்.

இந்தக் கொள்கைகளைப் பிறர் ஏற்றுக்கொண்டாலும், ஏற்றுக்கொள்ள மறுத்தாலும் கவிஞன் அவற்றைச் சொல்லித் தீர்த்தால்தான் மனநிறைவு அடைகிறான் என்று கூறலாம். மற்றவர்கள் இக் கொள்கைகள் ஏற்றுக் கொள்ளத் தக்கவை யல்ல என்று மறுத்தாலும், அதைப் பற்றி அவன் பொருட்படுத்துவதில்லை. சுவையையும் நலத்தையும் நுகர்வதற்கு உரிமை இருப்பதைப் போலவே அவர்களுக்குப் பிடிக்காத கொள்கைகளைப் புலவனின் தனிப்பட்ட நம்பிக்கைகள் என்று தள்ளவும் உரிமை இருக்கிறது. எனினும் கொள்கையை நீக்கிவிட்டு அணியும் நலனும் மிக்க காவியமாக மட்டும் உயர்ந்த கவிஞனால் அமைக்க இயல்வதில்லை. கவி வேறு கவிஞன் வேறு என்று பிரிந்து வாழ அவனால் இயல்வதில்லை.

# 8. நன்மையும் உண்மையும்

இலக்கியம் உண்மை நன்மை அழகு என்ற மூன்று பொருள்களையும் ஒரு சேர உணர்த்துகிறது. தத்துவமும் விஞ்ஞானமும் உண்மையை மட்டும் உணர்த்தும்; நீதி நூல்கள் நன்மையை மட்டும் உணர்த்தும்; இசை ஓவியம் முதலிய கலைகள் அழகை மட்டும் உணர்த்தும். இலக்கியம் ஒன்றுதான் நன்மையோடு கூடிய உண்மையை அழகுணர்வோடு ஈந்து உள்ளத்துக்கும் அறிவுக்கும் விருந்து செய்து வாழ்க்கைக்கு வழிகாட்டியாக அமைகிறது.

உண்மைக்கும் நன்மைக்கும் உள்ள வேறுபாடு மிகவும் நுட்பமானதாகும். நன்மை என்பது வாழ்க்கையில் நாம் மேற்கொள்ள வேண்டிய அறப்பகுதிகளை வகைப்படுத்திக் கூறுவதாகும். உண்மை என்பது உலகத்தின் இயல்பை அறிந்து உணர்த்துவதாகும். இலக்கியம் காட்டும் உண்மை நன்மையோடு அமைந்து யாவருக்கும் பொருந்துவதாகவும்,பலருக்கும் பயன்படுவதாகவும் அமைகின்றது. இலக்கியம் வாழ்க்கையைப் பற்றி ஆராய்ந்து அனுபவத்தோடு உண்மைகளை உலகத்தின் நன்மை கருதி அழகு பட எடுத்துக் காட்டுகின்றது.

இவ்வாறு நன்மையோடு கூடிய உண்மைகளைத் தமிழ் இலக்கயம் ஆங்காஙகு எடுத்துக் காட்டுவதை நாம் காணமுடிகிறது. தொடர்நிலைச் செய்யுள்களான பெருங் காப்பியங்களாயினும் தனிநிலைச் செய்யுள்களான சங்கவிலக் கியங்களாயினும் இத்தகைய உண்மைகளை ஆங்காங்

கூறாமலில்லை. சிலம்பின் அடியாகப் பிறந்த சிலப்பதிகாரம் சில அடிப்படையான உண்மைகளை உணர்த்துகின்றது. இதன் ஆசிரியரான இளங்கோவடிகள் தம் வாழ்க்கை அனுபவத்தில் கண்டது ஆகிய மூன்று பேருண்மைகளை அடிப்படையாக வைத்துத் தம் சிலப்பதிகாரக் கதையை அமைத்துள்ளார்.

**அரைசியல் பிழைத்தோர்க்கு அறம்கூற் றாவதூஉம்,**
**உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்தலும்,**
**ஊழ்வினை உருத்துவந்து ஊட்டும் என்பதூஉம்**

சிலப்பதிகாரம் உணர்த்தும் உண்மைகளாகும்.

இதைப் போலவே மணிமேகலை என்ற நூலும்,

**பிறந்தார் உறுவது பெருகிய துன்பம்;**
**பிறவார் உறுவது பெரும்பே ரின்பம்;**
**பற்றின் வருவது முன்னது; பின்னது**
**அற்றோர் உறுவது அறிக**

என்ற உண்மையை ஆங்காங்கு உணர்த்திச் செல்கின்றது.

இவ்வாறு பெருங்காவியங்கள் சில உண்மைகளை எடுத்துக் கூறுவதை நோக்கமாகக் கொண்டு விளங்குவதைப் போலவே புறநானூறு முதலிய தனிப்பாடல்களும் பல உண்மை களை எடுத்துக் கூறுகின்றன. இவை காட்டும் பொருள் பொதிந்த மொழிகள் வாழ்க்கையின் அனுபவமுதிர்ச்சியால் வெளிப்படு வனவாகவும், உலகவியல்பை எடுத்துக் காட்டுவனவாகவும் வாழ்க்கைக்கு வழிகாட்டுவனவாகவும் அமைந்துள்ளன.

இவை ஒவ்வொரு புலவரின் வாழ்க்கையிலும் அவர் தம் சொந்த அனுபவமாகவும், அவர் தம் வாழ்வில் கண்ட பேருண்மைகளாகவும் அமைந்து, அவை உலகத்துக்குச் சொல்லும் நற்செய்திகளாக அமைகின்றன. வாழ்வில் பல்வேறு துறைகளைப் பற்றிப் பல்வேறு புலவர்கள் கொண்ட முடிவுகளை

இவ்வுண்மைகள் விளக்குகின்றன. அவை அவர்கள் வாழ்ந்த காலத்துக்கு மட்டும் பொருந்துவனவாக அமையாமல், எக்காலத்துக்கும் ஏற்றவையாக விளங்குகின்றன. அவை அறிவின் தெளிவிலும், உணர்வின் உயர்விலும் தோன்றிச் செறிவும் திட்பமும் வாய்ந்து வாழ்க்கையைப் பற்றிய நுட்பமான செய்திகளைத் தெரிவிக்கின்றன.

உலகில் போர் நிகழ்கிறதே என்று அன்றும் மனிதன் கவலைப்பட்டான்; இன்று அதைப் பற்றியே உலகம் சந்தித்துக் கொண்டிருக்கிறது. அன்று வாட்போர் செய்து ஆட்களைக் கொன்று வெற்றியும் தோல்வியும் கண்டனர்; இன்று விஞ்ஞானக் கருவிகளைக் கொண்டு உலகம் அழியத்தக்க அணுக் குண்டுகளையும் போர்க் கருவிகளாக அமைத்துள்ளனர். தனி மனிதரும் நாடும் உலகும் அழிந்துவிடுமோ என்று உலகம் அஞ்சிக் கொண்டிருக்கிறது. எப்பொழுதும் இந்த உலகம் இதே போக்கில் தானா போய்க்கொண்டிருக்க வேண்டும்! இதற்கு ஒரு முடிவும் இல்லையா? வரலாறு வேறு எந்த நல்ல முடிவையும் காட்டக் கூடாதா என்று நம் உள்ளம் ஏங்குகின்றது. என் செய்வது? புறநானூறு அனுபவத்தோடு கூடிய ஒரு பேருண்மையை எடுத்துச் சொல்கிறது.

**ஒருவனை ஒருவன் அடுதலும் தொலைதலும்**
**புதுவ தன்றுஇவ் உலகத்து இயற்கை**

என்று எடுத்துக் கூறுகிறது.

உலகின் இயல்பை உள்ளதை உள்ளவாறு எடுத்துக் கூறிப் போரைப் பற்றிய கருத்தை வாழ்வின் பேருண்மையாக விளக்குகிறது. ஆனால் இந்த உலகத்திற்கு இவ் வுண்மையைத் தாங்கும் ஆற்றல் இருக்கிறதோ என்பதே பலரின் அச்சமாக விளங்குகிறது.

ஒருவனை ஒருவன் அடுதல் உலகத்தியற்கை என்பது உண்மையாகும். இந்த இயற்கையை வளர்த்து விட்டால் உலகம்

வாழுமா என்ற கேள்வியே உலகமுழுவதும் எழுந்துள்ளது. உலகப் பேரரசுகள் இந்த இயற்கையை மாற்ற வழி ஏதும் செய்யாவிட்டால் உலகம் அழிந்து விடுதல் உறுதி. புறநானூறு உலகில் போர் இயற்கை என்று கூறுகிறது; நாம் அமைதி வேண்டும் என்று அவாவுகிறோம். இதற்கு உலகம்தான் வழி சொல்லியாக வேண்டும்.

நாடும் உலகும் பண்புள்ளதாகச் செய்ய வேண்டுமானால் மக்களின் பண்பு உயர வேண்டும். மக்களும் அவரை ஆளும் அரசியல் சூழலும் சிறந்தால்தான் நாட்டில் வளர்ச்சி உண்டு; மக்கள் வாழ்வில் ஆக்கம் உண்டு என்பது யாவரும் ஒப்புக்கொள்ளக் கூடிய உண்மையாகும். இந்த உண்மையைப் புறநானூற்றுப் பாடல் ஒன்று எடுத்துக் கூறுகின்றது.''நிலனே! நீ ஓரிடத்தில் நாடாகுக; ஒன்றில் காடேயாகுக; ஒன்றில் பள்ளமேயாகுக; ஒன்றில் மேடேயாகுக; எவ்வாறு ஆயினும் எவ்விடத்து மக்கள் நல்லரோ அவ்விடத்து நீயும் நல்லை! மக்கள் நலமல்லது நினக்கு என ஒரு நலம் இல்லை''என்று நிலத்தின் இயல்பை நிலத்தை விளித்துக் கூறுவது போன்ற அமைப்பில் இப் பாடல் விளக்குகின்றது. மக்களின் பண்பாடு சிறந்தால்தான் நாடு நாடாக இருக்க முடியும். பண்பாடு இல்லையென்றால் நாடு சிறக்காது. உழவும் தொழிலும் சிறக்க மக்களின் பண்பாடும் உழைப்பும் ஊக்கமும் இன்றியமையாதனவாகும். அப்பொழுது தான் வாழ்வு வளனும் பயனும் உடையதாக இருக்கும் என்ற கருத்து வற்புறுத்தப்படுகிறது.

**நாடாகு ஒன்றோ; காடாகு ஒன்றோ**
**அவலாகு ஒன்றோ; மிசையாகு ஒன்றோ;**
**எவ்வழி நல்லவர் ஆடவர்**
**அவ்வழி நல்லை நிலனே**

என்பது இக் கருத்தை விளக்கும் புறப்பாட்டாகும்.

மக்கள் சிறந்தாராயினும் அவர்தம் அரசியல் சிறக்க வில்லையென்றால் நாடு முன்னேற்றம் அடையாது என்ற கருத்தை மற்றொரு பாடல் வற்புறுத்துகிறது. அரசன் மக்கட்கு உயிர் போன்றனாக மதிக்கப்பட்டான். மக்கள் தலைவனாகிய அரசியல் தலைவன் கொள்ளும் முடிவுகளை ஒட்டியே நாட்டு நன்மையும் அமைந்திருக்கின்றன என்பது யாவரும் ஒப்புக் கொள்ளக்கூடிய உண்மையாகும். எல்லாப் பொறுப்புகளும் அரசியல் தலைவனையே சாருகின்றன. அவன் சிந்தனையையும் செயலையும் ஒட்டியே உலகத்தின் நன்மையும் அமைதியும் அமைந்திருக்கின்றன என்று புறநானூறு கூறுகின்றது. இன்றைய அரசியலிலும் இந்தப் பேருண்மையைக் காணலாம். ஓர் அரசியல் தலைவன் செய்யும் சிறு பிழையால் உலகத்தில் பெரும் போரை மூட்டி விடலாம்; அதனால் உலகத்தையே அழித்துவிடக் கூடும். அதனால்தான், 'மன்னனாகிய உயிரை உடைத்து இப்பரந்த இடத்தையுடைய உலகம். இந்த உலகத்தார்க்கு நெல்லும் உயிரன்று; நீரும் உயிரன்று; அரசனே உயிர் என்பதை அறிதல் அரசனது கடமையாகும், என்று புறப்பாடல் உணர்த்துகிறது.

**நெல்லும் உயிரன்றே; நீரும் உயிரன்றே;**
**மன்னன் உயிர்த்தே மலர்தலை யுலகம்;**
**அதனால், யானுயிர் என்பது அறிகை**
**வேன்மிகு தானை வேந்தற்குக் கடனே** - 186

என்று வேந்தனின் கடமையை உணர்த்துமாற்றால்,அவன் உலகுக்கு உயிர் போன்றவன் என்பதை எடுத்துக்காட்டுகிறது. படைவன்மை மிக்க அரசன் உலகத்தை அழிக்காமல் இருக்க எல்லா வகையானும் முற்பட வேண்டும் என அறிவுறுத்துவார், 'வேல் மிகு தானை வேந்தன்' என இதன் ஆசிரியராகிய மோசிகீரனார் குறிப்பிட்டுள்ளார்.

உலகத்தில் பிறர்க்குத் தீமை செய்யாமல் இருத்தலே பேரறமாகும். நம்மால் பிறருக்கு நன்மை செய்ய இயலா விட்டாலும் பிறர்க்குத் தீமையாவது செய்யாமல் இருத்தல்

வேண்டும் என்று நன்மையோடு கூடிய உண்மையை மற்றொரு பாடல் அறிவுறுத்துகின்றது. வயது முதிர்ந்து வாழ்வின் நன்மையையும் தீமையையும் நன்கு கண்டவர்களும் இந்தச் சிறு உண்மையை மறந்து பிறருக்குச் சில சமயங்களில் தீமை செய்வது வியப்பாக இருக்கிறது என்று அப்பாடல் உணர்த்துகிறது.

''பல் சான்றீரே! பல் சான்றீரே! கயல்மீனின் முள் போன்ற நரை முதிர்ந்து திரைத்த கதுப்பினையும், பயனில்லாத முதுமையையும் உடைய பல் சான்றீரே! இயமன் பாசத்தாற் கட்டிக்கொண்டு போங்காலத்து நீர் இரங்குவீர்; அதனால் நல்வினையைச் செய்ய மாட்டீராயினும் தீவினையைச் செய்தலை நீங்குமின்; அதுதான் யாவரும் உவப்பது;அன்றியும் தல்ல நெறிக்கண் செலுத்துவதும் ஆகும்'' என்று உணர்த்துகிறார் அதன் ஆசிரியர்.

**பல்சான் றீரே! பல்சான் றீரே!**
**கயல்முள் அன்ன நரைமுதிர் திரைகவுள்**
**பயனில் மூப்பிற் பல்சான் றீரே!**
**கணிச்சிக் கூர்ம்படைக் கடுந்திறல் ஒருவன்**
**பிணிக்குங் காலை யிரங்குவிர் மாதோ**
**நல்லது செய்தல் ஆற்றீர் ஆயினும்**
**அல்லது செய்தல் ஓம்புமின்; அதுதான்**
**எல்லாரும் உவப்பது; அன்றியும்**
**நல்லாற்றுப் படூஉ நெறியுமா ரதுவே - 195**

என்ற புறம்பாடல் சிறந்த அறத்தை மிக அழகாக வாழ்க்கையில் கொள்ளவேண்டிய பேருண்மையாக அறிவுறுத்துகிறது.

மற்றொரு பாடல் உலகத்தில் சான்றோர்கள் இருப்பதால்தான் நல்ல நெறிகள் நிலைக்கின்றன என்றும், உலக வியல்பு ஓரளவு குன்றாமல் மக்கள் மக்களாக வாழமுடிகிறது என்றும் உணர்த்துகிறது. உலகில் தமக்கென வாழாமல்

பிறர்க்காக முயலும் பெரியோர்கள் இருப்பதால்தான் இவ்வுலக இயல்பு கெடாமல் இருக்கின்றது என்ற கருத்தை வற்புறுத்துகிறது. இப்பாடல் அத்தகைய நல்லோர்களின் இயல்புகளைப் பற்றி விரித்துச் சொல்கிறது.

''இந்திரர் அமிழ்தம் இயைவதாயினும், அவர் தமியராக உண்ணார்; யாரோடும் வெறுப்புக்கொள்ளார்; பிறர் அஞ்சத்தகும் துன்பத்திற்குத் தாமும் அஞ்சி அதுதீர்தற் பொருட்டுத் தம்மாலான முயற்சியைச் செய்வார்; புகழுக்காகத் தம்முயிரையும் கொடுத்துவிடுவர்; பழி வருவதாக இருந்தால் அதனால் உலக முழுவதும் பெறினும் கொள்ளார்; மனக்கவலை கொள்ளார். இத்தகைய மாட்சிகள் நிறைந்தவர் சான்றோர்'' என்று அவர்தம் இயல்பை எடுத்துக் கூறுகின்றது.

**உண்டால் அம்மஇவ் வுலகம்; இந்திரர்**
**அமிழ்தம் இயைவ தாயினும் இனிதெனத்**
**தமியர் உண்டலும் இலரேமுனிவிலர்**
**துஞ்சலும் இலர்பிறர் அஞ்சுவது அஞ்சிப்**
**புகழெனின் உயிருங் கொடுக்குவர் பழியெனின்**
**உலகுடன் பெறினுங் கொள்ளலர் அயர்விலர்**
**அன்ன மாட்சி யனைய ராகித்**
**தமக்கென முயலா நோன்தாள்**
**பிறர்க்கென முயலுநர் உண்மை யானே** - 182

என்பது அப் புறப்பாடலாகும்.

இந்தக் கருத்தை மேலும் வற்புறுத்துவது போல மற்றொரு பாட்டு அமைந்திருக்கிறது. தனிமனிதனின் வாழ்வுக்குக் குடும்பம் எவ்வளவு இன்றியமையாததோ பொது வாழ்வுக்கு அரசியல் எவ்வளவு இன்றியமையாததோ, அவ்வளவிற்குச் சான்றோரின் தொடர்பு உள்ளத்தின் வளர்ச்சிக்கு இன்றியமையாதது என்று பிசிராந்தையாரின் பாட்டொன்று

அறிவிக்கின்றது. அவர் வாழ்வே அதற்குத் தக்க எடுத்துக்காட்டாகவும் விளங்கியிருக்கிறது. அவர் ஆண்டுகள் பலவாகியும் நரையில்லாமல் விளங்கி வாழ்க்கையில் இன்பமும் பொருளும் பெற்று அமைதியும் அறிவும் உற்றுச் சான்றோராக வாழ்ந்திருந்தார். அவர் தம் வாழ்வின் அனுபவத்தை உலகத்துக்குச் சொல்லும்பொழுது ஆன்று அவிந்து அடங்கிய கொள்கையையுடைய சான்றோர்கள்,தாம் வாழ்ந்த ஊரில் வாழ்ந்ததால்தான் அத்தகைய மனவமைதி பெற முடிந்தது என்று கூறியுள்ளார்.

''யாண்டுகள் பலவாகியும் நரையில்லாமல் இருப்பது எவ்வாறு இயன்றது என்று கேட்டால்,மாட்சியுடைய என் மனைவியும் புதல்வரும் அறிவால் நிறைந்தவர்கள்; யான் கருதியதைத் திறம்படச் செயலாற்றும் ஏவலிளைஞர் எனக்கு உள்ளனர்; வேந்தனும் முறையல்லன செய்யாமல் நாட்டைக் காக்கும் நல்லாட்சியுடையன்; யான் இருக்கும் ஊரில் ஆன்று அவிந்து அடங்கிய கொள்கையினையுடைய சான்றோர்கள் பலர் வாழ்கின்றார்கள்'' என்று, தம் வாழக்கையின் அனுபவத்தை எடுத்துக் கூறுகின்றார்.

**யாண்டுபல வாக நரையில ஆகுதல்**
**யாங்கா கியரென வினவுதிர் ஆயின்**
**மாண்டஎன் மனைவியொடு மக்களும் நிரம்பினர்;**
**யான்கண் டனையர்என் இளையரும்; வேந்தனும்**
**அல்லவை செய்யான் காக்கும்; அதன்தலை**
**ஆன்று அவிந்து அடங்கிய கொள்கைச்**
**சான்றோர் பலர்யான் வாழும் ஊரே** - 191

என்று ''நரை நுமக்கில்லாமல், இருப்பது ஏன்?'' என்று வினவியவர்க்கு இறுத்த விடையாக இப்பாடல் அமைந்துள்ளது. நரையில்லாமைக்குக் காரணங் கூறுவார் போன்று சான்றோரின் தொடர்பு உள்ளத்தின் வளர்ச்சிக்கு வேண்டுவதாகும் என்ற கருத்தை வற்புறுத்துகிறார்.

பாண்டியன் அறிவுடை நம்பி பேரரசராக விளங்கியதோடு பெரும்புலவராகவும் திகழ்ந்தார். அவர் வாழ்வில் கண்ட பெருமையாகக் குழந்தையின்பத்தை கூறுகின்றார். குழந்தையின்பத்தை அவர் சித்திரித்துக் காட்டும் காட்சி மறக்கமுடியாத ஒன்றாகும். திருவள்ளுவர் குழந்தையின்பத்தைப் பற்றிக் கூறும் பொழுது,

**அமிழ்தினும் ஆற்ற இனிதே தம்மக்கள்**
**சிறுகை யாளவிய கூழ்**

என்று குழந்தையின் சிறுகையால் அளாவிய உணவின் இனிமையைக் கூறுகின்றார். பாண்டியன் அறிவுடைநம்பி பாடிய குழந்தையின்பத்தைப் பற்றிய பாட்டு அவருக்கு அழியாப் புகழை அளித்துவிட்டது. அவர் பாடிய பாட்டு ஒன்றே ஒன்றுதான் கிடைத்திருக்கிறது. அந்த ஒரு பாட்டே அவரைப் புலவர் வரிசையில் வைத்து எண்ணக்கூடிய சிறப்பைத் தந்துவிட்டது.

''படைக்கப்படும் செல்வம் பல படைத்துப் பலரோடு உண்ணும் உடைமை மிக்க செல்வத்தை உடையராயினும், கையை நீட்டிக் கலத்தின்கண் கிடந்த உணவினைத் தரையிலே இட்டும், உடன் பிசைந்தும், வாயாற் கவ்வியும், கையால் துழவியும், நெய்யையுடைய சோற்றை உடம்பில் படச் சிதறியும், இங்ஙனம் இன்பத்தால் மயக்கும் மக்களை இல்லோர்க்கு வாழ்க்கையில் பயனாகிய பொருள் இல்லை'' என்ற கருத்து அமையப் பாடியுள்ளார்.

**படைப்புப்பல படைத்துப் பலரோ டுண்ணும்**
**உடைப்பெருஞ் செல்வ ராயினும், இடைப்படக்**
**குறுகுறு நடந்து சிறுகை நீட்டி**
**இட்டுந் தொட்டுங் கவ்வியுந் துழந்தும்**
**நெய்யுடை அடிசல் மெய்பட விதிர்த்தும்**

**மயக்குறு மக்களை இல்லோர்க்குப்**
**பயக்குறை இல்லைத் தாம்வாழு நாளே** - 188

என்ற பாட்டு மழலை பேசும் குழவியின்பத்தை எடுத்துக்கூறி, குழந்தையில்லாவிட்டால் இல்லற வாழ்வில் இன்பமும் பயனும் இல்லை என்ற உண்மையை மிக அழகாகத் தம் அனுபவத்தோடு அமைத்துப் பாடியிருப்பது நமக்கு இன்பம் பயக்கிறது. 'குறு குறு நடந்து சிறுகை நீட்டி இட்டும் தொட்டும் கவ்வியும் துழந்தும்' என்று அழகாகத் தக்க சொற்களைக் கொண்டு குழந்தையின் செயல்களைக் காட்டியிருப்பது போற்றத்தக்கதாகும். குழந்தை யின் செயல்கள் நம் அறிவை மயக்கும் இயல்பின என்று கூறுகிறார். 'உச்சிதனை முகர்ந்தால் உன்மத்தம் ஆகுதடி' என்று பாரதியார் குழந்தை தம் அறிவை மயக்கும் செய்கையைக் கூறுவதும் இந்த மயக்குறு நிலைமையைத்தான் காட்டுகிறது போலும்.

இதுவரையில் பலர் தம் வாழ்நாட்களுக்குப் பிறகு நரகம் நண்ணாமல் இருக்கக் குழந்தைப்பேறு வேண்டும் என்ற தவறான கருத்தைக் கூறி வந்தனர். பாண்டியன் அறிவுடை நம்பி யாகலான் அவ்வாறு கூறாமல் தாம் வாழும் நாளிலேயே அடையும் இன்பப் பயன் குழந்தைப்பேறு என்ற கருத்தைச் சொல்லியிருப்பது அறிவோடு பொருந்துவதாக இருக்கிறது. 'பயக்குறையில்லைத் தாம் வாழுநாளே' எனக் கூறியிருப்பது பாராட்டத் தக்கதாகும்.

பக்குடுக்கை நன்கணியார் என்ற புலவரின் பாட்டு, உலகவியல்பை ஆராய்ந்து நாம் மேற்கொள்ள வேண்டிய மனவியல்பைக் காட்டி உள்ளத்தின் சோர்வைப் போக்குவதாக உள்ளது. இன்பமும் துன்பமும் இயற்கைப் படைப்பின் உண்மைகளாகும். மனிதரும் உலகத்தில் இன்பத்தையும் துன்பத்தையும் உண்டாக்குகின்றனர். சாவும் வாழ்வும், செல்வமும் வறுமையும், கொடுமையும் நன்மையும், இன்பமும்

துன்பமும் வாழ்வில் காணப்படும் இயல்புகளாகும். இத்தகைய சூழ்நிலையைக் கண்டு உலகில் துன்பமும் கொடுமையும் சூழ்ந்திருக்கின்றனவே என்று உள்ளம் குன்றுவதால் நாம் அடையும் பயன் என்ன? உலகத்தின் இயற்கை அப்படித்தான் இருக்கும் என்ற உண்மையை உணர்ந்து, அதில் இனிமையைக் காணும் பெற்றி வேண்டும் என்று அவர் வற்புறுத்துவது உலகத்துக்கு உணர்த்தும் ஒரு நற்செய்தியாகும்.

அவர் சில காட்சிகளை நம் கண்முன் கொண்டு வந்து நிறுத்துகிறார். ''ஒரு மனையின் கண் மணமுழவு; மற்றோர் இடத்தில் சாப்பறை. காதலரோடு வாழும் மகளிர் பூவணியணிகின்றனர். பிரிந்த மகளிர் வருந்தித் தனிமையுறு கின்றனர். இத்தகைய மாறுபட்ட வாழ்க்கை நிலைகளைப் படைப்புக் கடவுள் பண்பில்லாமல் படைத்து விட்டான். இந்த உலகத்தின் இயற்கை மிகவும் கொடிது; இவ்வியற்கைப் படைப்பில் கொடுமையிருந்தாலும் அதனியல்பை உணர்ந்த வர்கள் எப்படியாவது வாழ்வில் இனிமையைக் காண வேண்டும்'' என்று வற்புறுத்துகிறார்.

**ஓர்இல் நெய்தல் கறங்க ஓர்இல்**
**ஈர்ந்தண் முழவின் பாணி ததும்பப்**
**புணர்ந்தோர் பூவணி யணியப் பிரிந்தோர்**
**பைத லுண்கண் பனிவார்பு உறைப்பப்**
**படைத்தோன் மன்றஅப் பண்பி லாளன்**
**இன்னா தம்மஇவ் வுலகம்**
**இனிய காணகஇதன் இயல்புணர்ந் தோரே** - 194

என்று உலகத்தின் இன்னாமையை உணர்த்தும் ஆசிரியர் அதனோடு நில்லாமல் இவ்வின்னாமை நிறைந்த உலகில் இனிமையையும் காண்பதில்தான் அறிவுடையோரின் சிறப்பு அமைந்துள்ளது எனச் சுட்டிக் காட்டுகின்றார்.

பூங்குன்றனார் என்ற புலவர் வானிற் பறக்கும் பறவையைப் போல் உள்ளம் உயர்ந்து உலகமெல்லாம் ஒன்று எனவும், மனித இனம் ஒன்று எனவும் காணும் காட்சிகள் நம் உள்ளத்தை உயர்த்துகின்றன. 'யாதும் ஊரே யாவரும் கேளிர் என்று கூறும்பொழுது உலகத்தில் உள்ள நாடுகளை ஒற்றுமைக் கண்ணோட்டத்தோடு காணும் காட்சியும், மக்களினம் எல்லாம் உறவினர் என்று கொள்ளும் கொள்கையும் பெறப்படுகின்றன. இன்றைய உலகத்துக்குத் தமிழுலகம் அறிவிக்கும் நற்செய்தி இதைவிட வேறு ஒன்றும் இருக்க முடியாது. உலகத்தில் போரும் பூசலும் நீங்க வேண்டுமென்றால் இந்தக் கொள்கை யாண்டும் பரவவேண்டும்.

''எமக்கு எல்லாம் ஊர்; எல்லாரும் சுற்றத்தினர்; கேடும் ஆக்கமும் தாமே வரினல்லது பிறர்தர வாரா. நோதலும் அது தீர்தலும் அவற்றை யொப்பத் தாமே வருவன. சாதலும் புதிதன்று; வாழ்தலை இனிதென உவந்ததுமிலம்; வெறுப்பு வந்துவிட்டது இன்னாது என்று இகழ்ந்ததும் இலம். வளமான பெரிய ஆற்றில் நீர்வழிப்படும் மிதவைபோல அரிய உயிர் ஊழின் வழியே படும் என்பது நன்மைத்திறம் அறிவோர் கூறிய நூலாலே தெளிந்தனம்; ஆகலின் மாட்சியினையுடைய பெரியோரை வியத்தலும் இலம்; சிறியோரைப் பழித்தல் அதனினும் இலம்'' என்று கூறுகின்றார்.

**யாதும் ஊரே; யாவரும் கேளிர்;**
**தீதும் நன்றும் பிறர்தர வாரா;**
**நோதலும் தணிதலும் அவற்றோ ரன்ன;**
**சாதலும் புதுவ தன்றே; வாழ்தல்**
**இனிதென மகிழ்ந்தன்றும் இலமே; மின்னொடு**
**வானந் தண்துளி தலைஇ ஆனாது**
**கல்பொரு திரங்கு மல்லற் பேர்யாற்று**
**நீர்வழிப் படூஉம் புணைபோல் ஆருயிர்**

**முறைவழிப் படூஉம் என்பது திறவோர்**
**காட்சியின் தெளிந்தனம் ஆகலின் மாட்சியின்**
**பெரியோரை வியத்தலும் இலமே**
**சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே**

என்பது இக் கருத்தை அறிவிக்கும் பாடலாகும்.

இவற்றைப் போன்ற பல நன்மையோடு கூடிய உண்மைகள் புறநானூற்றில் சிதறிய முத்துகளைப் போல ஆங்காங்குக் கிடக்கின்றன. வாழ்வின் அனுபவத்தோடு அமைந்து, வாழ்க்கைக்கு வழிகாட்டுவனவாக நின்று, சிறந்த கருத்தமைந்த இத்தகைய மொழிகளைப் பொருள்மொழிகள் என ஆன்றோர் வழங்கி வந்தனர். உண்மைப் பொருள்களைக் கூறும் இப்பொருள் மொழிகள் பொன்மொழிகளாக விளங்கி இலக்கிய வளத்தை மிகுவித்துக் கற்போர்க்கு ஊன்றுகோல் போல் நின்று, வாழ்க்கையில் வழுக்கிவிழாமல் நன்மை செய்கின்றன என்று கூறலாம்.

# 9. அவல ஓவியங்கள்

புலவர்கள் எடுத்துச் சொல்லும் பொருள் இன்பப் பொருளாகவே இருக்க வேண்டும் என்பதில்லை. துன்பப் பொருளையும் தம் கவிதைப் பொருளாக்கிச் சுவையூட்டும் இயல்பினர் புலவர். வாழ்க்கையில் ஏற்படும் துன்பங்களைச் சொல்லும்பொழுது அவலச்சுவை தோன்றுமாறு செய்து, அந்த நிகழ்ச்சிகளில் பரிவு உணர்ச்சி உண்டாக்கிவிடுகின்றனர்.

இன்ப வேட்கையில் கொண்டுள்ள ஆர்வத்தைப் போலவே பிறர் துன்பத்தைப் போக்க வேண்டும் என்ற ஆர்வமும் மனிதன்பால் இயல்பாக உள்ளது. அதனுல்தான் இலக்கியச் செய்திகளில் துன்பத்தைப் பற்றிச் சொல்லும்பொழுது அத் துன்பத்தில் பங்கு கொண்டு பரிவும் இரக்கமும் பெறுகிறோம். அந்த இரக்க உணர்வு அந்தக் காவிய மாந்தர்களின் வாழ்வோடு ஒன்று படச் செய்து இலக்கியச் சுவையில் ஆழ்த்திவிடுகிறது. இன்பம் ஒரு சிலருக்கே தனியுரிமையாகவும் ஆகலாம். எனினும் துன்பம் உலகத்தின் பொது உடைமையேயாகும். வாழ்க்கையில் துன்பமுருதவர் இரார் என்பது வாழ்வில் காணும் உண்மையாகும்.

பொதுவாக இன்பம் வரும்பொழுது அதற்குக் காரணமான நிகழ்ச்சிகள் எதிர்பார்ராமல் ஒன்று சேர்வதில்லை. மெல்ல மெல்ல மனம் அதற்கு வேண்டிய அடிப்படைகளைப் பெற்றுத் தன்னைச் சூழ்நிலைக்கேற்றவாறு சரிப்படுத்திக் கொள்கிறது. துன்பம் எதிர்பாராமல் சில சமயங்களில் ஏற்பட்டுவிடுவதால்

அவ்வுணர்வு ஆழமாகப் பதிந்து விடுகிறது. மேலும் இன்பம் இல்லையென்ருலும் துன்பம் வந்தால் அதனை அமைதியாக ஏற்றுக்கொண்டிருக்க வியலாது. அதனை ஒழிக்கப் பெருமுயற்சி நடைபெறுவது இயல்பாகிறது. அதனுல் இன்ப உணர்வை விடத் துன்ப உணர்வு யாவர்க்கும் பொதுமையாகிறது; ஆழமாகப் பதிகிறது; மக்கள் உள்ளத்தைத் தாக்க வல்லதாகிறது. காவியத்திலும்; மற்றைய கலைத்துறையிலும் மாந்தர் உள்ளத்தைக் கவரக்கூடிய உணர்வுகளில் அவலச்சுவையே ஆழ்ந்த உணர்வைத் தெரிவிப்பதாக அமைகிறது. கோவலனின் திருமணச் செய்தியைவிட அவன் கொலையுண்ட செய்தியே அக் காவியத்தின் அடிப்படை உணர்வு என்று கூறலாம். கோவலன் காதலில் பாராட்டும் பாராட்டுரையைவிட அவன் சாதலுக்காக அவள் அழும் அழுகை உரையே ஆழ்ந்த உணர்வு பெற்றுள்ளது.

**அன்பனை இழந்தேன் யான் அவலங் கொண்டு அழிவலோ**

என்று கேட்பது உள்ளத்தைத் துன்பத்தில் ஆழ்த்துகிறது.

இன்ப வாழ்வில் தொடங்கி இன்பத்தில் முடியும் இன்பியல் கதைகள் பொதுவாக இடையில் துன்பம் நிறைந்த காட்சிகளைப் பெற்று அவற்றைப் போக்கும் நிகழ்ச்சிகளைப் பெரும் பகுதியாகக் கொண்டு விளங்குகின்றன. துன்பியல் கதைகள் இறுதியில் துன்பத்தில் முடிந்து துயரத்தில் ஆழ்த்திவிடுகின்றன. நாடகங்களின் போராட்டப் பகுதிகளும் துன்பத்தைப் போக்கும் பகுதியையே கொண்டு விளங்குகின்றன. துன்பம் வாழ்க்கையைப் பாழ்படுத்துகிறது; அஃது இலக்கியத்தில் சுவையும் ஆழமும் தந்து அதனை அழகு செய்கிறது.

இந்த அழுகை உணர்வு தோன்றுவதற்கு வாழ்வில் ஏற்படும் துன்ப நிகழ்ச்சிகளே காரணமாகின்றன. வாழ்க்கை சுமையாக ஆகும்பொழுது அழுகை வெளிப்பட்டு அதனை ஆற்ற முற்படுகிறது. இத்துன்ப நிகழ்ச்சிகளுள் வாழ்க்கைக்குத் துணையாக உள்ளவரைப் பிரிதல் பெரிதாகும். உயர்ந்த

நிலையினின்று வாழ்வில் தாழ்வு அடைவதும் துன்பத்திற்குக் காரணம் ஆகின்றது. இவையேயன்றி வறுமையால் வாடும் துன்பமும் அதனுல் அடையும் இழிநிலையும் மக்களுக்கு ஏற்படுகின்ற பொதுத் துன்பங்கள் எனலாம். இவற்றால் தான் பொதுவாக அவல நிலை ஏற்படுகின்றது என்று கூறுவர்.

இவ்வாறு வரும் துன்ப நிகழ்ச்சிகளை இலக்கியம் ஓவியமாகத் தீட்டும்பொழுது அவலச்சுவை பிறக்கின்றது. இந்த அவல ஓவியங்கள், இவ்விலக்கியப் பகுதிகளைக் கற்பார் உள்ளத்தில் அழியா இடம் பெறுகின்றன.

நாட்டைவிட்டு இராமன் காட்டுக்குச் செல்கிருன் என்ற செய்தியைக் கேட்டுத் தசரதன் மட்டும் துன்பப்படவில்லை. அந்த நாட்டில் உள்ள மக்களும் பிற உயிர்களும் அழுதன என்று கம்பர் இராம காதையில் கூறும்பொழுது அக்காட்சி சிறந்த அவல ஓவியமாக அமைகிறது. இராமனது பிரிவால் அந்த நாட்டில் உள்ள ஆவும் அழுதன; அவற்றின் கன்றுகளும் அழுதன; அன்றலர்ந்த பூவும் அழுதன; பிள்ளையழுதன; கிள்ளை அழுதன என்று அந்தத் துன்ப உணர்வை எல்லா உயிர்கட்கும் ஏற்றிக் காட்டிப் படிப்பார் உள்ளத்தில் அவலச்சுவையை அவர் உண்டாக்கிவிடுகின்ருர். மேலும், அதே தொடர்ச்சியில் பிற உயிர்களும் உயிரற்ற சோலை நீர் முதலியனவும் இராமன் பிரிந்தான் என்ற செய்தியால் அழுது கலங்கின என்று கூறுகின்ருர்.

**கிள்ளையொடு பூவை யழுத; கிளர்மாடத்**
**துள்ளுறையும் பூசை யழுத; உருவறியாப்**
**பிள்ளை யழுத; பெரியோரை யென்சொல்ல**
**வள்ளல் வனம்புகுவான் என்றுரைத்த மாற்றத்தால்**

**- நகர் நீங்கு. 100**

**ஆவும் அழுத; அதன் கன்றழுத; அன்றலர்ந்த**
**பூவும் அழுத; புனற் புள்ளழுத; கள்ளொழுகுங்**

**காவும் அழுத; களிறழுத; கால்வயப்போர்**
**மாவும் அழுத; அம் மன்னவனை மானவே**

**- நகர் நீங்கு. 102**

என்று அவர்களின் அழுகையைத் தனித் தனியே கூறி அவலத்தை மிகுவிக்கின்றார்.

இவ்வாறு சேண்தூரம் சென்று பிரிந்து வாழ்வதால் அவரைப் பிரிந்தவர் அடையும் துன்பத்தைவிட, உயிர் துறந்தவரைப் பிரிந்து வாழ்வது கொடுமையினும் கொடுமையாகும். அவர்களுள்ளும் நெருங்கிய உறவினருள் செறிந்த நட்பாலும், அன்பாலும், ஆழ்ந்த உணர்வாலும் உள்ளம் ஒன்றுபட்டவர்களுள் ஒருவர் பிரிந்தாலும் மற்றவருக்கு அத்துன்பம் மாரு வடுவாக நின்றுவிடுகின்றது. புறநானூற்றில், நட்பும் பெட்பும் கொண்டு நெல்லிக்கனியை அதன் பெருமையைச் சொல்லாது அவ்வைக்குக் கொடுத்த வள்ளலாக விளங்கிய அதியர்கோன் ஆருயிர் துறந்தபோது, அந்த அவலத்தைத் தாங்காமல் அரற்றிய அவ்வையாரின் கையறுநிலைப் பாடல், அவன் பேணிவந்த பாணரும் பாவலரும் சுற்றமும் பற்றுக்கோடு இன்றிச் செயலற்றுச் சோர்வுற்ற செய்தியைக் கூறுகின்றது. பாணர்பால் கொண்டிருந்த நட்பால், அவன் பெட்புடன் பெருவளம் நல்கி அவர்களோடு பகிர்ந்து மகிழ்ந்துண்ட மாண்பையும், நாவலர் நாவன்மை இழக்கும் நிலையையும், சுற்றத்தினர் சோர்வால் சிந்தும் கண்ணீரையும் தம் கண்ணீரைக் கொண்டு ஓவியமாகத் தீட்டக் காண்கிறோம்.

''அதியமான் தான் வாழுங் காலத்தில் சிறிய அளவுள்ள கள் கிடைத்தால் அதனை எங்களுக்குக் கொடுத்து அவன் மனமகிழ்வு கொள்வான்; மிகுந்த அளவுள்ள கள் கிடைத்தால் நாங்கள் பாட அவன் மகிழ்ந்து உண்பான். சிறு அளவு உணவு இருந்தாலும் அதனைப் பல கலத்திற் பகிர்ந்து பலரும் உண்ணத் தருவான். பெருஞ்சோருக இருந்தாலும் அதனைப் பலருக்கும்

பகிர்ந்து கொடுத்து அவர்களோடு உடனிருந்து மகிழ்ந்து உண்பான். அந்த உணவில் கொழுவிய இறைச்சிப் பகுதிகளையும், எலும்புத் துண்டுகளையும் பொறுக்கி எடுத்து அவற்றை யாம் உண்ணக் கொடுப்பான். அம்பும் வேலும் நிரம்பும் அமர்க்களங்களில் எல்லாம் தான் மட்டும் தனித்துச் செல்வான். உணவு எனில் எங்களைத் துணையாகக் கொள்வான்; போரெனில் துணை வேண்டாது தனித்துச் செல்வான். நரந்த மலரின் நறுமணம் வீசும் தன் கையால் புலவு நாறும் என் தலையைத் தடவிக் கொடுத்து அன்பு காட்டுவான். அத்தகைய புரவலன் எங்களைவிட்டு அகன்று விட்டானே'' என்று அவன் வாழ்ந்த கதையை ஆழ்ந்த உணர்வோடு எடுத்துக் கூறுவது உள்ளம் உருக்கும் காட்சியாக விளங்குகிறது.

**சிறியகள் பெறினே எமக்கீயும் மன்னே**
**பெரியகள் பெறினே**
**யாம்பாடத் தான்மகிழ்ந் துண்ணு மன்னே**
**சிறுசோற் றானும் நனிபல கலத்தன் மன்னே**
**பெருஞ்சோற் றானும் நனிபல கலத்தன் மன்னே**
**அம்பொடு வேல்நுழை வழியெல்லாந் தானிற்கும் மன்னே**
**நரந்த நாறுந் தன்கையாற்**
**புலவுநாறும் என்தலை தைவரும் மன்னே** - புறம். 235

என்று கடந்தகால நிகழசச்சிகளைக் கிடந்தவாறு விளக்குகிறார்.

இனி அவன் மறைந்துவிட்டதால் புலவர்களுக்கும் மற்றையோருக்கும் ஏற்படும் இழவு எத்தகையது என்று எடுத்துக் கூறுவது அதைவிட உருக்கமாக அமைந்துள்ளது.

''அவன் மார்பிற் பாய்ந்த வேல் மார்பில் மட்டும் பாய்ந்து அவன் உயிரைச் செகுக்கவில்லை. அஃது இசை பாடும் பாணரின் கைப் பாத்திரத்தினைத் துளைத்து, இரப்போர் கையுள்ளும் பாய்ந்து, அவன் புகழ்பாடும் பாவலரின் நாவில் சென்று வீழ்ந்தது'' என்று கூறுகின்றார்.

**அருந்தலை யிரும்பாணர் அகன்மண்டைத் துளையுரீஇ**
**இரப்போர் கையுளும் போகிப்**
**புரப்போர் புன்கண் பாவை சோர**
**அஞ்சொல்நுண் தேர்ச்சிப் புலவர் நாவிற்**
**சென்றுவீழ்ந் தன்றவன்**
**அருநிறத் தியங்கிய வேலே** - புறம். 235

என்று தொடர்ந்து கூறுகின்றார். அவன் அரிய மார்பைப் பிளந்த வேல் பலரின் இதயத்தையும் பிளந்து விட்டது என்று கூறுவார் போல இக் கூற்றினை அமைக்கிறார்.அவனால் புரக்கப்படும் சுற்றத்தினர் வாழ்விற் பொலிவிழந்து பையுள் எய்தும் காட்சியைப் 'புரப்போர் புன்கண் பாவை சோர' என்ற தொடரால் குறிப்பிடுகின்றார்.

உற்றவரை இழப்பதால் வரும் துன்பம் எதிர்பாராமல வருவதாகும். அதைப் போலவே பொருளாலும் வாழ்வு நிலையாலும் தாழ்வு உற்று நிலைகெடுவதும் எதிர்பாராமல் நிகழ்வதாகும். இத்தகைய நிலை பெரும்பாலும் உற்றவரையோ உறவினரையோ இழப்பதால் அதனை அடுத்து வரும் தொடர் நிகழ்ச்சியாக அமைகிறது. சீவக சிந்தாமணியில் இத்தகைய காட்சி ஒன்று புலவரால் காட்டப்படுகிறது. நாடிழந்தும், கணவனை இழந்தும் காடு சென்று தனித்து மகவைப் பெற்ற சச்சந்தனின் மனைவியான விசயமாதேவியின் நிலை இத்தாழ்வுநிலையைக் காட்டுகிறது. தன் கணவனான சச்சந்தன் கட்டியங்காரனின் சூழ்ச்சிக்கு ஆளாகி அதனால் வீழ்ச்சிக்கு இரையாகிறான். கட்டியங்காரன் தன் மீது போர் தொடுக்கிறான் என்ற செய்தியை உணர்ந்த சச்சந்தன் அதற்கு முன்னரே மயிற்பொறி ஒன்றில் அவளை ஏற்றி அனுப்பிவிடுகிறான். விண்ணளாவி விரைந்து செல்லும் மயிற்பொறியில் இருந்த விசயமாதேவி கட்டியங்காரனின் வெற்றி முழக்கம் கேட்டு மன்னவன் மாண்டு விட்டதை உணர்கிறாள். உடனே மயங்கி விசையை முடுக்க மாட்டாமல் செயலறுகிறாள்; விண்ணில் ஊரும்

ஊர்தி தானே மண்ணில் இறங்கி விடுகிறது. அவள் மூர்ச்சித்துச் செயலற்றுவிட்டதால் அவ்வூர்தியும் பறத்தல் அற்றுத் தானே கீழே இறங்கிவிடுகிறது. இறங்கிய அந்த இடம் இடுகாடாக இருக்கிறது.

கருவுற்றிருந்த விசயமாதேவி அந்த இடுகாட்டில் நடுஇரவில் நன்மகனைப் பெறுகிருள். அந்த நிலையில் தான் முன்னிருந்த உயர்நிலையையும் அப்பொழுது இருக்கும் தனிமை நிலையையும் எண்ணிப் பார்த்து வேறுபாட்டைக் காண்கிருள். இந்த மாற்றம் அவளுக்கு ஆற்ருெணாத் துன்பத்தை அளிக்கிறது. கண் திறந்து பாராத அப் பச்சிளங் குழவியைப் பார்த்து, ''இந்தச் சூழ்நிலையிலா நீ பிறக்க வேண்டும்?'' என்று கூறும் அவள் சொற்கள் நெஞ்சுருகச் செய்கின்றன. ''நீ பிறக்க வேண்டிய இடமா இது?'' என்று கேட்கிருள். ''தாதியர் சூழ மங்கலம் முழங்க மன்னவனின் அரண்மனையில் பிறக்கவேண்டிய நீ, பேய்கள் சூழ நரிகள் ஊளை இடும் இடுகாட்டிலா பிறக்க வேண்டும்?'' என்று கேட்கிருள். ''மன்னனின் அரண்மனையாக இச் சுடுகாடு அமைந்துவிட்டது. முழவுக்கு மாருக நரிகளின் ஊளையிடும் ஒலி முழங்குகிறது. ஈம நெருப்பின் ஒளியே விளக்காகவும் இடுகாடே உயர் அரங்காகவும் அமையப்பேய் அசைந்து ஆடக் கோட்டான் குழறிப் பாராட்ட, இத்தகைய சூழலிலேயா நீ பிறக்க வேண்டும்?'' என்று மனமுருகக் கூறுகிறாள். ''அரங்கிலே மகளிர் ஆட அருகிருந்து தாதியர் தாலாட்டுப் பாட மகவு பிறந்த மகிழ்ச்சியில் மன்னவன் மகிழப் பிறக்க வேண்டிய நீ இங்கு இடுகாட்டில் நடு இரவில் நரியின் ஊளையிடும் ஓலத்தையும் பேயாட்டத்தையும் கோட்டானின் கூக்குரலையும் கேட்கும் பயங்கரமான இடத்தில் இனிமை இழந்த தனிமையிலா பிறக்க வேண்டும்?'' என்று கேட்பது, வாழ்வில் ஏற்பட்ட தாழ்வை எண்ணிப்பார்த்து நிலை கெட்டமைக்கு அலைவுறும் நிலையைக் காட்டுகிறது.

**வெவ்வாய் ஓரி முழவாக விளிந்தார் ஈமம் விளக்காக**
**ஒவ்வாச் சுடுகாட் டுயரரங்கில் நிழல்போல் நுடங்கிப் பேயாட**

**எவ்வாய் மருங்கிம் இருந்திரங்கிக் கூகை குழறிப் பாராட்ட**
**இவ்வாருகிப் பிறப்பதோ இதுவோ மன்னாக் கியல்வேந்தே**

என்று ''மன்னவர்க்குக் கிடைக்கும் வாழ்வா இது?'' என்று கேட்கிருள்.

இதைப் போலவே தந்தை மறைய, நாடு பிறர் கைப்பற்ற, அதனால் வாடிய உள்ளத்தோடு நாட்டைவிட்டுச் சென்ற பாரிமகளிர், தாம் தந்தையோடு இருந்த நாளில் இருந்த முந்தைய வாழ்வையும், நாடிழந்து சிறுமையுற்றுப் பெருமை யிழந்த அப்பொழுதைய தாழ்வையும் எண்ணிப் பார்த்து வருந்தி ஒப்பிட்டுக் கூறுவது சிறந்த அவல ஓவியமாக விளங்குகிறது.

''மூவேந்தர் முற்றுகையிட்டு நாட்டைப் பற்றிக் கொள்வதற்கு முன் எம் தந்தை எங்களோடு இருந்தார். அன்றைய திங்களில் அவ்வெண்ணிலவில் எம் குன்றையும் பிறர் அடையவில்லை. இஃது அப்பொழுதைய நிலை. இப்பொழு தைய நிலை அதற்கு முற்றிலும் மாறிக் கிடக்கிறது. இன்றைய திங்களில் இவ்வெண்ணிலவில் வென்றெறி முரசின் வேந்தர் எம் குன்றையும் கொண்டார்; எம் தந்தையும் எம்மோடு இல்லை'' என்று இரண்டு நிலவுக்காட்சிகளில் அவர்கள் கொண்ட இனிமையையும் தனிமையையும் ஒரு சேரக் கூறி, முன் இருந்த வாழ்வின் உயர்வையும் பின் அடைந்த தாழ்வின் இழிவையும் எடுத்துக் கூறுகின்றனர்.

**அற்றைத் திங்கள் அவ்வெண் ணிலவில்**
**எந்தையும் உடையேம்எம் குன்றும் பிறர்கொளார்**
**இற்றைத் திங்கள் இவ்வெண் ணிலவில்**
**வென்றெறி முரசின் வேந்தர்எம்**
**குன்றுங் கொண்டார்யாம் எந்தையும் இலமே** - புறம். 112

என்று அவர்கள் தந்தையைப் பெற்றிருந்த காட்சியையும், அவர் மறைந்ததால் ஆட்சியிழந்து பெருமை குன்றிவிட்ட நிலையையும் ஒருசேரக் கூறி அவல உணர்வை உண்டாக்குகின்றனர்.

இவ்வாறு, இழவாலும் வாழ்க்கைநிலை மாறுவதாலும் துன்பம் பிறத்தல் இயல்பாகும். இத்தகைய துன்ப வாழ்வு எதிர்பாராமல் நிகழ்வதாகும். இவ்வாறு இல்லாமல் பலருடைய துயரத்திற்குக் காரணமாக அமைவது வறுமையாகும். இல்லை என்பதால் வரும் தொல்லைகள் மனிதருடைய வாழ்வில் இன்பமும் மதிப்பும் இல்லாமல் செய்து விடுகின்றன.

இத்தகைய வறுமையால் உண்டாகும் துயரம் நாள்தோறும் வளர்ந்து நலிவையும் மெலிவையும் ஈந்து வாழ்வில் தலையெடுக்க ஒட்டாமற் செய்துவிடுகிறது. அத் துன்பம் புலவர்களின் வாழ்விலே சொந்த அனுபவமாகவும் அமைந்துவிடுகின்ற காரணத்தால், அஃது இன்னும் சிறப்பாகக் கூறப்படுகிறது.

சில புலவர்களின் வாழ்வில் இவ்வறுமை குடி புகுந்து அவர்கள் குடும்பத்தைச் சுவை பார்த்து அவர்கள் வாழ்வைச் சுவையற்றதாக ஆக்கிவிட்டது. வறுமையின் கொடுமையை நன்குணர்ந்த பெருஞ்சித்திரனர் தீட்டிக் காட்டும் அவர் வீட்டுவாழ்வு புறநானூற்றில் ஒரு பெருஞ் சித்திரமாகவே அமைந்து விடுகிறது.

அடுப்பில் அடுதல் செய்து பலநாள் ஆகின்றன. சாம்பல் விழாத காரணத்தால் அடுப்பு ஆழமாகத் தோன்றுகிறது. அதன் பக்கங்கள் உயர்ந்து விளங்குகின்றன. சூடு படாததால் அடுப்புக் குளிர்ச்சி அடைந்து விடுகிறது. அக்குளிர்ச்சியால் காளான் பூத்துக் குலுங்குகிறது. அவர்கள் வாழ்வு மட்டிலா வறுமையால் கலங்குகிறது. கைக்குழந்தையோ பால் குடிக்க அவாவுகிறது. பசியால் அலந்து மெலிந்து கிடப்பதால் தாய் குழந்தைக்குப் பால் ஊட்ட முடியவில்லை. பாலின்மையால் சுவைத்துப் பார்த்துச் சலித்துவிட்ட குழந்தை அழத் தொடங்குகிறது. அழும் குழந்தையை ஆற்ற ஆற்றலிழந்தவளாய்க் கண் நிறைய நீர் கொண்டு அவள் கலங்கி நிற்கிருள். புலவர் உள்ளம் மிகவும்

மென்மையானது என்பதை நன்குணர்ந்த அவள் தன் கணவனைக் கடிந்து ஏதும் கூறியதாகத் தெரியவில்லை. சொல்லும் சொற்களைவிடக் கலுழும் கண்ணீருக்கு ஆற்றல் மிகுதியாகிறது; அழகிய பாடல் எழக் காரணமாகிறது. அக்கண்ணீர் அக்கலைஞரின் இதயத்தைக் கலக்கி, ஒரு சித்திரமாக வடித்துக் காட்டக்காரணமாக அமைகிறது.

**ஆடுநனி மறந்த கோடுயர் அடுப்பின்**
**ஆமபி பூப்பத் தேம்புபசி உழவாப்**
**பாஅல் இன்மையின் தோலொடு திரங்கி**
**இல்லி தூர்ந்த பொல்ல வறுமுலை**
**சுவைத்தொறு அழூஉந்தன மகத்துமுக நோக்கி**
**நீரொடு நிறைந்த ஈரிதழ் மழைக்கண்என்**
**மனையோள் எவ்வம்** - புறம். 164-1-7

என்று அவள் உழந்த துன்பத்தை எடுத்துக் காட்டுகிறார்.

மேலும் இத் துன்பக் காட்சி அவர் பாடும் மற்றொரு பாடலால் செறிவு பெறுகிறது. பசியின் கொடுமையால் எதையாவது உண்டுதானே ஆக வேண்டும். குப்பைக் கீரை கொய்து கொய்து அவையும் தட்டையாகிவிடுகின்றன. அவை மீண்டும் முளைக்கும் தோறும் களைந்து கொண்டுவந்து உப்பும் இல்லாமல் நீரில் வேகவைத்து மோரும் இன்றிக்கீரைமட்டும் உண்டு சோறு மறந்த வாழும் வாழ்வைக் காட்டுகிறார்.

**குப்பைக் கீரை கொய்துகண் அகைத்த**
**முற்றா இளந்தளிர் கொய்துகொண்டு உப்பின்று**
**நீர்உலை யாக ஏற்றி மோரின்றுமிசைந்து**
**அவிழ்ப்பதம் மறந்து பாசடகு மிசைந்து**
**மாசொடு குறைந்த உடுக்கையள்** - புறம். 159

என்று இப்பாடலில் அவள் உண்ட எளிய உணவையும், கொண்ட மாசு படிந்த உடையையும் காட்டுகின்றார். அந்த

நிலையிலும் அவள் அறத்தைப் பழிக்காமல் தன் கணவனை விரும்பும் உயரிய நிலையை, 'அறம் பழியாத் துவ்வாளாகிய என் வெய்யோள்' என்று கூறிச் சிறப்பிக்கின்றார்.

வாழ்க்கையில் மற்றைய குறைகளை வாய்விட்டுக் கூறமுடிகிறது. ஆனால் வறுமையைப் பற்றி மட்டும் வாய்விட்டுக் கூற முடியாமல் உள்ளுக்குள்ளே விழுங்கி வாடுவது இயல்பாக உள்ளது. வறுமையால் வாடும் நிலையை வாய்விட்டுச் சொன்னால் மனிதரின் மானம் குறைகிறது. அதனால் வயிற்றுக்கு உணவு இல்லையென்றாலும் வாய்விட்டுக் கூற மானமுள்ள மக்களால் இயல்வதில்லை.

கிணைமகள் ஒருத்தியின் பசியைக் காட்டும் சிறுபாணாற்றுப்படை, எளிய உணவை உண்டால் பிறர் எள்ளி நகையாடும் மடமை உலகில் உள்ளது என்பதால், அவள் அட்ட எளிய உணவைக் கதவையடைத்துப் பிறர் காணாதவாறு சுற்றத்திற்குப் படைத்துத் தானும் உண்ணும் காட்சியைக் காட்டுகிறது.

**ஒல்குபசி உழந்த ஒடுங்குநுண் மருங்குல்**
**வளைக்கைக் கிணைமகள் வள்ளுகிர்க் குறைத்த**
**குப்பை வேளை உப்பிலி வெந்ததை**
**மடவோர் காட்சி நாணிக் கடையடைத்து**
**இரும்பேர் ஒக்கலொடு ஒருங்குடன் மிசையும்**
**அழிபசி வருத்தம் வீட** -**சிறுபாண்; 135-140**

என்று அவள் பசியை வீழ்த்தும் அழகிய காட்சியைக் காட்டுகின்றது. எளிய உணவை உண்பதை இகழும் அறியாமை உலகில் உள்ளது என்பதை உணர்ந்த இணைமகள் கதவை அடைந்து உணவு பரிமாறி உண்கின்றாள். வறுமையை வாழ்வின் குறையாக எண்ணி ஏழைகளை மதிக்காதவர்களைக் குறிப்பாக 'மடவோர்' என்று பாடல் குறிப்பிடுகின்றது.

வறுமையில்வாடுவோர் குப்பையில் முளைக்கும் கீரையை உப்பில்லாமல் உண்ணும் காட்சியைக் காட்டுவதில் சிறுபாணாற்றுப் படைப்பாடலும் புறநானூற்றுப்பாடலும் ஒத்து இருப்பது அக்கால நிலையைக் காட்டுகின்றது எனலாம்.

இந்த வறுமைச் சித்திரங்களைத் தீட்டும் புறநானூற்றுப் பாடலுக்கும் சிறுபாணாற்றுப்படைப் பாடலுக்கும் மற்ருேர் ஒற்றுமை நிலவுகிறது. புறநானூற்றுப்பாடல் பாலின்மையால் சுவைத்துச் சலித்துத் தாய் முகம் நோக்கி அழும் குழந்தையின் துன்பத்தைக் தண்டு தாயின் கண்களில் நீர் கலங்கும் காட்சியைக் காட்டுகிறது. சிறுபாணாற்றுப்படை அதைப் போன்ற துன்பக் காட்சியை நாயின் வாழ்க்கையில் வைத்துக் காட்டுகின்றது. நாய்க்குட்டி பிறந்து இன்னும் கண்களைத் திறக்கவில்லை; பசியால் தாயின் பாலைச் சுவைத்துப் பார்க்கின்றது. அதற்குப் பால் கிடைக்கவில்லை. அந்த வீட்டிலேயே உணவு இல்லை என்றால் நாய்க்கு எங்கிருந்து உணவு கிடைக்கும்? பசியால் மெலிந்து இருக்கும் அந்தப் புனிற்று நாய் என் செய்யும்? மடியிலோ பால் இல்லை, அதன் குட்டி படுத்தும் பாடு தொல்லையாக முடிகிறது. மடியைக் கவர்ந்து இழுத்துத் துன்புறுத்தும் அந் நோயை அதனுல் பொறுக்கமுடியாமல் குரைக்கிறது. அத்தகைய நாய் குரைக்கும் அடுதல் மறந்த அட்டில் என்று அச் சமையலறையைக் குறிப்பிடுகின்ருர்.

**திறவாக் கண்ண சாய்செவிக் குருளை**
**கறவாப் பால்முலை கவர்தல் நோனாது**
**புனிற்றுநாய் குரைக்கும் புல்லென் அட்டில்**
**- சிறுபாண். 130-133**

என்று அந்த அட்டில் வருணிக்கப்படுகிறது.

குழந்தையின் பசியைக் கண்டு வருந்தும் தாயும் குட்டியின் தொல்லையைப் பொறுக்க முடியாத நாயும் பசியின்

கொடுமையைக் காட்டும் சித்திரங்களாக அமைகின்றனர். அந்த அளவில் இரண்டு பாடல்களிலும் கருத்து ஒற்றுமை காணப்படுகின்றது. பசி என்றால் அது குழந்தையைத் தாக்கும் பொழுதுதான் மிகுதியாக உணரப்படுகிறது என்பதை இப் புலவர்கள் காட்டியுள்ளனர்.

வாழ்வில் நெருங்கிய உறவினரையும் நண்பினரையும் இழப்பதாலும், உயரிய வாழ்வு தீர்ந்து நலிவு அடைவதாலும், வறுமை வந்து அடைகிறது. அவ் வறுமையால் வாழ்க்கையில் மற்றவர்களின் மதிப்பை இழக்கக் கூடிய தாழ்வு ஏற்பட்டு விடுகிறது. இத்தகைய தாழ்வினை 'இளிவு' என்பர். இந்த இளிவுக்கு அஞ்சித்தான் கிணைமகள் மடவோர் காட்சிக்கு நாணிக் கதவடைத்து உணவு உண்டதாகக் கூறப்படுகிறது.

வாழ்வில் அவலம் ஏற்படுவதற்கு இழவு, நிலை கெடல், வறுமை, இளிவு ஆகிய இந் நான்கே பொதுவாகக் காரணமாகின்றன. நிலைகெடல் என்பதை ஆசிரியர் தொல்காப்பியனார் 'அசைவு' என்று குறிப்பிடுவர். தொல்காப்பியத்தின் பொருளதிகாரத்தில் மெய்ப்பாடுகளைப் பற்றி விளக்கும் ஆசிரியர் தொல்காப்பியனார்,

**இளிவே இழவே அசைவே வறுமையென**
**விளிவில் கொள்கை அழுகை நான்கே** — சூ. 253

என்று அழுகை தோன்றுவதற்கு இந் நான்கு காரணங்களைக் கூறுகின்றார். இந் நான்கு பொருள்பற்றி அழுகை பிறப்பதைத் தமிழிலக்கியம் பல ஓவியங்களாகக் காட்டியுள்ளது.

இந்த அழுகைச்சுவையை ஓவியமாகத் தீட்டும் பொழுது அஃது அழகுணர்ச்சியையும் தருகிறது. இலக்கியத்தில் அழகுணர்வு தரும் இந் நிகழ்ச்சிகள் வாழ்க்கையில் அழுகையை உண்டாக்கி விடுகின்றன. வாழ்க்கையின் அழுகை ஓலங்களை இலக்கியத்தில் அவல ஓவியங்களாகப் புலவர்கள் தீட்டிவிடு

கின்றனர். புலவர்கள் இந்த அழுகை உணர்வை அவல ஓவியங்களாகத் தீட்டி அழகுணர்வை உண்டாக்கி, உலகத்தின் பொதுத் துன்பத்தைப் பற்றியும் அதன் நீக்கத்தைப் பற்றியும் மக்களைச் சிந்தனை செய்யுமாறு தூண்டி வாழ்க்கையைச் செம்மைப்படுத்துகின்றனர் என்று கூறலாம்.

# 10. நாடும் மொழியும்

தெள்ளு தமிழில் தீஞ்சுவைக் கவிகள் இயற்றி நெஞ்சை அள்ளிய கவிஞர்கள் பலர். அவர்களுள் நாட்டையும் மொழியையும் ஏட்டில் பாடி நல்லுணர்வு ஊட்டிய பெருமை பாரதியாரையே சாரும். மற்றைய கவிஞர்களுக்கு இல்லாத தனிப் பெருமை இவருக்கு உண்டு. நாட்டு உணர்வும் மொழிப் பற்றும் தோன்றும் வகையில் நற்கவிதைகள் பாடி ஆற்றலும் அறிவும் ஊட்டித் தாழ்வும் தயக்கமும் போக்கி வாழ்வும் வழியும் வகுத்து மக்கட்கவிஞர் எனப் போற்றப் பெறும் வகையில் இன்று தமிழுலகம் போற்றும் தனிப்பெருங் கவிஞராக விளங்குகின்றார்.

வங்கத்தில் தாகூர் பிறந்து மொழியுணர்வையும் நாட்டுப் பற்றையும் உணர்த்தியவாறு போலவே, மொழியுணர்வையும் நாட்டுப் பற்றையும் தமிழ்நாட்டுக்குக் கவிதையால் ஊட்டியவர் பாரதியார் ஆவார். கவிஞன் பிறக்கும் சூழ்நிலையும் காலமும் அவனை ஒவ்வொரு வகையாக உருவாக்குகின்றன. ஒரே காலத்தில் நாட்டுப் பற்றையும் மொழிப் பற்றையும் உண்டாக்கிய நற்கவிஞர்களாகிய பாரதியும் தாகூரும் இந் நாட்டில் தோன்றினரென்றால், காலத்தின் கரங்களும் ஞாலத்தின் சூழ்நிலையும் இத்தகைய போக்குடைய கவிஞர்களைப் படைத்தன எனலாம்.

பாரதி கவிதையுலகில் ஒரு புதுமையை உண்டாக்கியவர். எளிய தமிழில் எதையும் சொல்லி வாழ்வில் எழிலையும் எழுச்சியையும் உண்டாக்க முடியும் என்று காட்டிய புதுமையை

இவர் கவிதையில் காணலாம். அப் புதுமையோடன்றி நாட்டுணர்வை நலமுற ஊட்டிய பெருமையும் இவரைச் சாரும்.

அந்நியர் ஆட்சியில் தன்னிலை கெட்டுத் தடுமாறிய நிலையில், மக்களை உரிமைப் போருக்கு ஒருங்கெழத் தூண்டியது இவருடைய கவிதைகளின் தன்னிகரில்லாப் பெருமையாகும். உரிமை வேட்கையை இவர் உணர்த்தியது போல வேறு எவரும் உணர்த்தியிருக்க முடியாது. உரிமை இல்லாவிட்டால் வெறு மாலைகளைச் சுமக்கும் உயிரில்லாப் பிணத்தின் கோத்தைப் போன்றதே மனிதரின் போலிவாழ்வு என்று உணர்த்துகிறுர்.

**நின்னருள் பெற்றி லாதார் நிகரிலாச் செல்வரேனும்**
**பன்னரும் கல்விகேள்வி படைத்துயர்ந் திட்டாரேனும்**
**பின்னரும் எண்ணிலாத பெருமையிற் சிறந்தாரேனும்**
**அன்னவர் வாழ்க்கை பாழாம் அணிகள் வேய் பிணத்தோ**
**டொப்பார்**

என்று உரிமையின் உணர்வை உணர்த்துகிறுர். உயிரிருந்தால் தனிமனிதர் வாழ்வு உண்டு; உரிமையிருந்தால் நாட்டு வாழ்வு உண்டு என்ற கருத்தை உணர்வு பொருந்த உணர்த்துகின்றுர்.

அந்த உரிமை ஒருசிலருக்கே மட்டும் பயன்படும் உரிமையாக இருக்கக் கூடாது என்பதையும், அந்த உரிமையால் பெறும் பயன் இன்னது என்பதையும்,

**ஏழை யென்றும் அடிமை யென்றும்**
**எவனும் இல்லை சாதியில்**
**இழிவு கொண்ட மனித ரென்பது**
**இந்தியாவில் இல்லையே**

என்ற விடுதலைப் பாட்டால் உணர்த்துகின்றுர்.

நம் வாழ்வு இந்த நாட்டோடு எவ்வாறு இணைந்து, நம் உணர்வுகள் எவ்வாறு பிணைந்து அமைந்திருக்கின்றன என்பதை நாட்டு வணக்கப் பாடலில் நன்கு காட்டி நாட்டுக்கும் நமக்கும் உள்ள உறவைத் தெளிவுபடுத்துகின்ருர்.

**எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி**
**இருந்ததும் இந்நாடே - அதன்**
**முந்தையர் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்து**
**முடிந்ததும் இந்நாடே**

என்று நாட்டுக்கும் நமக்கும் உள்ள உறவின் பழமையையும் பழக்கத்தையும் நன்கு காட்டுகின்ருர்.

நாம் பிறந்து வளர்ந்ததும் நம்மைப் பெற்ற தாயார் தோன்றி வளர்ந்து மழலைகள் பேசிக் கன்னியராகிக் களித்து மகிழ்ந்ததும் இந்நாடே என்று கூறி, நாம் மட்டும் அல்ல நம் அன்னையரும் அவர் முன்னையரும் வாழ்ந்ததும் இந்நாடு என்பதை உணர்த்துகின்றார்.

**இன்னுயிர் தந்தெமை ஈன்று வளர்த்து அருள்**
**ஈந்ததும் இந்நாடே - எங்கள்அன்னையர் தோன்றி**
**மழலைகள் கூறி**
**அறிந்ததும் இந்நாடே - அவர்**
**கன்னியராகி நிலவினிலாடிக்**
**களித்ததும் இந்நாடே**

என்று, நாட்டுக்கும் நமக்கும் உள்ள நெருங்கிய தொடர்பைத் தம் பாட்டுத் திறத்தால் இசைத்துக் காட்டுகின்ருர்.

பாரத அன்னையின் திருப்பள்ளி யெழுச்சியாக அமைக்கும் பாடலில் தூங்கும் நாட்டைத் துயிலெழுப்பி மக்களுக்கு உணர்வூட்டும் உயரிய பண்பைக் காண்கிருேம். பாரத அன்னையை எழுப்புவது போலப் பாட்டு

அமைந்திருந்தாலும் அப் பாடல் மக்களை எழுப்புவதாகவே அமைந்துள்ளது.

**விழிதுயில் கின்றனை இன்னும்எம் தாயே!**
**வியப்பிது காண்! பள்ளி யெழுந்தரு ளாயே**

என்று பள்ளி எழுப்புகின்ருர்.

மக்கள் எழுச்சியில் ஒரு தனி எழிலைக் காண்கின்றார். அதை பாரத அன்னையின் எழுச்சியாகக் கூறி அந்த எழுச்சியில் எழிலை எப்பொழுது காண்போம் என ஏங்குகின்ருர்.

**நின்னெழில் விழியருள் காண்பதற்கு எங்கள்**
**நெஞ்சகத்து ஆவலை நீயறியாயோ!**

என்று கேட்டு, அவ்வெழுச்சியில் ஒரு தனி வேட்கையை எழுப்பிவிடுகிறார்.

நாடு வாழ, மொழியும் வாழவேண்டும் என்ற நல்லுணர்வு பாரதியின் பாடலில் ஆழப் பதிந்து கிடக்கிறது. அதனுல்தான் நாட்டின் உணர்வு பெருகப் பாடிய அப் பாவலர் மொழியின் பெருமையையும் மிகச் சிறப்பாக உணர்த்துகின்றார்.

**யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்**
**இனிதாவது எங்குங் காணோம்**

என்று தமிழின் இனிமையைத் தம் இனிய பாடலில் இசைத்துக் காட்டுகின்ருர்.

ஒரு மொழியின் பெருமையை அந்த மொழியில் தோன்றும் உயர்ந்த கவிகளின் சிறப்பாலேயே உலகம் மதிக்க முடிகிறது என்பதை நன்குணர்ந்த பாரதியார்,

**யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல் வள்ளுவர்போல்**
**இளங்கோ வைப்போல்**

**பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை; உண்மை வெறும்**
**புகழ்ச்சி யில்லை**

என்று, தமிழ்ப் புலவர்களின் பெருமையை நிலைநாட்டுகின்றார்.

பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடர் போன்று அறியாமையால் ஆழ்ந்திருக்கும் அனைவரும், தெள்ளு தமிழமுதின் சுவையைக் கண்டால் அவர் போன்று அழியா வாழ்வு பெற்று விழி பெற்று உயர்வடைவர் என்பதைக் காட்டுகிறார். உள்ளத்தில் எழும் உண்மையொளியால் தீஞ்சுவைத் தமிழில் கலைப்பெருக்கும் உண்டானால், நாட்டில் மொழியுணர்வும் ஒளிமிக்க வாழ்வும் உண்டாகும் என்பதை அறிவுறுத்துகிறார்.

**உள்ளத்தில் உண்மையொளி யுண்டாயின**
**வாக்கினிலே ஒளியுண் டாகும்;**
**வெள்ளத்தின் பெருக்கைப்போல் கலைப்பெருக்கும்**
**கவிப்பெருக்கும் மேவு மாயின்**
**பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெலாம்**
**விழிபெற்றுப் பதவி கொள்வார்;**
**தெள்ளுற்ற தமிழமுதின் சுவைகண்டார்**
**இங்கமரர் தம் சிறப்புக் கண்டார்.**

என்று தமிழின் சுவையையும் கவியின் பெருமையையும் உணர்த்துவதைக் காண்கிறோம்.

பாரதியின் பெருமை, நாட்டையும் மொழியையும் தனித்தனியே சிறப்பித்துப் பாடியதில் மட்டும் அமையவில்லை. நாட்டையும் மொழியையும் ஒன்றாக இணைத்து மொழிப் பற்றையும் நாட்டுப்பற்றையும் வேறாகப் பிரிக்க முடியாது என்று கூறுவதில்தான் அவர் பெருமை புலப்படுகிறது. தமிழையும் தமிழ் நாட்டையும் ஒன்றுபடுத்திப் பாடி மொழியையும் நாட்டையும் பிரிக்க முடியாது என்ற உணர்வை ஊட்டக்

காண்கின்றோம். நாட்டுப் பாடல் என இமயத்தையும் குமரிமுனையையும் தனியே பாடிய கவிஞர் மொழிவழியால் தமிழ் நாட்டின் எல்லையையும் உடன் குறிப்பிடுவது, மொழியும் நாடும் பிரிந்தியங்கா என்பதைக் காட்டவே எனக் கூறலாம்.

**நீலத் திரைக்கடல் ஓரத்திலே - நின்று**
**நித்தம் தவஞ்செய் குமரிஎல்லை - வட**
**மாலவன் குன்றம் இவற்றிடையே - புகழ்**
**மண்டிக் கிடக்கும் தமிழ்நாடு**

எனத் தமிழோடு நாட்டையும் ஒருங்குவைத்துக் காணும் காட்சியைக் காண்கிறோம்.

**செந்தமிழ் நாடெனும் போதினிலே - இன்பத்**
**தேன்வந்து பாயுது காதினிலே**

என்று மொழியுணர்வையும் நாட்டுப் பற்றையும் ஒருங்கு ஊட்டிச் செந்தமிழ் நாடு என்ற தொடரால் சிறப்பிக்கிறார்.

நாட்டையும் மொழியையும் ஒருங்கு அமைத்துப் பாடும் இயல்பு 'பாப்பாப்' பாட்டிலும் காண்கின்றோம். பாரத நாட்டின் குழந்தை தமிழ்நாடு என்று கூறித் தமிழ் நாட்டுக்கும் பாரதநாட்டுக்கும் உள்ள தொடர்பைப் புலப்படுத்துகின்றார். பாரத நாடும் அதன் பகுதியாகிய தமிழ்நாடும் அமுதின் இனியன என்று அழகாகக் கூறுகின்றார்.

**தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற - எங்கள்**
**தாயென்று கும்பிடடி பாப்பா!**
**அமிழ்தின் இனியதடி பாப்பா - நம்**
**ஆன்றோர்கள் தேசமடி பாப்பா**

என்று கூறுகிறார். தமிழ்நாட்டைப் பெற்றதால்தான் இந்திய நாட்டுக்குப் பெருமை உண்டாகியிருக்கிறது என்பதைக் குறிப்பாக உணர்த்தக் காண்கிறோம்.

இதனை அடுத்து, மொழியின் உயர்வையும் நாட்டின் பெருமையையும் ஒரே இடத்தில் வைத்து இரண்டனுக்கும் உள்ள நெருங்கிய உறவைக் காட்டுவார் போன்று அமைத்திருக்கும் நிலை போற்றத்தக்கதாகும்.

**சொல்லில் உயர்வு தமிழ்ச்சொல்லே - அதைத்**
**தொழுது படித்திடடி பாப்பா!**
**செல்வம் நிறைந்த இந்துஸ்தானம்-அதைத்**
**தினமும் புகழ்ந்திடடி பாப்பா!**

என்று கூறி நாட்டுப் பற்றும் மொழிப் பற்றும் பிரிக்க முடியாதன என்பதைக் காட்டுகின்றார். நாடு வாழ மொழி வாழ வேண்டும் என்பதும், மொழி வாழ நாடு வாழ வேண்டும் என்பதும் பாரதியாரின் கொள்கை என்பது புலனாகின்றது.

நாட்டுவாழ்த்துப் பாடலிலும் இதே பண்பைத்தான் காண்கிறோம். செந்தமிழும் தமிழ் பேசும் மக்களும் இம் மக்கள் வாழும் நாடும் வாழ வேண்டும் என்றும் முறையாகக் கூறும் சிறப்பைக் காண்கின்றோம். மொழியையும் மக்களையும் நாட்டையும் தனித்துப் பிரித்து வாழமுடியாது என்பது அவருடைய அடிப்படைக் கொள்கையாக விளங்குகிறது. அவர் அமைக்கும் வாழ்த்துரை இதுவே யாகும்:

**வாழிய செந்தமிழ் வாழ்க நற்றமிழர்**
**வாழிய பாரத மணித்திரு நாடு**

நாட்டுணர்வையும் மொழியுணர்வையும் மட்டும் அவர் தம் பாட்டுத்திறத்தில் அமைக்கவில்லை. நாடு வாழவும் மொழி வாழவும் அவர் கூறும் வழிவகைகள் அவர் பெருமையை உயர்த்தி விடுகின்றன. நாடு வாழத் தொழில் வகைகள் சிறக்க வேண்டும் என்பது அவர் காட்டும் வழியாகும். தொழில் சிறக்க வேண்டுமானால் தொழிலுக்கு மதிப்பும் உயர்வும் கொடுக்க வேண்டும் என்பது அவர்தம் அறிவுரையாகும்.

வாழ்வில் புதுவழி கூறுவோர் ஒரு சிலர் கலையை உயர்த்திப் பேசுவர்; ஒரு சிலர் தொழிலையே உயர்த்திப் பேசுவர். பாரதியார் இரண்டையும் ஒத்த நிலையில் வைத்து அவற்றை வளர்க்க வேண்டிய அடிப்படையை உணர்த்துகிறார். காவியம் செய்வதும், காடு வளர்த்தலும், கலை வளர்த்தலும், கொல்லர் உலைக்களம் வளர்த்தலும், ஓவியம் வரைதலும், ஊசி செய்தலும் ஒத்த மதிப்புடைய தொழில்களாகக் கொள்ள வேண்டுமென்பார் இவற்றை அடுத்தடுத்து வைத்துக் கூறுகின்றார். இவ்வாறு தொழில்களில் வேறுபாடு பாராட்டாமல் உலகத்துத் தொழிலனைத்தையும் நம் நாட்டில் செய்தால்தான் நாடு விழிப்படைந்து உயர்வு அடைய முடியும் என வற்புறுத்துகின்றார்.

**காவியம் செய்வோம் நல்ல காடு வளர்ப்போம்**
**கலைவளர்ப்போம் கொல்லர் உலை வளர்ப்போம்**
**ஓவியம் செய்வோம் நல்ல ஊசிகள் செய்வோம்**
**உலகத்தொழி லனைத்தும்உவந்து செய்வோம்**

என்பது அவர்தம் அறிவுரையாகும்.

நாடு வாழத் தொழில்வளம் சிறக்க வேண்டும் என்று அறிவுறுத்தும் கவிஞர், மொழி வாழக் கலைவளம் சிறக்க வேண்டும் என்றும் வற்புறுத்துகின்றார். பிற நாட்டுக் கலைகளைத் தமிழ் மொழியில் அமைப்பதோடு இறவாத புகழுடைய புது நூல்களைத் தமிழ் மொழியில் இயற்றல் வேண்டும் என்று வற்புறுத்துகின்றார்.

**சென்றிடுவீர் எட்டுத் திக்கும்-கலைச்**
**செல்வங்கள் யாவுங் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்**

என்று அறைகூவி அறிவுறுத்துகின்றார்.

பாரதியாரின் தனிப்பெருமை, நாட்டுச் சீர்மையையும் மொழியின் உயர்வையும் எடுத்துக் காட்டி அவை சிறக்க வழிவகைகளைக் காட்டிச் சென்றமையாகும். இலக்கியத்தில் நாடும் மொழியும் பொருளாக அமைத்துக் கவிதையால் மக்கள் உள்ளத்தைத் தொட்டு உணர்வு ஊட்டிய அவர் தொண்டு மிகவும் போற்றத் தக்கதாகும்.

# 11. திரு. வி. க. வின் நடையும் சொல்லாட்சியும்

தமிழ் நடைக்குப் புத்துயிர் ஊட்டியவர் திரு. வி. க. பழந்தமிழ் இலக்கியங்களைக் கற்றவர்கள் நீண்ட வாக்கியங்களையும், செயற்கையான சொற்றொடர்களையும் செந்தமிழ் நடை என ஒருபக்கம் இழுத்துச் சென்றனர். கொச்சை நடையைப் பேச்சு நடை என மறுமலர்ச்சி எழுத்தாளர்கள் தமிழ் நடையைக் கொச்சைப் படுத்தினர். ஒரு சிலர் வட சொற்களைப் பெய்து தமிழை ஒரு கலப்பு நடையாக்கினர். தமிழ் நடை இதுதான் என்று தெளிவு படாமல் இருந்தது.

இந்த மாறுபட்ட நடைகளுக்குள்ளே உயிர்த்துடிப்புள்ள நடையை அமைத்துத் தந்தவர் திரு. வி.க. மேடைப் பேச்சை முதன் முதலில் இலக்கிய நடையில் பேசியவரே திரு. வி.க. எனலாம்.

திரு. வி. க. பெரியபுராணம், சிலப்பதிகாரம், தேவாரம், ஆழ்வார் பாடல்கள், கம்பன் கவி அமுதம் இவற்றில் தோய்ந்தவர். அதனால் அவர் சொல்வளம் நெகிழ்வு உடையதாகக் காலத்தோடு ஒட்டி இயங்குகின்றது. பனிக்கட்டிகள் உடைந்து அருவியாக இயங்கும் அருமையை இதில் காணலாம். திருக்குறள் சுருங்கச் சொல்லித் தெளிவுப்படுத்தும் நூல்; அதை ஒட்டிச் சிறு தொடர் கொண்டு

விளங்குகிறது இவர் நடை. அதன் சொல்லாட்சியும் திரு. வி. க. வைப் பெரிதும் தாக்கி உள்ளது.

மற்றும் அவர் பத்திரிகைப் பொறுப்பை ஏற்றுக் கொண்டதால் பல்லாயிரக்கணக்கான வாசகர்களை அவர் கருத்து எட்டவேண்டிய அவசியம் ஏற்பட்டு விட்டது. சிறப்பாகத் தலையங்கங்களைத் தந்து தடைவிடைகளில் கட்டுரைகளை எழுதவேண்டிய சூழ்நிலை அவருக்கு அமைந்தது. எனவே பத்திரிகைத் தமிழை உருவாக்கியதே திரு. வி. க. தான்.

கலைஞனுக்கு வேண்டிய உணர்வும், கவிஞனுக்கு வேண்டிய ஓசையும், பேச்சாளனுக்கு வேண்டிய ஒழுங்கும், அரசியல்வாதிக்கு வேண்டிய ஆவேசமும், அறிஞனுக்கு வேண்டிய தெளிவும் அவர் நடையில் கலந்து இருந்தன.

திரு. வி. க. வின் நடை தனி நடை. மற்றவர்களின் நடையினின்று முற்றிலும் வேறுபட்டது. எவ்வகையில் அது வேறுபட்டு இயங்குகிறது என்பது ஆய்வுக்கு உரியது.

அவருடைய வாக்கியங்கள் வினாக்களை எழுப்பி விடை தருவனவாக அமைந்துள்ளன. இஃது அவர் தனிச்சிறப்பு. வினாக்களை எழுப்புவதால் மற்றவர்களை அவை சிந்திக்கத் தூண்டுகின்றன. சிந்தனைகளைத் தூண்டிப் பின் அறிவு விளக்கம் தருகிறது. பசியை எழுப்பிப் பின் உணவினைத் தரும் பொழுது அது சுவைக்கிறது. உணர்வுக்கு ஊட்டமும் தருகிறது.

அவருடைய வாக்கியங்கள் முன்னிலையாரை விளித்துக் கூறும் நேர்முக வாக்கியங்களாகும். அவர் சொல்ல விரும்பும் செய்திகள் வேகமாக வெளிப்பட்டுத் தக்க சொற்களைத் தேடி ஆற்றொழுக்காக வெளிப்படுகின்றன. எழுத வேண்டும் என்ற ீயம் அவருக்கு இல்லை; பேச வேண்டும் என்ற ஆர்வமே எழுத்தில் தலையோங்கி நிற்கிறது. சுற்றிவளைத்துப் பேசும் படர்க்கை வாக்கியங்களை அவரிடம் காணமுடியாது.

**'என்று கருதப்படுகிறது' 'என்ற முடிவு செய்யலாம்'** என முடிக்கும் பற்றற்ற தன்னுணர்வு கலவாத புறநிலை வாக்கியங்களைக் காணமுடியாது. தெளிவாக அறுதியிட்டுக் கூறும் வாக்கியங்களே அவர் வாக்கியங்களாகும்.

**'வேண்டும் வேண்டாம்' 'கூடும் கூடாது'** என்று அறுதியிட்டுக் கூறும் வாக்கியங்கள் அவரிடம் மிகுதியாகக் காணப் படுகின்றன.

**''துப்பாக்கி பீரங்கி வேண்டுமா?''**

**''வேண்டாம் வேண்டாம்''.**

**''பழந்தமிழ் நாட்டைப் புதுமுறையில் காண்டல் வேண்டும்''**

**''தொண்டர் கூட்டங்கள் அமைக்கப்படல் வேண்டும். தேவையானவற்றை நல்கல் வேண்டும்''.**

வேண்டுகோள் வாக்கியங்கள் மிகுதியாக உள்ளன. **''நடுக்கமின்றிக் கிராமங்களுக்கும் புறப்படுவார்களாக''.**

அடுக்குத் தொடர்கள் அவர் வாக்கியத்தின் தனிச் சிறப்பாகும்.

**''அவர்கள் வயிற்றில் வீரப்பிள்ளைகள் பிறந்தார்கள் - இந்நாளிலோ வெட்கம்; வெட்கம்''.**

**''உண்மைத் தமிழ் நாட்டைக் காண எழுங்கள் எழுங்கள்''**

**''வேலையில்லை என்று எவரும் கருதல் வேண்டு வதில்லை; வேலை உண்டு; உண்டு''.** வியப்புச் சொற்கள் இடையில் இடம் பெறுகின்றன. **''நீண்டநாள் வாழ்விற்கு அல்லவை செய்யா அரசு வேண்டற் பாலது என்பதற்கு**

**விரிவுரை வேண்டுங்கொல்! அங்கத்தினரைச் சேர்க்கும் தொண்டில் உடனே தலைப்படுங்கள் தலைப்படுங்கள்''**

வினாவாக்கியங்கள் எழுத்தின் தொடக்கத்தின் அமைப்பாக நிற்கின்றன.

**''இத்துணைச் சிறப்பு வாய்ந்த நமது தமிழ் நாடெங்கே? தமிழ்நாட்டின் வழக்க ஒழுக்கமெங்கே? அன்பு எங்கே? அரசு எங்கே? வீரத்தாய்மார் எங்கே? தமிழ்த்தாய் எங்கே? தமிழர்களே! உங்கள் பெருமை என்ன? உங்கள் ஆண்மை என்ன? உங்களுக்குள் எத்துணைப் பிளவு! எத்துணைப் பிரிவு''.**

வினாவாக்கியங்களுக்கு இடைஇடையே வியப்பு வாக்கியங்கள் சேர்ப்பது அவர் இயல்பாக உள்ளது.

சொற்களை மாற்றுதல் அவரிடம் காணப்படும் ஓர் உத்தியாகும்.

சொற்களை மாற்றிச் சொல்வது கவிஞர்களுக்கு உரிய இயல்பு. தக்க சொல்லைத் தந்து மாற்றம் விளைவிப்பது அவ்வர் தனிப்போக்காகும். அஃது இவரிடமும் காணப்படும்.

**''திங்களில் அழகு ஒழுகுகிறது; பூக்களில் அழகு பொலிகிறது; பறவைகளின் அழகை என்னவென்று பன்னுவது! மகளிரோ அழகு மயமாகத் திகழ்கிறார்; குழவிகளோ அழகின் பிழம்பாக இலங்குகின்றன''**

**''குழந்தை ஓட்டையும் பொன்னையும் ஒன்றாகவே நோக்கும்; பாம்பையும் கயிற்றையும் பொதுவாகவே பார்க்கும் சேற்றையும் சோற்றையும் சமமாகவே காணும்''**. நோக்கும், பார்க்கும், காணும் எனத் தனித்தனிச் சொற்களை அமைத்தல் காண்க. பின்னிப் பிணையும் வாக்கியங்கள் அவர் எண்ணத் தெளிவையும் கட்டுரைத் தன்மையையும் காட்டுகின்றன.

கருத்துக்கள் ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணியும் வகையில் சங்கிலிபோல் இயங்குகின்றன.

**"இப்பொழுது நாட்டுக்கு எது தேவை? அஞ்சாமை தேவை; அஞ்சாமையால் உண்மை அரும்பும்; உண்மையால் உணர்வு பிறக்கும்; உணர்வால் சுய ஆட்சி கிடைக்கும்; சுய ஆட்சியால் உலக இன்பம் நுகரலாம்; உலக இன்பத்தால் பேரின்பம் பெறலாம். ஆதலால் வரம்பிலா இன்பத்துக்கு அடிப்படை அஞ்சாமை என்பதை ஈண்டு ஒரு முறைக்குப் பன்முறை வற்புறுத்துகிறோம்."** - இதில் அந்தாதித் தொடை முறையைக் காண முடிகிறது.

மீண்டும் மீண்டும் கூறல் உணர்வை மிகுதிப்படுத்துகிறது. அடுக்குத் தொடர்கள் அமைப்பது ஒரு புறம் இருக்க அதனையே வேறு தொடர்களில் கூறித் திரும்பக் கூறல் என்னும் உத்தியை அமைக்கக் காண்கிறோம்.

**"எங்கணும் போர்! எங்கணும் பூசல்! எங்கணும் பிணக்கு! தமிழ்த்தாய் எரிகிறாள்; கரிகிறாள்; சாதிப் பூசலை நிறுத்துங்கள்! சமயச் சண்டையை நிறுத்துங்கள்"**. இதில் மீண்டும் கூறல் அமைகின்ற சொல்லாட்சிகள் காண்க.

அவருக்கே உரிய சொல்லாட்சிகள் அடுக்கிக் கூறுதல், வியப்பிடைச் சொற்கள் பயன்படுத்தல் என்பதை அறிகிறோம். அதுமட்டும் அன்று. அவருக்கே உரிய சொல்லமைப்புகளும் உள்ளன.

வினைமுற்றுகள் பெரும்பாலும் 'செய்யும்' என்னும் வாய்பாட்டில் முடிகின்றன.

**'கூறுப உண்ப'** எனச் 'செய்பு' என்னும் வினைமுடிபுகளைச் சில இடங்களில் கையாள்கிறார்.

வினையெச்சங்களுக்கு மாறாகத் தொழிற் பெயர்களை அமைத்தல் அவர் தனி இயல்பு.

மகிழ வேண்டும் என்று கூறுவதை விட்டு; **மகிழ்தல் வேண்டும்** என்பர். நாடவேண்டும் என்று கூறுவதைவிட்டு **நாடல் வேண்டும்** என்றுதான் கூறுவர்.

**'சேர்க்கை வாழ்க்கை நடாத்துவோரும் ஆகின்றனர்'.** - நெடில் வடிவங்களில் இனிமை உண்டாக்குகிறார்.

**''அஃறிணை உயிர்கள் இயற்கை வழி வாழ்வை நடாத்துகின்றன.''** இங்கே நடத்துதற்கு என்பதற்கு மாறாக நடாத்துதல் என்ற நெடிய வடிவத்தைப் பயன்படுத்துகின்றார். 'நிழல்' என்பதற்கு மாறாக **நீழல்** என்பதைப் பயன்படுத்துகின்றார்.

ஓசை இனிமைக்கு உயிரளபெடை வடிவங்களையும் அவர் பயன்படுத்துவதைக் காண்கின்றோம். 'என்னை' என்கின்ற வினாச்சொல்லை மிகுதியாக வழங்குதலைக் காண்கின்றோம்.

'என்ன' என்பதைப் பன்மைக்கும், 'என்னை' என்பதை ஒருமைக்கும் அவர் பயன்படுத்துவதை நாம் காண்கின்றோம். வியப்பை உணர்த்தும் வகையில் 'என்னே' 'என்னே' என்ற தொடர்களை வழங்குகின்றார்.

**''சோழ நாட்டின் வளம் என்னே! என்னே!''**

வினா என்பதோடு கடா என்ற சொல்லை வழங்குகிறார். 'எற்றுக்கு' என்பதும் அவர் தனி வழக்காகும்.

**''காணமுயல்வது எற்றுக்கு**
**என்னும் கடா எழுகிறது''** -

இதற்கு எடுத்துக்காட்டாகும்.

**உள்ளது சிறத்தல், இயற்கையோடியைந்த இன்ப அன்பு வாழ்க்கை** முதலியன அவர் அமைக்கும் தனித் தொடர்களாகும்.

**'விரிவுரை வேண்டுங்கொல்'**

கொல் என்பது வியப்பிடைச் சொல்லாக வந்துள்ளது. வியப்புச் சொல் இடைஇடையே வருவது இயற்கையாகிறது.

ஆக்கச் சொல் போட்டு வாக்கியங்கள் முடிப்பது என்ற நியதிக்கு அவர் கட்டுப்படவில்லை. **'அதுவே நமது தலையாய கடமை'** என்று முடிப்பாரேயன்றி, 'கடமையாகும்' என்று பொதுவாக முடிப்பதில்லை.

**'அதுவே ஒத்துழையாமை'** என்று முடிப்பாரேயன்றி 'ஒத்துழையாமை ஆகும்' என்று முடிப்பதில்லை. வியங்கோள் வினைமுடிபுகள் மிகுதியாக இடம் பெறுகின்றன.

**'ஊக்கம் கொள்ளுவோமாக'**
**'அடங்கியிருத்தல் காண்க'**

தற்கிளத்தல் வாக்கியங்கள் மிகுதியாக உள்ளன.

**'கேட்டுக் கொள்கிறேன்'.**
**'முயலுமாறு வேண்டுகிறேன்'**
**'சிலவற்றைக் குறிப்பிடுகிறேன்'**
**'ஆண்டவனை வழுத்துகிறேன்'**
**'நான் கூறுவேன்'**

இவையெல்லாம் தற்கிளப்பு வாக்கியங்களாகக் கொள்ளலாம்.

முன்னிலை அறிவுரை வாக்கிய முடிபுகளை மிகுதியாகக் காணலாம்.

**'தணிக்க முந்துங்கள்'**
**'காட்ட முந்துங்கள்'**

வினையெச்சங்களை அடுக்கிக் கூறுதல் அவர் தனிச் சிறப்பாகும்.

**'மக்கள் இரத்தத்தில் ஊறி ஊறி ஒன்றியது'**

கூட்டு அமைப்புகள் அவர் தனிச் சிறப்பாகும். 'கருதினர் எழுதினர், புரிந்தது' என்பதற்கு மாறாக.

**'கருதலாயினர், எழுதலாயினர், புரியலாயிற்று'** என்று தொழிற்பெயரோடு ஆக்கச் சொல் பிணைந்த கூட்டுவினை அமைப்பாக அமைத்தல் காண்கிறோம். சிறப்பாகத் தொழிற் பெயர்களை ஆளுதல் அவரிடம் மிகுதி எனலாம்.

'சென்றனர்' என்பதற்கு மாறாகப் **'போந்தனர்'** என்ற சொல் வழக்கை ஆளுவதையும் பார்க்கின்றோம்.

எதிர்மறை வாக்கியங்களால் உடன்பாட்டுப் பொருளை அறிவிப்பது அவர் சொல்லாட்சித் திறனாகும்.

**''துறவு பேசாமல் போகவில்லை என்று குறிப்பிடுகின்ற திருவள்ளுவர், துறவு பேசவில்லையோ என ஐயுதல் கூடும். அவர் துறவு, பேசாமல் போகவில்லை''** என்று எதிர்மறையில் முடிக்கின்றார்.

## கவிதை நடை

உரைநடையில் உணர்வு கலந்து அது கவிதை நடை ஆகிறது. அவர் கவிதைகள் பக்தி மனப்போக்கிலும், தத்துவ விசாரணைகளிலும் அவர் இறுதிக் காலத்தில் அமைந்து விட்டன. அவை பிறருக்கு என்று எடுத்துக் கூறப்பட்ட செய்திகள் அல்ல; தனக்கும் தன் மனத்துக்கும் எழுப்பிக் கொள்ளும்

வினாக்களாகவும், விசாரணைகளாகவும், வேண்டுகோளாகவும் அமைந்து விட்டதால், உரை நடையைப் போல எழுச்சி மிக்கனவாக அமையவில்லை. அவற்றைக் கவிதைகள் என்று சொல்லுவதைவிடச் சிந்தனைக் குவியல்கள் என்று கூறலாம்.

திரு. வி. க. நடை தமிழ்நடைக்குக் கலங்கரை விளக்கமாக ஒளிதந்து பழமையைப் புதுமையோடு பிணைக்கிறது.

☆ ☆ ☆